# கோகுலம்

GOKULAM

டிசம்பர் '92 ரூ. 3.00



# FUN TIME COMPANIONS

*Kick away the blues and the books. Go–get some fun! Bouncing colours, springing soles.* **action shoes for happier fun times.**



PERFUME



ACTION MATE





SPACE

action® SHOES

You get the same shoes, we export !

# கோகுலம்

*1992 டிசம்பர் மாத இதழ்*
*மலர் : 10 இதழ் : 11*








## அருமைச் சிறுவர் சிறுமியரே,

உங்கள் அனைவருக்கும் அன்பு வணக்கம். தீபாவளி வாழ்த்துகளைக் கட்டுக் கட்டாக அனுப்பித் திகைக்க வைத்துள்ள அன்பு உள்ளங்களுக்கு என் மனமார்ந்த நன்றி.

எவ்வளவு முறை எழுதியும் இன்னும் பல தம்பி தங்கைகள் தங்கள் படைப்புகளை அனுப்பும் போது சரியான முகவரியைத் தருவதே இல்லை. இதனால் பல நல்ல கதைகள், பாடல்களை வெளியிட முடியாது போகிறது. கதை, பாடல்களை எழுதுவோர் இதிலும் கவனமாக இருங்கள்.

பெயரும் புகழும் பெற வேண்டும் என்ற ஆசையைத் தவறு என்று சொல்ல முடியாது. ஆனால் அதற்காக மற்றவர்கள் உழைப்பைத் தங்க ளுடைய உழைப்பு என்று கூறி உயர முயலலாமா? இது எவ்வளவு பெரிய பாவம்! இது வெளியே தெரிய வந்தால் எத்தனை தலைகுனிவு! இத்தகைய ஒரு செயல் போன இதழில் நடந்துள்ளது. ஏற்கெனவே யாரோ ஒருவர் எழுதி வெளிவந்த அழகான பாடலை, ஒரு தம்பி எழுதியனுப்ப, அதுவும் வெளியாகிவிட்டது. கோகுலம் ஆசிரியருக்கு எப்படித் தெரியப் போகிறது. அவர் என்ன எல்லாவற்றையுமா பார்த்துக் கொண்டிருப்பார் என்று அந்தத் தம்பி தப்புக் கணக்குப் போட்டுவிட்டான் போலிருக்கிறது. ஆசிரியரை ஏமாற்றலாம். ஆனால் பல்லாயிரக்கணக்கான கோகுலம் வாசகர்களை ஏமாற்ற இயலுமா? இனியாவது அந்தத் தம்பி திருந்தட்டும். இதை எடுத்துக்காட்டி நூற்றுக்கணக்கில் கடிதங்கள் எழுதியுள்ள அனைவருக்கும் நன்றி.

இந்த டிசம்பர் மாதத்தில்தான் ராஜாஜி அவர்களின் பிறந்தநாள் வரு கிறது. பண்பாடும், ஒழுக்கமும், எளிமையும், நேர்மையுமே ஒரு நாட்டை வலுவுள்ளதாக்கக் கூடியவை என்று வாழ்ந்து காட்டிய இந்த மாமேதை குழந்தைகளுக்காகவும் கதைகள் எழுதினார் என்பது எத்தனை வியப்பான உண்மை! 'போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து' என்பதை வலியுறுத்திக் கூறும் இவரது சிறுகதை ஒன்று இந்த இதழில் வெளியாகிறது. கிருஸ்துமஸ் குறித்த சில சிறப்புப் பகுதிகளும் வெளியாகின்றன. 'எங்கள் ஊரில் நடந்தது' பகுதிக்கு ஏராளமானவர்கள் எழுதியனுப்பியுள்ளார்கள். தகுதியானவை கண்டிப்பாக வெளியாகும். கிருஸ்துமஸ் கொண்டாடும் வாசகர்கள் அனைவருக்கும் மனமார்ந்த கிருஸ்துமஸ் வாழ்த்துக்கள்.

அன்புடன்,

(கௌரவ ஆசிரியர்)



உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும் - பாரதியார்.

# கோகுலம் 1992 டிசம்பர்
# இந்த இதழில்...



யோசித்துச் சொல்கிறேன்
பக்கம் 39



சூரன் அதிசூரன் பக்கம் 45


- ★ அருமைச் சிறுவர் சிறுமியரே 1
- ★ இந்த இதழில் 2
- ★ பல் கூறிய பதில் 4
- ★ பிருந்தாவனக் கதையரங்கம் 6
- ★ பெயர்கள் 9
- ★ பிறந்த ஊர் – போட்டி முடிவு 10
- ★ கண்ணாடிப் பையன் 11
- ★ நடந்த தவறு என்ன? – போட்டி 12
- ★ கண் சிமிட்டும் விண் மீன்களே! 13
- ★ எல்லாம் தெரிந்த ஏகாம்பரி 14
- ★ கிருஸ்துமஸ் தாத்தாவிடம் என்ன கேட்பாய்? – போட்டி 17

★ எங்கள் ஊரில் நடந்தது 22

★ காசோலையை விற்கச் சொன்னவர் 25

★ வழிகாட்டி (சிறுகதை) 29

★ பிருந்தாவனக் கவியரங்கம் 34

★ மௌனச் சிரிப்பு 38


★ யோசித்துச் சொல்கிறேன்! 39

★ வேவு பார்க்கும் உயிரினங்கள் 42

★ சூரன் அதிசூரன் (வண்ணப் படக்கதை) 45

★ கனவு படைத்த சாதனைகள்! 58

★ நூறு ரூபாய் இரகசியம் 59

அம்மாவை அறியுமா ஆக்டோபஸ்?
பக்கம் 73

விலங்குகள் கணக்குப் போடுமா?
பக்கம் 94




★ பிராணிகளின் குளிர்கால உறக்கம் 66

★ பிருந்தாவனம் 69

★ அம்மாவை அறியுமா ஆக்டோபஸ்? 73

★ கேளுங்கள் சொல்லப்படும் 78

★ தோட்டைக் காணோம்! 81

★ பணப்பை 85

★ பணிவதற்கு வாருங்கள்! 87


★ உங்கள் நூலகம் 88

★ ஊனம் ஒரு தடையா? 89

★ சபாஷ் சித் சேட்டை 90

★ விலங்குகள் கணக்குப் போடுமா? 94

★ சார் தபால்! 96



பல் கூறியது : ''எங்களுக்கு நீ ஒரே ஒரு உபகாரம் மட்டும் செய்தால் போதும். நாங்கள் முப்பத்திரண்டு பேர் என்று கூறினாய். ஆனால் உன் ஒருவனுக்கு முன் நாங்கள் அனைவரும் துச்சம். நீ ஏதாவது தவறாகப் பேசிவிட்டால் மனிதர்கள் உன்னை ஒன்றும் சொல்வதில்லை. நாக்கை வெட்டுவேன் என்று உன்னை பயப்படுத்துவது இல்லை. பல்லைத் தட்டி விடுவேன் என்று எங்களைத்தான் சொல்கிறார்கள். அதனால் எங்களுக்கு எந்தத் துன்பமும் வராதபடி நீ நல்லதையே பேசினால் போதும். அதுவே நீ எங்களுக்குச் செய்யும் மிகப் பெரிய உபகாரம், பாதுகாப்பு!''

– சிவரஞ்சன், ஆற்காடு.

# பல் கூறிய பதில்

**ப**ல் வரிசையிடம் நாக்கு பணிவுடன் கூறியது :

''நீ எனக்கு உன் சகாக்களுடன் எவ்வளவோ நன்மைகள் செய்கிறாய். நல்ல நல்ல வகைகளை நன்கு மென்று அரைத்து, எனக்குச் சுவையாக இருக்கும்படி தருகிறாய். நானோ ஒற்றை யாள். ஆனால் நீங்களோ முப்பத்திரண்டு பேர். இருந்தாலும் உங்களால் எனக்கு எந்தவிதத் துன்பமோ, தொல்லையோ இல்லை. உங்களுக்குள் நான் இருந்தாலும் நீங்கள் என்னைக் கடிப்பதோ நசுக்குவதோ இல்லை. அதுவே நீங்கள் எனக்குச் செய்யும் பெருந்தன்மை. இவ்வாறு நீங்கள் அனைவரும் ஒற்றுமையாக இருந்து எனக்கு உபகாரம் செய்து என்னைப் பாது காப்பதற்குப் பிரதிபலனாக, நான் உங்களுக்கு ஏதாவது செய்ய ஆசைப் படுகிறேன். என்ன செய்ய வேண்டும் கேளுங்கள்?''

## நெல் எப்படிச் செரிக்கும்?

பறவைகள் முழு நெல்லை அப்படியே விழுங்குகின்றன. அந்த நெல் வயிற்றுக்குள் எப்படிச் செரிமானம் ஆகிறது தெரியுமா? தங்கள் உணவுடன் சில கற்களையும் சேர்த்து விழுங்குகின்றன; கற்கள்தான் வயிற்றில் பற்களைப் போலப் பயன்பட்டு உணவை மாவாக அரைக்கும்!

– ஆர். சிவகுமார்,
நல்லாலம்.



# காம்ப்ளான் 1 கிலோ ஜம்போ ஜார் இப்போது உங்கள் ஊரிலே!




**அத்துடன் வருகின்றனர் காம்ப்ளான் கமாண்டோஸ்**

நீங்கள் மிகவும் விரும்பும் காம்ப்ளான் இப்போது உபயோகம் மிகுந்த, அழகிய 1 கிலோ ஜம்போ-ஜாரிலே வருகிறது. இதில் பருப்பு, சர்க்கரை, ஊறுகாய், பிஸ்கட், எதை வேண்டுமானாலும் நிரப்பி வைக்கலாம்.

அதுமட்டுமா? ஒவ்வொரு 1 கிலோ ஜம்போ-ஜாருடனும் கவர்ச்சியான ஒரு காம்ப்ளான் கமாண்டோ இலவசம்!

உபயோகம் மிகுந்த இந்த ஜம்போ-ஜார்களையும், காம்ப்ளான் கமாண்டோஸ் பொம்மைகளையும் சேகரிக்கத் துவங்குவீர், உடனடியாக!

## இலவசம்!

ஒரு காம்ப்ளான் கமாண்டோ (பொம்மை) 1 கிலோ சாக்லேட் காம்ப்ளான் ஜாருடன்

**காம்ப்ளான்®**
திட்டமிட்ட பரிபூரண உணவு

23
சத்துணவுகள்
திட்டமிட்ட
விகிதங்களில்

தற்போது தேர்ந்தெடுத்த மார்க்கெட்டுகளில் கிடைக்கிறது.

GX/95/203 TAM



# பிருந்தாவனக் கதையரங்கம்

## தாடியும் முடியும்!

**த**லைப்பாகை கட்டும் (சர்தாஜி) ஒருவர் இருந்தார். இவருடைய தலை முடியும் தாடியும் நரைத்திருந்தது. எனவே டை (சாயம்) அடிப்பார். தலை முடி வெளியே தெரிவதில்லை என்று தாடிக்கு மட்டும் டை அடித்து இளமைத் தோற்றத்துடன் இருப்பார்.



ஒருநாள் சர்தார்ஜி தனது நண்பரின் வீட்டிற்கு விருந்திற்கு போனார். கீழே விழுந்த பேனாவை எடுக்கக் குனிய, தலைப்பாகை கழன்று அவிழ்ந்து தனியே விழுந்து விட்டது!

தலையெல்லாம் நரைத்திருக்க தாடி மட்டும் கறுப்பாக இருந்த தோற்றம் திகைப்பாக இருந்தது! உடனே நண்பர் கேலியாக... ''என்னய்யா? தலைமுடி மட்டும் நரைத்திருக்கிறது! தாடி துளிக் கூட நரைக்கலையே...'' என்று கேட்டார்.

உடனே சர்தார்ஜி சாமர்த்திய மாக, ''தலைமுடிக்கு வயது அதிகம். நான் பிறந்ததிலிருந்தே இருக்கிறது. ஆனால் தாடி இருபது வருடம் கழித்துத்தானே வந்தது? அதனால்தான் தாடி கறுத்திருக்கிறது. முடி நரைத்திருக்கிறது'' என்றார்!

தாடியை விட தலைமுடிக்கே வயது அதிகம்.. ஒப்புக் கொள்ள வேண்டிய பதில்தானே?

- ஜெயஸ்ரீராஜ்குமார்.


INDIA'S LARGEST SELLING COMICS
DIAMOND COMICS
PRAN'S
CHACHA CHAUDHARY AND GAAZA
Sticker Free
FAULADI SINGH & Tumult in the Sea
DIAMOND COMICS DIGEST
MANDRAKE-9
Car Poster Free
LAMBU MOTU & The Ghost of Owl
TAUJI & The Spell of Death
DIAMOND COMICS PVT. LTD. 2715, DARYA GANJ, NEW DELHI-110002

## புத்திசாலிக் குழந்தை!

ஓர் ஊரில் ஓர் அம்மா இருந்தாள். அவள் தன் குழந்தையின் புத்திசாலித் தனத்தை எடை போட விரும்பினாள். தான் கையில் கொண்டு வந்த மாம் பழத்தைக் குழந்தையிடம் கொடுத்து, ''குழந்தாய்! பழத்தை நாம் இருவரும் சாப்பிட வேண்டும். இதை நீ, பங்கிட்டுக் கொடு. பாதிப் பழம் எனக்கு நீ கொடுத்தால் உன் அன்பைக் காட்டும். அதற்கு மேலும் கொடுத்தால் உன் தியாக மனத்தைக் காட்டும். எப்படி



வேண்டுமோ அப்படிச் செய்!'' என்றாள்.

அந்த புத்திசாலிக் குழந்தை சிறிது நேரம் யோசித்தது. பிறகு தன் அம்மாவிடமே மாம்பழத்தைக் கொடுத்து, ''இந்தக் காரியத்தை என்னை விட சிறப்பாகச் செய்யக் கூடியவர் நீங்களே! பழத்தை நீங்களே பங்கிட்டுக் கொடுங்கள்'' என்று பணிவாகக் கூறி பழத்தைக் கொடுத்து விட்டது.

தான் பங்கிட்டுக் கொடுப்பதை விட அம்மா பங்கிட்டுக் கொடுத்தால், அம்மா அதிகமாகத்தான் கொடுப்பாள் என்பதை உறுதியாக அறிந்திருந்தது அந்தப் புத்திசாலிக் குழந்தை.

- என். உஷாராணி, புதுக்கோட்டை.

## புது வீடு!

ஒருநாள் முல்லா மனைவியுடன் வெளியூருக்குப் போயிருந்த நேரம். அவரது வீட்டில் திருட்டு நடந்து விட்டது. முல்லா ஊரில் இருந்து வந்ததும் வீட்டில் உள்ள எல்லாப் பொருளுமே திருட்டுப் போய் விட்டதை அறிந்தார். திருடியவன் யார் என்பதையும் விசாரித்துத் தெரிந்து கொண்டார். நேராக அந்தத் திருடனின் வீட்டுக்குப் போய் துண்டை விரித்துப் படுத்து விட்டார்.

திருடன் வந்தான். முல்லாவிடம், ''முல்லா, என்ன நீங்கள் என் வீட்டில் படுத்திருக்கிறீர்கள்?'' என்று கேட்டான்.

முல்லா, அவனிடம் அமைதியாக, ''இதுதான் நான் குடியிருக்கும் புது வீடு'' என்றார்.

திருடன் ஆத்திரத்தில் ''என்ன உளறுகிறாய் முல்லா!'' என்று கத்தினான்.

''என் வீட்டுப் பொருட்கள் எல்லாவற்றையும் இங்கே கொண்டு வந்து விட்டாய். என் வீட்டுப் பொருட்கள் எங்கே இருக்கிறதோ அதுதானே என் வீடு. என் பொருட்களைக் கொண்டு சேர்த்த உனக்கு எவ்வளவு கூலி வேண்டும்?'' என்று கேட்டார் முல்லா.

திருடன் திகைத்தான். தனது திருட்டை முல்லா நாசுக்காக உணர்த்தியதைக் கண்டு வெட்கப்பட்டான். மறு பேச்சுப் பேசாமல் பொருட்களை அவர் வீட்டிலேயே கொண்டு போய் வைத்து விட்டான்.

-ஆர். மகாதேவன், திருநெல்வேலி - 6.





## கண்ணாடிப் பையன்!

என் தம்பி சுந்தருக்கு நான்கு வயது. அப்பொழுதுதான் பள்ளியில் சேர்த்திருந்தோம். பள்ளிக்குப் போக முரண்டு பிடிப்பான்.

போனவாரம் ஒரு நாள், சுவரில் மாட்டியிருந்த பெரிய கண்ணாடியை எடுத்துத் தரும்படி பிடிவாதம் செய்தான். கண்ணாடியில் அவன் உருவம் தெரிந்தது. பார்த்துக் கொண்டிருந்தான்.

''கண்ணாடிப் பையன் எத்தனை சமர்த்தாக இருக்கான் பார்'' என்றேன் நான்.

''இன்றைக்குப் பள்ளிக்கூடம் உண்டா?'' என்று கேட்டான் தம்பி.

''உண்டு, நீ போகணும்'' என்றேன் நான்.

''இந்த சமர்த்து கண்ணாடிப் பையனையும் பள்ளிக்கூடம் வரச் சொல். நான் அவனோட போறேன்!'' என்றான் தம்பி.

நான் திகைத்து நின்றேன் சிரிப்புக் பொங்க!

- - - எஸ். சிவகாமி, கண்டனூர்.

# பிறந்த ஊர் இங்கே - பிறந்தவர்கள் யார்?

## - போட்டி முடிவு

இந்தப் போட்டி சற்று எளி தானது அல்ல என்பதைத் தெரிந்தே தான் கொடுத்தோம். உலக அறி ஞர்கள், தலைவர்களின் பிறந்த ஊர்களும் தெரிந்திருக்க வேண்டு மல்லவா? எதிர்பார்த்தபடியே முன் னூறுக்கு மேற்பட்டவர்கள்தான் இதில் கலந்து கொண்டிருக் கிறார்கள். அவர்களிலும் கூட ஒரு வர் கூட சரியான விடையை எழுத வில்லை! எல்லோருமே பல தவறு கள் செய்திருந்தார்கள்! சரி, குறைந்த அளவு தவறுகள் செய்திருப்பது யார் என்று பார்த்ததில் ஒருவர் மட்டுமே கிடைத்தார். அவர் கூட நான்கு தவறுகள் செய்திருந்தார்! அவர் மட்டுமே ஆறுதல் பரிசு பெறுகிறார்.

ஆறுதல் பரிசாக ரூ 50/- பெறு பவர்: எம். சோமசுந்தரம், அன்ன சாகரம் போஸ்ட்.

சரியான விடை :

1. பைசா - கலிலியோ
2. உலம் (ஜெர்மெனி) - ஐன்ஸ்டின்
3. மாங்குடி - சி. வி. ராமன்
4. ஈஸ்ட்பார்ன் (இங்லொந்து) - ஹாப்கின்ஸ்
5. போர்பந்தர் - காந்தியடிகள்
6. கணியூர் (சங்ககாலம்) - கணியூர் பூங்குன்றனார்
7. பாஸ்டன் (அமெரிக்கா) - பெஞ்சமின் ஃப்ராங்ளின்
8. ரோவின்ஸ் கிரிக் (அமெரிக்கா) - ஆப்ரஹாம்லிங்கன்
9. அலகாபாத் - நேரு
10. யாஸ்னாயா பால்யானா (ரஷ்யா) - டால்ஸ்டாய்
11. டேட்டன் (அமெரிக்கா) - ரைட் சகோதரர்கள்
12. திருவழுந்தூர் - கம்பர்
13. ராமி கோயில் தல் வண்டி - குருஞானக்
14. ஒட்டப்பிடாரம் - வ. உ. சிதம்பரனார்
15. அமர்கோட் - அக்பர்
16. திருவையாறு - தியாகராஜர்
17. கபிலவஸ்து - புத்தர்
18. ஸ்ரீவில்லிபுத்தூர் - ஆண்டாள்
19. எடின்பரோ (ஸ்காட்லாண்ட்) - கிரகாம்பெல்
20. மருதூர் - இராமலிங்க அடிகள்
21. தொரப்பள்ளி - இராஜாஜி
22. எட்டையபுரம் - பாரதியார்

ஆறுதல் பரிசு பெற்றவருக்கு வாழ்த்துகள். கலந்து கொண்ட வாச கர்களுக்கு நன்றி!

**மார்கழிக் கோலம் மயக்குது!**
**மஞ்சள் பூக்களும் சிரிக்குது!**

வண்ணப்படம் : யோகா
அட்டையில் : அபிலாஷா

---

# பெயர்கள்




25 வது ஆண்டை வெள்ளி விழாவாகவும், 50 வது ஆண்டைப் பொன் விழாவாகவும் கூறுகிறோம் அல்லவா? அதைப் போல் ஒவ்வொரு ஆண்டு விழாவிற்கும் தனித் தனிப் பெயர்கள் உள்ளன. அவை இதோ :

| | |
|---|---|
| முதல் ஆண்டு | - காகிதம் |
| இரண்டு | - பருத்தி |
| மூன்று | - தோல் |
| நான்கு | - புத்தகம் |
| ஐந்து | - இரும்பு |
| ஆறு | - மரம் |
| ஏழு | - வெண்கலம் |
| எட்டு | - மண்பானை |
| பத்து | - தகரம் |
| பதினொன்று | - எஃகு |
| பன்னிரண்டு | - பட்டு |
| பதிமூன்று | - சரிகை |
| பதினான்கு | - தந்தம் |
| பதினைந்து | - பளிங்கு |
| இருபது | - பீங்கான் |
| இருபத்தைந்து | - வெள்ளி |
| முப்பது | - முத்து |
| முப்பத்தைந்து | - பவழம் |
| நாற்பது | - கெம்பு |
| நாற்பத்தைந்து | - நீலக்கல் |
| ஐம்பது | - பொன் |
| அறுபது | - வைரம் |
| எழுபத்தைந்து | - பிளாட்டினம் |


- சிவரஞ்சன், ஆற்காடு.



1




2




3



4



5



6

## நடந்த தவறு என்ன?
## - போட்டி

இங்கே உங்களுக்குப் பழக்கமான ஆறு விலங்குகள் இருக்கின்றன. பொதுவான ஒரு தவறு எல்லாவற்றிலும் செய்யப்பட்டுள்ளது. அவை என்ன என்பதைக் கண்டுபிடித்து, கூப்பனையும் பூர்த்தி செய்து ஆசிரியர், கோகுலம், 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடு தாங்கல், சென்னை - 600 097 என்ற முகவரிக்கு அனுப்புங்கள். பரிசு கண்டிப்பாக உண்டு. ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

**நடந்த தவறு என்ன?**
**- போட்டி**

பெயர் :..........................................

வயது :..........................................

முகவரி :..........................................

..........................................

..........................................

..........................................

பின்கோடு :..........................................

முடிவு தேதி 15.12.1992



# கண்சிமிட்டும் நட்சத்திரங்களே!

இந்திரா காந்தியும் தன் தந்தை நேருஜியைப் போலவே கவிதைப் பிரியர். அவருக்கு மிகவும் விருப்பமான பாடல்கள் எவை தெரியுமா? பெரியவர்களுக்காக எழுதப்பட்டவை அல்ல. குழந்தைகளுக் கான பாடல்கள்தான். அவைகளை இந்திரா மிகவும் விரும்பிப் படிக்கவும் கேட்கவும் செய்வார். இந்திராவே ஓர் குழந்தைப் பாடலை எழுதியுள்ளார். இவரே எழுதிய இந்த ஒரே ஓர் குழந்தைப் பாடலை அமெரிக்கப் புத்தக நிறுவனம் ஒன்று தான் வெளியிட்டுள்ள கவிதைத் தொகுப்பில் சேர்த்துள்ளது. கண் சிமிட்டும் நட்சத்தி ரங்களை குழந்தையின் கண்களுக்கு ஒப்பிட்டு தாய் ஒருத்தி குழந்தைக்கு உண வூட்டிக் கொண்டே பாடும் பாட்டாக எளிய இனிய நடையில் இந்திரா காந்தி இதை எழுதியுள்ளார். இப் பாடலை அமெரிக்கா வில் நர்சரி பள்ளியில் படிக்கும் குழந் தைகள் பாடி மகிழ்கின்றனர்!

– ரமா ராமநாதன்




**எ**ழிலரசியைத் தெரியுமா உங்களுக்கு? அவளுக்கு, தான்தான் எல்லாம் தெரிந்த ஏகாம்பரி என்று நினைப்பு! தனக்குத் தெரியாத விஷயமே உலகத்தில் இல்லை என்பது போல ஒரு கித்தாய்ப்பு!

அன்று காலை அவள் பிரியாவின் வீட்டிற்கு வந்தாள். வந்ததும் வராததுமாக, ''ஏண்டி இவளே, 'கெட்டவன் கேட்டவன்' - இரண்டிற்கும் என்னடி வித்தியாசம்?'' என்று கேட்டாள்.

இப்படி ஏடாகூடமாக எதையாவது கேட்டு எதிராளியை முட்டாள் ஆக்கித் தன்னைப் பெரிய அறிஞை ஆக்கிக் காட்டிக் கொள்வதில் அவளுக்கு ஓர் அல்ப சந்தோஷம்!

'கெட்டவன் கேட்டவன்' - இரண்டிற்கும் என்ன வித்தியாசம்? பிரியாவிற்கு முதலில் ஒன்றும் புரியவில்லை. அடிப்படையில்லாமல் அவள் கேட்டிருக்கமாட்டாளே...

பிரியா யோசித்தாள்.

'கெட்டவன் கேட்டவன்' - இரண்டிற்கும் என்றுதானே கேட்டாள். 'இரண்டு பேருக்கும்' என்று கேட்கவில்லை. 'இதில் சொல்புதிர் தான் இருக்க வேண்டும்' என்னும் முடிவுக்கு வந்தாள்.

'கெட்டவன்', 'கேட்டவன்' - ஒரே எழுத்துத்தான் வித்தியாசம். கெ, கே - யோசிக்க யோசிக்க பிரியாவுக்கு ஏதோ கொஞ்சம் புரிவது போலத் தோன்றியது.

''இன்னுமாடி யோசனை? மக்கு!'' - என்று எழில் இடிக்க, பிரியா திக்கித் திணறி ''கொம்புதான் வித்தியாசம்'' - என்றாள்.

''கொம்புன்னா?'' - எழிலின் அதட்டல்!

''கெட்டவன் 'கெ'க்கு ஒத்தைக் கொம்பு. கேட்டவன் 'கே'க்கு இரட்டைக் கொம்பு''. 'கட கட' வெனச் சிரித்தாள் எழிலரசி..

''எனக்குத் தெரியும் நீ இப்படித்தான் சொல்வேன்னு. அந்த 'கெ, கே'களிலே வர்ற குறியீடுகளை 'கொம்புகள்' என்று எதை வச்சுச் சொல்றே?''

''நம்ம முன்னவங்க சொன்னதை வச்சுத்தான்'' - என்றாள் பிரியா. எழில் பின்னும் சிரித்தாள்.

''முன்னவங்களாம் முன்னவங்க! முன்னவங்க எதைச் சொன்னாலும் கண்ணை மூடிக்கிட்டு அதை அப்படியே ஏத்துக்கறது முட்டாள் தனம் இல்லையா?'' - என்று எழில் அதட்ட. பிரியாவுக்கு என்ன பதில் சொல்வது என்று புரியவில்லை.

கொஞ்சம் யோசித்தாள்; பின் தயங்கித் தயங்கி ''நம் கண்ணுக்கு எட்டாத தொலைவிலும் உலகம் இருக்கறதைப் போல, நம்ம அறிவுக்கு எட்டாத நிலையிலும் விஷயங்கள் இருக்

கலாம்; இல்லையா?'' என்று கேட்டாள்.

''இந்த 'லாம்' 'கிம்' எல்லாம் சொல்லக்கூடாது. திட்டவட்டமாச் சொல்லு. அந்த எழுத்துக் குறியீடுகளை 'கொம்புகள்'ன்னு சொல்றது சரியா தப்பா?''

''எனக்குப் புரியலே, வேணும்னா வா ஆசிரமத்துக்குப் போவோம். அங்கே விளக்கம் கிடைக்கும்'' என்றாள் பிரியா.

ஆசிரமம் என்றவுடனே 'கப்சிப்' என்று அடங்கி விட்டாள் எழிலரசி.

எங்கள் வட்டாரத்தில் ஞானானந்த ஆசிரமம் என்று ஒரு தென்னஞ்சோலை; தவக் குடில்! அங்கே வேங்கடசாமிப் பாவலர் என்று ஒரு தாத்தா இருக்கிறார். எங்கள் வட்டாரத்தினர்க்கு அந்த வேங்கடசாமிப் பாவலர் தாத்தா ஒரு சர்வ ரோக நிவாரணி. சமயசஞ்சீவி! என்ன பிரச்னையானாலும், தாத்தாவிடம் போனால் தீர்வு கிடைத்து விடும்!

ஆசிரமத்தின் பெயரைச் சொன்னவுடனே அடங்கி ஒடுங்கிப்போன எழிலரசி ஐந்தே நிமிடத்தில் ஒரு கோயிலுக்குப் போகும் எச்சரிக்கையோடு தன்னைத் தயார் படுத்திக் கொண்டு விட்டாள். பிரியாவுக்கும் ஆசிரமத்திற்குப் போகப் பிடிக்கும் எப்போ அங்கே போனாலும் இனிமையான பழங்களும் சுவையான கதைகளும் கிடைக்கும்.

எங்கள் ஊருக்கு இரண்டு கிலோ மீட்டர் தூரத்தில் எட்டையாபுரம் நெடுஞ்சாலையின் வலப்புறம் இருக்கிறது - அந்த ஞானானந்த ஆசிரமம்.

பிரியாவுடன் நடந்து வந்தபோதே - 'பாரேன், அந்தக் குறியீடுகளை 'கொம்பு'கள்ன்னு சொல்றது தப்புன்னு தான் தாத்தா சொல்வார்'' என்றாள் எழில்,

''எப்படி அவ்வளவு உறுதியாச் சொல்றே?''

''பிராணிகளுக்குக் கொம்புகள் எங்கே இருக்கு?''


''ஆடு, மாடு, மான் வகையறாவுக்குத் தலையிலே - காண்டாமிருகத்துக்கு மூக்கிலே. யானைக்கு வாயிலே'' - என்றாள் பிரியா.

''மொத்தத்திலே அந்தக் கொம்புகள் பிராணிகளின் தலைப் பகுதியிலேதானே இருக்கு? இந்த எழுத்துக் குறியீடுகள் எங்கே இருக்கு?''

''எழுத்துக்களோடு ஒட்டாமே தனியா இடப்புறத்திலே...''


''பின் எப்படி அதைக் கொம்புகள்னு சொல்லாம்?'' - எழிலரசியின் கேள்விக்கு பதில் தெரியவில்லை பிரியாவுக்கு.

'ஒரு வேளை எழில் சொல்வதும் சரியாக இருக்குமோ?' என்று பிரியா நினைத்த நேரத்தில் அவர்கள் ஞானானந்த ஆசிரம வாயிலை நெருங்கி விட்டார்கள்.



ஆசிரமத்தைச் சுற்றி பூச்செடி வேலி. நுழை வாயில் ஓலைத் தட்டியில் கதவு... தட்டியைத் திறந்து கொண்டு உள்ளே அவர்கள் நுழைய 'வீல்' என்று அலறினாள் எழிலரசி. அவள் காலில் ஒரு நெருஞ்சிமுள்.

எங்கோ தூர தென்னைமரத்துக்குப் பண்டிதம் பார்த்துக் கொண்டிருந்த பாவலர் தாத்தா, அலறலைக் கேட்டதும்



''இந்த சிலந்திப்பயலை தலை மேல போக விட்டது தப்பா போச்சு. நிறைய வலைப்பின்னி, ஓட்டை சிவிங்கியான என்னை 'ஓட்டடை' சிவிங்கியாக்கிட்டானே!''

– கே. சோமசேகர்.

பரபரப்பாக வந்தார். வரும்போதே என்ன நடந்திருக்கும் என்று யூகித்து விட்டார்.

''என்ன, முள்ளைக் குத்திக்கிட்டியா?'' என்றார் அவர் சிரித்துக் கொண்டே. ''ஒரு கொம்புப் பிரச்னைக்குத் தீர்வு தேடி இங்கே வந்தோம். வரும் போதே முள் குத்திடுச்சு'' - என்றாள் பிரியா.

''கொம்புப் பிரச்னையா?'' - என்று தாத்தா கேட்க, எழில் அந்தப் பிரச்னையை விளக்க - விளக்கிக் கொண்டிருந்த போதே வெளியே சாலையில் விர்ர் என்ற அலறலுடன் லாரி ஒன்று ஓடியது.

எழிலரசிக்கு ஒரே எரிச்சல்.

''கொஞ்சம் கூட விவஸ்தை இல்லாதவன். ஆஸ்பத்திரி, பள்ளிக் கூடம், இங் கெல்லாம் ஹார்ன் அடிக்காமே போறாங்க இல்லே, அதே போல, கோவில் ஆஸ்ரமம் இருக்கும் பக்கமும் ஹார்ன் அடிக்காமே அமைதியாப் போகணும்னு ஏன் இந்தக் காரோட்டிங் களுக்குத் தெரிய மாட்டேங்குது?'' - என்று குமைந்தாள் எழிலரசி.

பாவலர் தாத்தா சிரித்தார். சிரித்துக் கொண்டே, ''அந்தக் காரோட்டியைத் திட்டாதே. அவர்தான் இப்போ உன் கேள்விக்குப் பதில் சொல்லியிருக்காரு'' என்றார்.

பிரியாவுக்கே ஒன்றும் புரிய வில்லை. வேலிக்கு வெளியே சாலையில் போன லாரி டிரைவர், ஆசிரமத்துக்கு உள்ளே தாத்தாவிடம் கேட்ட கேள்விக்குப் பதில் சொன்னாரா? என்ன புதிர் இது!

'எப்போ? எப்படி?' என்ன பதில்?'

அந்த எல்லாம் தெரிந்த ஏகாம்பரிக்குக் கூட தாத்தா சொன்னதன் பொருள் புரியவில்லை. விளக்கம் வேண்டி அவரைப் பார்த்தாள்.

''அந்தக் காரோட்டி என்ன அடித்த தாகச் சொன்னே?''

''ஹார்ன்.''

''ஹார்ன் என்ற ஆங்கிலச் சொல்லுக்குத் தமிழ் என்ன?''

''கொம்பு'' என்றாள் பிரியா அவசர அவசரமாக.

''அந்த ஹார்ன் கொம்புக்கும் இந்த எழுத்துக் கொம்புக்கும் என்ன சம்பந்தம்?'' - எழிலரசி கேட்டாள்.

தாத்தா விளக்கினார்.

திருவிழாக்களிலே சாமி ஊர்வலத்தின் போது ஒரு வாத்தியம் வாசிப்பாங்களே அதுக்குப் பேர் என்ன?''

''கொம்பு'' - என்றாள் எழில்.

''அந்தக் கொம்பு வாத்தியத்தின் வடிவத்திலே இந்த எழுத்துக் குறியீடு இருக்கிறதாலே...'' என்று தாத்தா சொல்லிக் கொண்டிருந்த போதே - ''சபாஷ்!'' என்று குதூகலித்தாள் பிரியா.

''கொம்பிலிருந்து வாத்தியம், வாத்தி யத்திலிருந்து எழுத்து வடிவம்! நம்ம முன்னவங்க ஒண்ணும் முட்டாள் கள் இல்லே'' - என்று ஆனந்தக் கூத்தாடினாள் பிரியா.

எழிலரசி பைய, ''நம் கண்ணுக்கு எட்டாத தொலைவிலும் உலகம் இருப்பதைப் போல, நம்ம அறிவுக்கு எட்டாத நிலையிலும் விஷயங்கள் இருக்கத்தான் இருக்கு'' - என்று முணு முணுத்தாள்.

''இப்பவாவது உனக்குப் புரிஞ்சதே.

''சபாஷ்!'' - என்று அவளைத் தட்டிக் கொடுத்தாள் பிரியா!



# கிறிஸ்துமஸ் தாத்தாவிடம் என்ன கேட்பாய்?

கிறிஸ்துமஸ் திருநாளன்று, கிறிஸ்துமஸ் தாத்தா ஒவ்வொரு வீட்டுக்கும் வருகை தந்து குழந்தைகளுக்குப் பரிசுகளை அளிப்பதாக உறுதியான ஓர் நம்பிக்கை உண்டு. டிசம்பர் மாதம் 24-ஆம் தேதியன்று இரவு, குழந்தைகளின் இனிய கனவுகளை, கற்பனைத் தாத்தா நிறைவேற்றுகிறார். குழந்தைகளிடையே நல்லுணர்வுகளையும், நல்ல சிந்தனைகளையும் உருவாக்கும் இந்த கற்பனைத் தாத்தா உண்மையாகவே ஒவ்வொரு வீட்டிற்கும் வருகை தந்தால் குழந்தைகள் என்ன கேட்பார்கள். இதோ சில சிறுவர்கள் அளித்த பதில் :

*கே. பி. சாரூவேல் :*

**“எனக்கு** சாக்லேட்னா ரொம்ப இஷ்டம். அம்மா, அப்பா, தாத்தா, பாட்டி எல்லோரும் ஆசைப்பட்டு வாங்கியும் தருவாங்க. ஆனாலும் கூடவே ‘நெறைய சாக்லேட் சாப்பிடாதே; பல்லு சொத்தை விழும்’னும் சொல்லுவாங்க. ‘பல்லு சொத்தையானா டாக்டர்கிட்டே போகணும். ரொம்ப வலிக்கும். வலியோட வலியா ஊசி போடுவாரு டாக்டர். அப்புறம் சொத்தைப் பல்லைப் பிடுங்குவாரு’ அப்படீன்னெல்லாம் சொல்லிப் பயப்படுத்துவாங்க. ரொம்ப ருசியா சாக்லேட் சாப்பிட்டு, அப்புறம் ரொம்ப கஷ்டமான பல்வலியா! சே! சுத்த போர். கிறிஸ்துமஸ் தாத்தா வந்தாங்கன்னா அவர்கிட்டேயும் நான் சாக்லேட்தான் கேட்பேன். எப்படியா பட்ட சாக்லேட் தெரியுமா? எவ்ளோ தின்னாலும் பல்லு சொத்தையே விழாத சாக்லேட். அவர் கண்டிப்பா குடுப்பாரே!”

*பி. திவ்யா :*

**“பேன்ஸி** டிரஸ் காம்படிஷன்ல கலந்துக்கறதுன்னா எனக்கு ரொம்பப் பிடிக்கும். ஸ்கூல்ல நடக்கற போட்டில கலந்துக்கிட்டு நான் நிறைய பிரைஸ் வாங்கியிருக்கேன். வேற பொது நிகழ்ச்சிகள்லேயும் அது மாதிரி போட்டி நடந்தா உடனே கலந்துக்குவேன்; ஏதாவது ஒரு பிரைஸாவது அடிச்சுக்கிட்டு வந்திடுவேன். என்னோட அம்மா, அப்பாவுக்கெல்லாம் ரொம்பப் பெருமையா இருக்கும். நான் என்ன வேஷம் போட்டுக்கிட்டாலும், என்னை அடையாளமே கண்டுபிடிக்க முடியாதுன்னு எல்லோரும் சொல்லும் போது ரொம்ப சந்தோஷமா இருக்கும்! என்னோட ஃப்ரண்ட்ஸெல்லாம் கூட ஏமாந்து



* பாடப் புத்தகமே கதை
மாதிரி
சுவாரஸ்யமா இருக்கிற மாதிரி
மாத்தித் தரக் கேட்பேன்!
- பி. ஷோரன் பிரியா.

போயிடுவாங்க. கிறிஸ்துமஸ் தாத்தா வந்தார்னா எனக்கு அருமையான மேக்கப்-செட் கொடுக்கும்படி கேட்டுக்குவேன். சாதாரணமா, நானோ, என்னோட அம்மாவோ போட்டு விடற மேக்கப்பே பிரமாதமா இருக்கற போது, கிறிஸ்துமஸ் தாத்தா மேக்கப் செட் தந்தார்னா அது எவ்ளோ சூப்பரா இருக்கும், இல்லே?''

கே. பி. ஜோஷ்வா சாமுவேல் :

''**எ**ங்க வீட்ல நாங்க கோழி வளர்க்கறோம். அம்மா காலையில வீட்டுக்குப் பின்பக்கமா போனாலே போதும். எல்லாம் ஓடி வந்து அம்மாவை சூழ்ந்துக்கும். அதுவும் அவங்க கையிலே தீனிப் பாத்திரம் இருந்திட்டா கேட்கவே வேண்டாம். அம்மா நடந்து போற போது அந்த கோழிப் படை பின்னாலேயே போறதைப் பார்க்க ரொம்பவும் வேடிக்கையா இருக்கும். அதே மாதிரி நான் சில சமயம் ஆகாரம் குடுக்கப் போகும் போதும் அப்படியே ஓடி வரும். சேவல், கோழி, குஞ்சுன்னு விதவிதமான கலர்ல எல்லாம் ஓடி வர்ற அழகே நல்லாயிருக்கும். கிறிஸ்துமஸ் தாத்தா வந்தாங்கன்னா அவரோட சிவப்பு டிரஸ், வெள்ளைத் தாடியோட, தோள்ல போட்டிருக்கற மூட்டையிலிருந்து தானியங்களை அந்தக் கோழிகளுக்குப் போடணும். அவரைச் சுத்தி சுத்தி கோழிங்க ஓடி வரணும்... அதை அப்படியே ஒரு போட்டோ பிடிக்கணும். இதைத்தான் அவர்கிட்டே கேப்பேன்.''

ஏ. அனிதா :

''**நா**ன் கோரஸ் பாட்டு நல்லா பாடுவேன். எங்க சர்ச்சிலேயும் வேற பொது நிகழ்ச்சிகள்லயும் நிறைய்ய பாட்டு பாடியிருக்கேன். பொதுவாகவே கூட்டு பிரார்த்தனைக்குப் பலன் அதிகம்னு எங்க அப்பா அடிக்கடி சொல்லுவாங்க. அதிலும் பாட்டாகவே பாடினா, பாடறவங்களுக்கும் சந்தோஷம், கேட்கறவங்களுக்கும் சந்தோஷம்; கடவுளுக்கும் சந்தோஷம். யாருக்காவது உடம்பு சரியில்லேன்னா அவங்களுக்காக மனசுக்குள்ளே வேண்டிக்கிட்டு கோரஸா பாட்டு பாடினா, அந்த வியாதியஸ்தருக்கு மனசிலே தைரியமும், நம்ம உடம்பு சீக்கிரம் தேறிடும்னு நம்பிக்கையும் வரும். அவர் மட்டுமில்லாம, வெவ்வேற கஷ்டங்களால வேதனைப்படறவங்க எல்லாருக்குமா சேர்த்து மொத்தமா கடவுள்கிட்டே வேண்டிக்கிட்டு பாடறது எங்க வழக்கம். தெரிஞ்சவங்க, தெரியாதவங்க எல்லாருக்குமா பாடறது. அந்தப் பாட்டு மூலமா கடவுள் கிட்டே அவங்களுக்காக வேண்டிக்கறது இதெல்லாம்தான் எனக்குப் பிடிச்ச



* என்ன பண்ணினாலும் உடையாத
கார் பொம்மை கேட்பேன்..
நான் குட்டியாகி
அதை ஓட்டணும்! - ஆர். ராஜீவ்.



விட்டுக் கொடுக்காமல்
ஒட்டிக் கொள்ளும்
அற்புதமான பசை வெமிக்கால்
பார்க்கப் பார்க்கப் பரவசமூட்டும் பொம்மை வீடு கட்டிடுவீர். ஃபர்னிச்சர்கள் போட்டிடுவீர். கைக்கடக்கமாய் மெத்தெனப் பஞ்சடைத்த மிருக பொம்மைகள், பயமுறுத்தும் முகமூடிகள், மரப் பாச்சிகள்... மரம், காகிதம், கார்டுபோர்டு, துணிகள் இவற்றின் துணையுடனே...
உங்கள் கற்பனையே வேடிக்கைக்கு எல்லை! உங்கள் ஓய்வு வேளையை உல்லாசமாய்க் கழித்திட சிறந்த வழி.
VAMICOL®
ஆர்ட் அண்டு கிராஃப்ட் அட்ஹெஸிவ்
VAMICOL
ART AND CRAFT
வேம் ஆர்கானிக்
கெமிக்கல்ஸ் லிமிடெட்
85, நேரு பிளேஸ், புது தில்லி-110 019.
ReacT/198/92 Tam.

பொழுதுபோக்கு. கிறிஸ்துமஸ் தாத்தா வந்தாங்கன்னா, அவர்கிட்டே, எனக்காக புதுசு புதுசா பாட்டு எழுதி கொடுக்கச் சொல்வேன்; அந்தப் பாட்டுக்களுக்குப் புதுசா ட்யூன் போட்டும் தரச் சொல்வேன். அவர் அப்படிப் பண்ணிக் கொடுத்தா அது எல்லாருக்கும் பெரிய ஆசிர்வாதம்தானே! அந்தப் பாட்டுகளை நான் எங்க குழுவோட பாடுவேன். அதான் எனக்கு ஆசை.''

*ஆர். ராஜீவ் :*

"**எனக்குக்** கார் பொம்மைங்கன்னா ரொம்ப இஷ்டம். எவ்ளோ கார் பொம்மைங்க குடுத்தாலும் வாங்கிப்பேன். பேப்பர்ல, ஏதாவது ஒரு சின்னப் பையன் கார் ஓட்டினதாகப் போட்டிருந்தாங்கன்னா நானும் அதே மாதிரி ஓட்டட்டுமாப்பான்னு கேட்பேன். அவர்



✱ புதுசு புதுசா பாட்டு எழுதி
டியூன் போட்டுத்
தரச் சொல்வேன் - ஏ. அனிதா.

கூடாதும்பார். சரி, நிஜம் கார்தான் ஓட்டக் கூடாதுன்னுட்டாங்க. அந்த மாதிரி கார் பொம்மைங்களையாவது சேர்த்து வைக்கலாம்னு சேர்க்க ஆரம்பிச்சேன். என்கிட்டே ரிமோட் கன்ட்ரோல் கார் ஒண்ணு இருந்திச்சு. இங்க நின்னுகிட்டு, ரிமோட் கன்ட்ரோல் ஸ்விட்சை தட்டி விட்டா போதும். அடுத்த ரூம்ல இருக்கற கார் ஓடும்! அது எப்படி ஓடுதுன்னு சோதிக்கப் பார்த்தேன். அவ்ளோதான் மொத்தமும் கெட்டுப் போயிடுச்சு! இப்ப அந்தக் காரை கையாலதான் தள்ளி விடணும்! கிறிஸ்துமஸ் தாத்தா வந்தாங்கன்னா அவங்ககிட்டேயும் ஒரு கார் பொம்மை கேட்பேன். நான் என்ன பண்ணினாலும் அது உடையவே கூடாது. நானும் குட்டியாகி அந்த



✱ கோழிப் படைங்களோட
போட்டோ புடிக்கணும்!
- கே. பி. ஜோஷ்வா சாமுவேல்.

காருக்குள்ளே உட்கார்ந்துக்கிட்டு அதை ஓட்டணும். முடியுமா? தாத்தா வந்தா கேட்கணும். அவர் மனசு வைச்சா போதுமே!''

*பி. ஷோரன் ப்ரியா :*

"**கதைப்** புத்தகம் படிக்கறதுன்னா எனக்கு ரொம்பப் பிடிக்கும். அம்மா தான் திட்டுவாங்க. 'பள்ளிக்கூடப் பாடமே எக்கச்சக்கமா இருக்கு, நிறைய்ய ஹோம் ஒர்க் வேற. இதிலே கதைப் புத்தகம் படிக்காட்டாதான் என்ன?' அப்படீன்னு கோவிச்சுக்கு




* எவ்வோ தின்னாலும் பல் சொத்தை விழாத சாக்லேட் கேட்பேன் - கே. பி. சாமுவேல்

* அருமையான மேக்கப் செட் கேட்பேன்! - பி. திவ்யா.

வாங்க. நான் பாடமும் படிக்கறேன்; கதைப் புத்தகமும் படிக்கறேன். என்ன தப்புன்னு எனக்குப் புரியலே. பாடத்திலே நான் நிறையவே மார்க் வாங்கறேன். ஆனா கதை புத்தகம் படிக்காம பாட புத்தகம் மட்டும் படிச்சா இன்னும் நிறைய மார்க் வாங்கலாமேன்னு அவங்க அட்வைஸ் பண்றாங்க. கிறிஸ்துமஸ் தாத்தா வந்தாங்கன்னா, அவங்க கிட்டே நான் கதை புத்தகம் கேட்பேன். எப்படிப்பட்ட கதை புத்தகம்? பாடப் புத்தகமே கதை மாதிரி, சுவாரஸ்யமா இருக்கற மாதிரி மாத்தித் தரணும்னு கேட்பேன். கதைக்குக் கதையும் ஆச்சு; பாடத்துக்குப் பாடமும் ஆச்சு!''

படங்கள், பேட்டி : பிரபுசங்கர்



# கிறிஸ்துமஸ் தகவல்கள்!

● பீஸ்ட் ஆப் லைட் எனப்படும் பண்டிகை எது? கிறிஸ்துமஸ்தான்.

● கிறிஸ்துமஸ் மரத்தை அலங்கரிக்கும் பழக்கம் 10 ஆம் நூற்றாண்டில் வந்தது.

● தற்போது போன்று அலங்கரிக்கும் முறையை உருவாக்கியவர் ஆல்பர்ட் கூக்கா என்னும் அமெரிக்கர்.

● ஆரம்பத்தில் கிறிஸ்துமஸ் தாத்தாவாக வேடம் புனைந்தவர் புனிதர் நிகோலஸ்.

● 'கிறிஸ்துமஸ்' எனப் பெயரிட்டவர் பேடஸ் எனும் அமெரிக்கப் பெண்மணி.

● கிறிஸ்துமஸ் வாழ்த்து அட்டையை முதலில் வடிவமைத்தவர் என்றிகோலே.

- மு. பூபாலன், மூஞ்சூர்பட்டு.

கிருஸ்துமஸ் திருநாள். சிறுவர்கள் கூட்டமாகக் கூடி ஐன்ஸ்டீன் வீட்டின் முன்னே வந்து பாடிக் கொண்டு நின்றார்கள். சிறுவர்களின் குரலைக் கேட்டு ஐன்ஸ்டீன் வெளியே வந்து பார்த்தார். அவரைக் கண்டதும் சிறுவர்கள், ''ஐயா, நல்ல நாள். ஏதாவது எங்களுக்குக் காசு கொடுங்கள்'' என வேண்டிக் கொண்டார்கள். உடனே ஐன்ஸ்டீன் வீட்டினுள் சென்றார். நகைப்பளிக்கும் விதத்தில் ஆடைகளை அணிந்து கொண்டு கையில் ஒரு பிடிலோடு வெளியே தோன்றினார். சிறுவர்களிடம் அவர், ''பிள்ளைகளே! நானும் உங்களோடு வருகிறேன். பிரியும் காசில் எனக்கும் பங்குகொடுங்கள்'' என்று சொல்லி அவர்களோடு புறப்பட்டு விட்டார்.

- எஸ். கார்த்திகேயன், சென்னை - 600 101.



# ஐன்ஸ்டீனும் கிறிஸ்துமஸும்!



# எங்கள் ஊரில் நடந்தது

## வருத்தத்துடன்!

**எ**ங்கள் ஊர் மாரியம்மன் கோவி லில் கும்பாபிஷேகம் நடந்து ஒரு வரு ஷம் ஆனதற்காக விழா எடுத்தார்கள். ஒலிபெருக்கியை முந்தின நாளே கட்டி விட்டார்கள். மைக்கில் பேச ஆசைப் பட்டவர்கள் எல்லாம் அதில் பேசி னார்கள். எங்கள் தெருவில் உள்ள ஒரு பையன், தானும் மைக்கில் பேச விரும் பினான். மைக்கை அவனிடம் தந்தார் கள். அவன் பேச ஆரம்பித்தான். ''நாளை விசேஷ பூஜைகள் நடக்கப் போகின்றன. மாலையில் கலை நிகழ்ச்சி கள். அதில் நான் கூடப் பாடப் போகி றேன் என்பதை வருத்தத்துடன் தெரி வித்துக் கொள்கிறேன்!'' என்றான் அவன். மைக் கூச்சத்தில் என்ன பேசு கிறோம் என்பதே மறந்து போய் விட் டது அவனுக்கு. ஒரே சிரிப்புதான். இப் பொழுதும் கூட அவனை எங்கு சந்தித் தாலும் எல்லோரும் ''வருத்தப் பையன்'' என்று கூறிச் சிரிக்கிறார்கள்!

– கே. மணியரசு, பாலவிடுதி அஞ்சல்.




## ராட்சசனின் கொம்பு!

**எ**ன் சின்னத் தம்பிக்கு இரண்டரை வயது. சாப்பிட அம்மாவைப் படாத பாடுபடுத்துவான். ஒருநாள் சாதம் ஊட் டிக் கொண்டிருந்த அம்மா பொறுமை இழந்து, ''நீ சரியா சாப்பிடாட்டா




உன்னை ஒத்தக் கொம்பன் ராட்சசனிடம் பிடித்துக் கொடுத்துடுவேன். அவன் உன்னை முழுங்கிடுவான்'' என்று பயப் படுத்தினாள்.

''வரட்டும் அந்த ராட்சசன். அவனோட ஒரு கொம்பை வெட்டிப் போட்ட மாதிரி, இன்னொரு கொம்பையும் வெட்டிடறேன்'' என்றான் தம்பி. அம்மா மட்டுமென்ன, நாங்களும் திகைத்தோம்!

– கே. விவேகானந்தன், சென்னை – 78.

## மறந்துட்டீங்களா?

**கா**ல் ஆண்டுத் தேர்வுக்கு முதல் நாள். ஆசிரியர் வகுப்பில் இரண்டிரண்டு பேராகப் படிக்கும்படி கூறி



னார். அப்படியே இருவர் இருவராகப் பிரிந்து படித்துக் கொண்டிருந்தோம். எங்களுக்கு முன் பெஞ்சில் இரு மாணவிகள். படிப்பதில் கவனம் செலுத்தாது, ஒருவரை ஒருவர் சாடிக் கொண்டு திட்டியபடி இருந்தனர். ''நீதாண்டி வடி கட்டின முட்டாள்'' என்றாள் ஒருத்தி. ''போடி நீதாண்டி டபுள் வடிகட்டின முட்டாள்'' என்றாள் இன்னொருத்தி. ஆசிரியர் இதைக் கவனித்து விட்டார். ''என்னது! நான் ஒருத்தன் இங்கே இருப்பதையே மறந்துட்டீங்களா?'' என்று கடுமையாகக் கேட்டார். எல்லோரும், சண்டை போட்டவர்கள் உட்பட சிரித்தோம். பிறகுதான் ஆசிரியரும் தான் கூறியதை நினைத்து எங்கள் சிரிப்பில் சேர்ந்து கொண்டார்!

– எஸ். யசோதா லட்சுமி,
சாத்தனூர் அணை.

## மிதக்காத காரணம்




**ப**ள்ளியில் கல்விச் சுற்றுலா சென்றிருந்தோம். தங்கிய ஊரில் ஒரு ஆறு. எல்லோரும் குளிக்கப் போனோம். ஆற்றில் ஒரு காய்ந்த சுரைக்காய் மிதந்து வந்து கொண்டிருந்தது. ''காய்ந்த சுரைக்காய் இப்படி ஆற்றில் மிதந்து வர, என்ன காரணம்? பச்சை சுரைக்காய் இப்படி மிதக்காததற்கு என்ன காரணம்?'' என்று ஆசிரியர் ஒரு மாணவனிடம் கேட்டார்.


அது அறிவியல் தொடர்பான கேள்வி என்பதை மறந்து போன அவன், ''பச்சை கரைக்காயில் பொரியல் பண்ணலாம். அதனால் அதை யாரும் ஆற்றில் மிதக்கும் வரை விட மாட்டார்கள். எடுத்துக் கொண்டு வந்து விடுவார்கள். ஆனால் காய்ந்த கரைக்காயில் ஒன்றும் பண்ண முடியாது. அதனால் யாரும் சீண்ட மாட்டார்கள். அது மிதந்து கொண்டே போகும்'' என்றான் அப்பா வித்தனமாக!

ஆசிரியர் திகைத்துப் போனார். நாங்கள் சிரித்தோம்.

– எம். லியாகத் அலி, முசிறி.

## முழுங்கிய கதை!

நண்பனின் தந்தை மிகுந்த நகைச் சுவையாகப் பேசுவார். ஒருநாள் நண்பனைத் தேடிக் கொண்டு அவன் வீட்டுக்குப் போனேன். .அவன் தந்தை வரவேற்




றார். பிறகு, என்னை சோகமாக ஒரு பார்வை பார்த்து விட்டு, ''உனக்குத் தெரியுமா? உன் நண்பன் நேற்று சரஸ்வதி பூஜையின் போது ஊதுவத்தி ஸ்டாண்டை முழுங்கிட்டான்'' என்றார் அமைதியாக. எனக்குப் பகீரென்றது.

''என்ன சார் இது! இத்தனை நிதானமாக இதைக் கூறுகிறீர்கள்! அப்புறம் என்ன வாச்சு? அவன் எப்படி இருக்கான்?'' என்று பதறிக் கொண்டே கேட்டேன். ''ஒன்றும் ஆகலை. எப்படி ஆகும்? எங்க வீட்டில ஊதுபத்தி ஸ்டாண்டு வாழைப் பழம்தானே?'' என்றாரே பார்க்கலாம்!

– சிவா கிருபானந்தன், போரூர்.

## நீங்க இருங்க!

ஒருமுறை நான், அம்மா, அப்பா அனைவரும் உறவினர் வீட்டிற்குப் போய் விட்டு ரிக்ஷாவில் வீடு திரும்பிக் கொண்டிருந்தோம்.




வீடு வந்தது. என் அப்பா பணம் தந்து விட்டு, ரிக்ஷாக்காரனிடம் 'போயிட்டு வாங்க' என்று சொல்வதற்குப் பதிலாக - ''நீங்க இருங்க. நாங்க போறோம்'' என்று சொல்லி விட்டார்.

'நம்மை ஏன் இருக்கச் சொல்கிறார் என ரிக்ஷாக்காரர் விழிக்க... என் அம்மா விளக்க, எங்களோடு ரிக்ஷாக்காரரும் சேர்ந்து சிரித்து விட்டார்.

– ஹேனா செல்வகுமாரி,
மதுரை - 20.




# காசோலையை விற்கச் சொன்னவர்!

ஜானகி மணாளன்

அப்போது அந்தப் பெரியவர் ஓய்வாக ஏதோ படித்துக் கொண்டிருந்தார். அவரைப் பார்க்க வந்தார் ஒரு இளைஞர்.

''வணக்கம் ஐயா....!''

''யாரப்பா...? என்ன வேண்டும் உனக்கு...?'' என்றார் பெரியவர்.

''நான் ஒரு ஓவியன். யாராவது ஒரு நல்ல ஓவியனை வரச் சொன்னீர்களாமே...! உங்கள் நண்பர் ஒருவர் சொன்னார். ஆகவே தான் நான் வந்தேன்...'' என்றான் அந்த ஓவியன்.

''அப்படியா? ரொம்ப சரி.. விஷயம் ஒன்றுமில்லை. விரைவில் என் பிறந்த நாள் வருகிறது. அதற்கு நீ என் உருவப்படம் ஒன்றை வரைந்து வந்து தர வேண்டும்...'' என்று கேட்டுக் கொண்டார் அந்தப் பெரியவர்.

கூடவே இன்னொன்றையும் அவர் சொன்னார். ''அப்படி நீ வரைந்து வந்து தந்தால், உன் உழைப்புக்கு ஈடாக நான் உனக்கு இருநூறு பௌண்டுத் தொகை அன்பளிப்பாகத் தருவேன்!....''

'ஒரு படத்துக்கு இருநூறு பௌண்டு! ஏ அப்பா! எத்தனை அதிகம்! நமக்கு நல்ல யோகம் தான்.....' என்று கருதினான் அந்த

ஓவியன். அவன் மகிழ்ச்சிக் கடலில் மிதக்கலானான்.

''அப்படியே செய்கிறேன் ஐயா....'' என்றவாறு, அவன் பெரியவரிடமிருந்து விடை பெற்றுச் சென்றான்.

வீட்டை அடைந்ததும், பாதியில் நின்றிருந்த சிறிய - பெரிய ஓவியங்கள் அனைத்தையும் ஓர் ஓரமாக ஒதுக்கித் தள்ளி வைத்தான். அந்தப் பெரியவரின் உருவப் படத்தை வரையும் வேலையில் ஈடுபடலானான்.

ஒரு வார காலம் இரவு பகலாகக் கருமையாக உழைத்தான். அந்தப் பெரியவரின் ஓவியம் தயார்.

அவருடைய பிறந்த நாள் வந்தது. அவன் அந்த ஓவியத்தை எடுத்துக் கொண்டு, பெரியவரின் பிறந்த நாள் விழாவுக்குச் சென்றான்.


பெரியவர் அவனை வரவேற்றார். ''என்னப்பா.... என் உருவப் படம் என்ன ஆயிற்று?'' என்றார்.

''இதோ இருக்கிறதே...!'' என்றவாறு, சுற்றப்பட்டிருந்த காகிதத்தைப் பிரித்து விட்டுப் படத்தை அவரிடம் கொடுத்தான் இளைஞன்.

பெரியவர் அதை வாங்கிப் பார்த்தார். உருவம் தத்ரூபமாக வரையப்பட்டிருப்பது கண்டு மகிழ்ச்சி அடைந்தார். ''ஆகா....கா....! எத்தனை அழகாக வரைந்திருக்கிறாய்! இதை வரைந்த உன் கரத்துக்குத் தங்கக் காப்புதான் போட வேண்டும்... அது என்னால் முடி யாது...'' என்று ஜோக் அடித்தார்.

அதன் பிறகு, ''நீ உள்ளே போய் விருந்து அருந்திவிட்டு வா... அதற்குள் நான் உன்னிடம் பேசியபடியே இருநூறு பௌண்டுக்குக் காசோலை எழுதி வைக் கிறேன்...'' என்றார்.

ஓவியன் உள்ளே போனான். விருந்து சாப்பிட்டுவிட்டுத் திரும்பி அந்தப் பெரியவரிடம் வந்தான்.



அந்தப் பெரியவர் தயாராகக் காசோலைய எழுதிக் கையொப்பம் இட்டு வைத்திருந்தார்.

''இந்தா... இருநூறு பௌண்டுக் கான காசோலை'' என்று, அவனிடம் கொடுத்தார்.

வாங்கிப் பார்த்த ஓவியனுக்கு ஆச் சர்யம். அதற்குக் காரணமும் இருந்தது. அந்தப் பெரியவர் இருநூறு பௌண் டுக்கு ஒரே காசோலையாகக் கொடுத் திருக்கலாம். ஆனால் அவர் அவ்விதம் செய்யவில்லை. நாற்பது பௌண்டுக்கு ஒரு காசோலை வீதம் ஐந்து காசோலை களைத் தனித்தனியாக எழுதிக் கை யொப்பம் இட்டுக் கொடுத்திருந்தார்.


''ஒரே காசோலை போதுமே...! இப்படி ஐந்தாக எழுதி, நான்கு காசோலைகளை வீணடித்து விட்டீர் களே...! இதற்கு என்ன காரணம்?'' என்றான் ஓவியன்.

அந்தப் பெரியவர் உடனே பதில் கூறவில்லை. சற்று நேரம் மௌனமாக இருந்துவிட்டு, அவனிடம் கேட்டார்.

''நீ காசோலைகளை பாங்கில் போடாமல் நான் சொல்லுவதுபோல் செய்தால் உனக்கும் லாபம் எனக்கும் லாபம். என்னைப் பற்றி உனக்கு தெரியுமல்லவா?''

''என்ன ஐயா இப்படிக் கேட்கி றீர்கள்? நீங்கள் ஒரு மாமேதை அல்லவா...! ஊர் உலகில் உங்களுக்கு உள்ள மதிப்பும் மரியாதையும் இந்த நாட்டில் வேறு யாருக்கும் கிடை யாதே...'' என்று அப்பெரியவரின் உயர் வையும் செல்வாக்கையும் நினைவு கூர்ந் தான் அந்த ஓவியன்.

பெரியவர் சொன்னார், ''எனக்கு உள்ள அந்தச் செல்வாக்கை நீ புத்தி சாலித்தனமாகப் பயன்படுத்திக் கொள்.



அப்படிச் செய்தால் உனக்கு மட்டும் அல்லாது எனக்கும் கூட லாபம்....''

''உங்களுக்குமா....? எப்படி ஐயா...? சொல்லுங்கள்... அவ்வாறே செய்கிறேன்...''

''இந்த ஐந்து காசோலைகளையும் நீ பாங்கில் கொண்டுபோய் மாற்றாதே... வெளியில் ஐந்து பேரிடம் விற்று விடு...'' என்றார் பெரியவர்.

''விற்பதா....? இவற்றை யார் ஐயா, வாங்குவார்கள்?''

''என்னிடம் பெருமதிப்பு வைத்திருப்பவர்களிடம் இவற்றை நீ அதிக விலைக்கு விற்று விடலாம். சற்றும் தயங்காது வாங்கிக் கொள்வார்கள்...'' என்றார் பெரியவர்.

ஓவியனுக்குப் புரியவில்லை குழம்பினான்.

பெரியவர் தொடர்ந்தார், ''என்னிடம் மதிப்பு வைத்திருப்பவர்கள், எனது 'ஆடோகிராஃப்' கையொப்பத்தைப் பணம் கொடுத்துப் பெற்றுச் செல்கிறார்கள். நான் அவர்களிடம் ஒரு கையொப்பம் தர ஐம்பது 'பௌண்டு' கட்டணமாகப் பெறுகிறேன். இந்த ஐந்து காசோலைகளையும் அதே தொகைக்கு நீ ஐந்து பேரிடம் விற்று விடு. உனக்கு ஐயைந்து இருபத்தைந்து - அதாவது இருநூற்று ஐம்பது பௌண்டு கிடைக்கும். நான் பணமாகக் கொடுத்தால் இருநூறு பௌண்டுதான் தருவேன். இப்படிச் செய்தால் உனக்கு இருநூற்றைம்பது - அதாவது ஐம்பது பௌண்டு அதிகமாகவே கிடைக்கும். உனக்கு லாபம் தானே.....'' என்று விளக்கமளித்தார் பெரியவர்.

ஓவியன் பெரு மகிழ்ச்சியொடைந்தான். ''ஆம் ஐயா....! எனக்கு ஐம்பது பௌண்டு லாபம்தான்...'' என்ற அவன் 'இப்படிச் செய்வதால் உங்களுக்கும் லாபம் என்று சொன்னீர்களே! அது எவ்வாறு?' என்று புரியாமல் தவித்தான். அதை அவரிடமே கேட்டுவிட்டான்.

பெரியவர் சொன்னார், ''உன்னிடம் நான் கொடுத்துள்ள இந்தக் காசோலைகளை நீயாக இருந்தால் பாங்கில் கொடுத்துப் பௌண்டாக மாற்றிக் கொள்வாய். ஆனால் என்னிடம் பெருமதிப்பு வைத்திருப்பவர்களுக்கு என் கையெழுத்து மிகவும் புனிதமானது. எனவே, அவர்கள் நீ விற்கும் இந்தக் காசோலைகளை வாங்கி, எந்தக் காலத்திலும் பாங்க்கில் பணமாக மாற்றிக் கொள்ளவே மாட்டார்கள். பத்திரமாகப் பூசைப் பொருளைப் போன்று, பெட்டியில் வைத்துப் பாதுகாப்பார்கள். அல்லது மரச் சட்டமிட்டுச் சுவரில் மாட்டி வைப்பார்கள். அப்போது, என் பாங்க் கணக்கில் உள்ள பணம் என்னிடம் தானே இருக்கும். அந்த இரு நூறு பௌண்டுமே எனக்கு மிச்சம் தானே...! அதனால்தான் சொன்னேன்! இவற்றை நீ விற்றால் உனக்கும் லாபம்; எனக்கும் லாபம் என்று....!'' என்று முடித்தார் அந்தப் பெரியவர்.

அந்தப் பெரியவரின் புத்தி கூர்மையை அறிந்த அந்த ஓவியன் அவரைப் புகழ்ந்தான். பாராட்டினான். மகிழ்ச்சிக் கடலில் மிதந்தவாறு, அந்தக் காசோலை களோடு, அவரிடம் விடை பெற்று வீடு திரும்பினான்.

அறிவுக் கூர்மை மிக்க அந்தப் பெரியவர் யார் தெரியுமா? அவர்தான் ஆங்கில இலக்கியத்தில் தனியான ஒரு இடத்தைப் பெற்றிருக்கும் உலகப் புகழ் பெற்ற ஆங்கில நாடக ஆசிரியர் 'பெர்னார்ட் ஷா'!

''இவனை நிறைய பத்திரிகை படிக்கவிட்டது தப்பாப் போச்சு.....'' பாட புத்தகத்துலக்கூட நடுவுல ஜோக் இருந்தாதான் பாடம் படிப்பேங்கறான்!''

– மு. திருநாவுக்கரசு.



சீனக் கதை

# வழிகாட்டி



சிறுவன் லோஸன் பிறவியிலேயே பார்வையில்லாதவன். அவனுடைய தந்தை ஒரு கல்நெஞ்ச முரடர். ஒருநாள் லோ-ஸனிடம் ''உனக்கு உணவளிக்க என்னிடம் பணம் ஒன்றும் இல்லை. அதனால் நீ எங்கு வேண்டுமானாலும் சென்று பிழைத்துக் கொள். இனிமேல் இந்த வீட்டில் உனக்கு இடமில்லை' என்று உத்தரவிட்டார். அப்போது லோஸனுக்கு வயது எட்டு.

மனது புண்பட்ட லோ-ஸன் தன் அன்பான நாய் பானுடன் கிளம்பி விட்டான். ஊர் ஊராகச் சுற்றி பிச்சை எடுத்தான். பான் தன் சின்ன எஜமானனுடன் ஒரு குச்சியை வாயில் கவ்விக் கொண்டு மேடுபள்ளங்கள், காடுகள், குறுக்கு வழிகளில் ஒரு வழிகாட்டியாகவும், நடைகாட்டியாகவும் இருந்து பிச்சை எடுக்க உதவியது. லோ-ஸன் அந்த நாய்க்கு சில யுக்திகள் கற்றுக் கொடுத்திருந்தான். அவன் தன் கைகள் இரண்டையும் தட்டினால் நாய் தலை குனிந்து நிலத்தைத் தொட்டு வணங்கும். இதைப் பார்த்து, போக வரும் ஜனங்கள் மகிழ்ந்து காசு கொடுப்பார்கள்.

இப்படியே லோஸனும் நாயும் கிடைத்த உணவைப் புசித்துக் கொண்டும், கிடைத்த இடத்தில் படுத்துக் கொண்டும் நாட்களைத் தள்ளிக் கொண்டு வந்தார்கள். ஒருநாள் லோஸன் உறக்கத்தில் ஒரு கனவு கண்டான். கனவில் ஒரு தேவதை தோன்றி ''லோ-ஸன் என்னைத் தெரிகிறதா?'' என்று கேட்டது.

கற்பகம்

''ஐயோ, எனக்கு ஒன்றும் தெரியவில்லையே. நான் பிறவிக் குருடன் ஆயிற்றே?'' என்றான் லோஸன்.

''குழந்தாய் பயப்படாதே. குருடனென்று வருத்தம் கொள்ளாதே. நான் உனக்கு உதவுகிறேன்.''

''நீ எனக்குப் பார்வை கொடுப்பாயா?'' என்று ஆவலோடு கேட்டான் லோஸன்.

''அது என்னால் முடியாது. ஆனால் அதைப் பெற என்னால் சில உதவிகள் செய்ய முடியும். உன்னாலான உதவிகளை அவ்வப்போது நீ மற்றவருக்குச் செய்து கொண்டே இரு. நீ மற்றவர்களுக்குக் காட்டும் கருணையைப் பொறுத்து உன் பார்வை உனக்குத் திரும்பக் கிடைக்கும். பொறுமையுடன் இரு. சிறிது, சிறிதாக உன் பார்வை உனக்குத் திரும்பக் கிடைக்கும். ஆனால், சுயநலமோ அல்லது தயையின்மையோ தலைகாட்டினால் அல்லது ஏதேனும் கெட்ட குணங்களை நீ ஏற்படுத்திக் கொண்டால் உன் பார்வை இன்னும் மோசமாகி விடும்.''

திடீரென்று தூக்கம் கலைந்து எழுந்த லோஸன் தன் நாயைத் தொட்டுப் பார்த்தான். காலை சூரியனுடைய கிரணங்கள் அவன் மேல் பட்டு சூடு ஏற ஆரம்பித்து விட்டது. நாயை எழுப்பி ''பான், என்னுடைய மனம் ஆனந்தத்தால் நிறைந்திருக்கிறது. நமக்கு ஏதோ நல்ல காலம் பிறக்கப் போகிறது. உன்னைத்தான் நம்பியிருக்கிறேன்'' என்று அந்த வாயில்லாப் பிராணியோடு தன் மகிழ்ச்சியைப் பங்குகொண்டான். அதுவும் அவனை நக்கி தன் அன்பைக் காட்டிக் கொண்டது.

பிச்சை எடுத்துக் கிடைத்த ஒரு ரொட்டி, உருளைக் கிழங்கில் காலை உணவை முடித்துக் கொண்டு லோஸனும் நாயுமாக ஒரு தெருவின் வழியாக நடந்து கொண்டிருந்தார்கள். அப்போது திடீரென்று பின்னாலிருந்து வயதான ஒரு குரல் வந்தது. ''இந்த ஏழைக் குருடனுக்கு ஏதாவது பிச்சை போடுங்கள்.''

லோஸன் குரல் கேட்ட திசையில் திரும்பிப் பார்த்து, ''நானும் ஒரு குருடன்தான்'' என்றான்.

அதற்கு அந்தக் கிழவன், ''உனக்காவது கால்கள் இருக்கின்றன. எனக்குக் கால்களும் இல்லை. நான் குருடனோடு, முடவனுமாகும்'' என்றான்.

அதைக் கேட்டு லோஸன் மிக்க வருத்தத்துடன், ''என்னை மன்னிக்கவும். இதோ என்னால் ஆனது'' என்று தன்னிடமிருந்து சில்லறையை அப்படியே எடுத்துக் கொடுத்தான். அப்போது மின்னல் போல் ஒன்று லோஸன் கண்களுக்கு முன் வந்து அவன் கண்களைச் சிறிது சிறிதாகத் திறக்க வைத்தது. கொஞ்சம் நிழல் போல் பார்வையும் வந்தது. லோஸனுக்குக் கனவின் உண்மை புரிந்தது.

அடுத்த நாள் லோஸனும் நாயும் ஒரு பாழடைந்த ஆலயத்தில் உறங்கச் சென்




றார்கள். அங்கு ஓரத்தில் ஒரு கிழவி பசியினால் தவித்து முனகிக் கொண்டிருந்தாள். லோ-ஸன் தன் சிறு மூட்டையிலிருந்த ரொட்டிகளை அந்தக் கிழவிக்குக் கொடுத்தான். ராத்திரியானதால் பிச்சை எடுக்க வழியில்லாமல் அப்படியே லோஸனும், நாயும் உறங்கி விட்டனர். பொழுது விடிய எழுந்திருக்கையில் அவனுடைய கண் பார்வை இன்னும் கொஞ்சம் நன்றாகவே தெரிய ஆரம்பித்து விட்டது. இதனால் மகிழ்ச்சியடைந்த லோஸன் பகவானிடம் தன் நன்றியைத் தெரிவித்துக் கொண்டான்.

அடுத்த நாள் எழுந்திருக்கையிலேயே லோஸனுக்கும் நாய்க்கும் பயங்கரமான பசி. பக்கத்து வீடுகளில் கோழிகள் கூவத் தொடங்கி விட்டன. இதைக் கவனித்த நாய் ஓடிச் சென்று ஒரு கோழியைக் கவ்விக் கொண்டு வந்து கொன்று லோஸனிடம் கொடுத்தது. அவனும் யோசிக்காது கோழியை எடுத்துக் கொண்டு கடைவீதிக்குச் சென்று விற்றுக் காசாக்கினான். அந்தக் காசைக் கையில் எடுத்தவுடன் அவனுடைய பார்வை மீண்டும் மங்கி பழையபடியே குருடனாகி விட்டான்!

அப்போது அந்த வழியே ஓடி வந்த ஒருவன், யார் மூலமாகவோ நாய் கோழியைக் கௌவிக் கொண்டு சென்றதை அறிந்து, நாயைத் துரத்திக் கொண்டு வந்தான். லோஸனிடம் கோழியைத் திருப்பிக் கேட்டான். லோஸன் உண்மையைச் சொல்லி காசைத் திருப்பிக் கொடுத்தான். மன்னிப்புக் கேட்டான். திருட்டு முதலை விற்றுக் காசாக்கியதால்தான் பகவான் தண்டனை கொடுத்தார் என்பதை உணர்ந்தான். வருந்தினான். உடனேயே அதிசயமாக அவன் பார்வை திரும்பவும் வந்தது. தான் செய்த குற்றத்தை உணர்ந்து, பாதிக்கப்பட்டவனிடமும், பகவானிடமும் மன்னிப்புக் கேட்டான் அல்லவா? அதை விடப் புனிதமானது ஒன்றும் இல்லை என்பதையும் உணர்ந்தான்.

என்றும் போல் அடுத்த நாள் காலையில் லோஸனும் நாயுமாகப் பிச்சை





"தம்பி சைக்கிள் உயரங்கூட இல்லையே. நீயெல்லாம் சைக்கிள் ஓட்ட கத்துக்கிட்டயேப்பா!"

"பஸ் ஓட்டறவங்கயெல்லாம் பஸ் உயரமா இருக்காங்க?"

- ப. சுவாமிநாதன்.



"பார்சிலோனா போயிருந்தியே, ஏதாவது 'கப்' வாங்கிட்டு வந்தியா..?"

"வாங்கலாம்னுதான் கடைக்குப் போனேன்; விலை அதிகமா சொன்னதும், வாங்காம வந்துட்டேன்...!"

- சீர்காழி வி. ரேவதி.

"ஏன்டா, அந்தப் பட்டாசுக் கடையில தீவிபத்தாமே? என்னடா ஆச்சு?"

"பட்டாசைத் தவிர மத்ததெல்லாம் எரிஞ்சு போச்சாம்!"



யெடுக்க சென்றார்கள். ஒரு ஆற்றோரமாகச் செல்லுகையில், தூரத்திலிருந்து ஒரு குரல் கேட்டது. ''ஐயோ, என்னைக் காப்பாற்றுங்கள். நான் முழுகிக் கொண்டிருக்கிறேன்''

லோஸனுக்கு என்ன செய்ய வேண்டும் என்று தெரியவில்லை.

அவனுக்கோ, நீச்சல் தெரியாது. ஆனால் நாய்க்குத் தெரியும். நாய்க்கு குரல் வரும் திக்கைக் காட்டி, முழுகும் மனிதனைக் காப்பாற்ற நடித்துக் காட்டி கட்டளையிட்டான். புத்தியுள்ள நாய் உடனே ஆற்றில் குதித்து, நீந்திச் சென்று அந்த மனிதனைக் காப்பாற்றிக் கரை சேர்த்தது. ஆனால் தண்ணீரை நிறையக் குடித்து விட்டதால் அது மூச்சுவிட முடியாது தவித்து உடனேயே இறந்து விட்டது!

துக்கம் தாளாமல் லோஸன் அழுது, அழுது ஏங்கிப் போய் உட்கார்ந்திருக்கையில் ஒரு குரல் எங்கிருந்தோ கேட்டது.

''லோஸன் உன் வாழ்க்கைக்கே ஊன்றுகோலாக இருந்த உன் நாயை வேறு ஒருவனைக் காப்பாற்றுவதற்காகத் தியாகம் செய்தாய். அதனால் உனக்குப் பார்வை முழுவதுமாக மீண்டும் கிடைத்து விடும்.''

அதன்படியே லோஸனுக்கு முழுப் பார்வையும் கிடைத்து விட்டது!

லோஸன் நாயை அணைத்துக் கொண்டு, ''என் அன்புமிக்க நாயே, மனிதனை விட நீ எத்தனை மடங்கு உயர்ந்தவன். உன்னை என் உயிருள்ள மட்டும் மறக்கமாட்டேன். வாயில்லாப் பிராணியான நீ, குருடனாக இருந்த போது ஊன்றுகோலாக இருந்து எனக்கு உதவினாய். இறந்த பிறகும் உன் தியாகத் தால் எனக்கு பார்வை கிடைக்க உதவியுள்ளாய்!'' என்று அ ை த அடக்கம் செய்தான்.

வாழ்க்கைக்கே ஊன்றுகோலாக இருந்த தனது அருமை நாய் பானை, இன்னொரு உயிரைக் காப்பாற்ற லோஸன் செய்த தியாகக்கதை சீனாவில் சிரஞ்சிவியாக வாழ்கிறது.

# C&Y CHAIN

## எல்லா குழந்தைகளுக்கும் ஏற்ற ரெடிமேடு ஆடைகள்

ஆண் குழந்தைகளுக்கு வேண்டிய
T- சர்ட்டுகளும், ரெடிமேடுசர்ட்டுகளும்,
பெண் குழந்தைகளுக்கு ஏற்ற
சுடிதார் செட்டுகளும், பிராக்குகளும்
எல்லா காலங்களுக்கும்
ஏற்ற வகையில் கிடைக்கும்.



C & Y CHAIN

தாராபூர் டவர்ஸ்,
826, அண்ணா சாலை,
சென்னை - 600 002.
போன்: 832742

National M/227

# பிருந்தாவனக் கவியரங்கம்

## செய்தித்தாள்

செய்தித் தாளைப் படிப்பது
சிறந்த பழக்கம் அறிந்திடு
நாட்டு நடப்பு அனைத்தையும்
நன்கு புரிந்து கொண்டிரு!

பொது அறிவை வளர்த்திடும்
புதிய செய்தி கூறிடும்
சூது வாதுச் செய்திகள்
சுவை யுடனே தந்திடும்!

திரைப் படங்கள் வரவையும்
திரு விழாக்கள் நடப்பையும்
வருகை தரும் மழையையும்
வியக்க விவரம் தந்திடும்!

பொழுதைப் போக்கிக் கழித்திட
பொல்லா விவரம் தந்திடும்
கழித்து ஒதுக்கிப் படித்திட்டால்
கண்டிப்பாக உயரலாம்!

- கா. கார்த்திகேயன்,
தென்னம்புலம்.



## பாரும் பிழைத்திடும்!

மரமும் ஓர் குழந்தையே
மறந்து விடாதீர்!
மரத்தை நீர் வெட்டிடவே
முயற்சி செய்யாதீர்!

உயிர்களுக்கு உணவாகும்
உணர்ந்து கொள்வீரே!
பயிர்களையே வளரவைக்கும்
பரிவு கொள்வீரே!

மேகத்தை இழுத்து வந்து
மழையைத் தந்திடும்
தாகத்தைத் தீர்த்து வைக்கும்
தண்ணீர் ஆகிடும்!

மரமில்லா உலகமானால்
மறைந்து அழிந்திடும்!
பரிவோடு வளர்த்திட்டால்
பாரும் பிழைத்திடும்!

- கி. சந்திரசேகர்,
சென்னை - 11.

## சக்கரம்

அழகு வண்டி ஓடவே
உதவும் நல்ல சக்கரம்
குழிகள் மேடு எதனையும்
குலுங்கிக் கடக்கும் சக்கரம்!

சாதி மதம் பாராது
சுற்றும் எவர்க்கும் சக்கரம்!
பொதிகள் நன்கு சுமந்திட
பொறுமை காக்கும் சக்கரம்

- வேடப்பட்டிகற்குவேல்,
திருவனந்தபுரம் - 5.



## பழமொழி

பழமொழியாம் பழமொழி
பாட்டி சொல்லும் பழமொழி
வழிவழியாய் வாயினால்
வந்து வாழும் பழமொழி!

முன்னோர் வாழ்ந்த வாழ்க்கையில்
முழுசாய் உணர்ந்த பாடங்கள்
பின்னோர் நமக்கு வழங்கிட
பிறந்து வந்த பழமொழி!

துவண்டு போகும் காலத்தில்
தோல்வியான நேரத்தில்
எவரும் தெளிந்து நடந்திட
எளிமை மிக்க பழமொழி!

தர்மம் தழைக்கச் செய்திடும்
தீதை அழிக்கச் சொல்லிடும்!
செருக்கை அடக்க வைத்திடும்
சிறப்பு மிக்க பழமொழி!

உடலின் நோயைத் தீர்க்கவே
உலகில் இங்கு மருந்துண்டு
உள்ள நோயைத் தீர்க்கவே
உண்மை மருந்து பழமொழி!

பழமொழியைத் தெரிந்திடு!
படித்துப் படித்துச் சுவைத்திடு!
பிழையில்லாது தெரிந்திடின்
புதிய வாழ்வு கிடைத்திடும்!

- கே. ரவீந்திரன், மேல்பாதி.

## கிளியக்கா

கிக்கி கிக்கி கிளியக்கா
கிள்ளை மொழியே கரும்பக்கா!
அக்கம் பக்கம் ஆளில்லை
அருமை யாகப் பேசக்கா!


அழகு வாயால் கிளியக்கா
ஆளை மயக்கிப் பேசக்கா
குழலின் இனிமை உன்பேச்சு
கிக்கி கிக்கி கிளியக்கா!

வாழைப் பழமும் தருவேனே
வாதாங் கொட்டை தருவேனே
அழகு வாயைத் திறந்தே நீ
அற்புத மாகப் பேசக்கா!

- எஸ். பி. முருகேசன், மல்லுப்பட்டி



## பிருந்தாவனக் கவியரங்கம்



### பேனா

எழுத உதவும் பேனா
எந்தன் அருமைப் பேனா
அழகுகூட்டி எழுத்தை
ஆட்சி செய்யும் பேனா!

கவிதை கதைகள் கட்டுரை
கருத்தில் தோன்றும் எதையும்
எவரும் வியக்கும் விதமாய்
எழுதத் தூண்டும் பேனா!

இங்க் போடும் தொல்லை
எதுவும் இதற்கு இல்லை!
எங்க அப்பா பரிசாய்
எனக்குத் தந்த பேனா!

- வே. பூங்குன்றன்,
வட்டாதிமங்கலம்.


### உடற்பயிற்சி!

உடலை உறுதி ஆக்கிடவே
உடனே செய்வோம் உடற்பயிற்சி
தடையே இல்லை எளிதாக
தம்பி தங்கையர் செய்திடலாம்!

சோம்பல் விரட்டி ஒழித்திடுமே!
சுறுசுறுப் பாக ஆக்கிடுமே!
சும்மா தூங்கும் ஆசையினை
சுத்த மாக ஓட்டிடுமே!

பசியை ஒழுங்காய் தந்திடுமே
புதிய ஆற்றல் பிறந்திடுமே
தசைகள் இயங்கி வலுவாகி
தன்னம் பிக்கை பிறந்திடுமே!

- மயில்வாகனன், தஞ்சை.




### மாம்பழம்

மாம்பழமாம் மாம்பழம்
மஞ்சள் நிற மாம்பழம்
சோம்பல் போக்கும் மாம்பழம்
சத்து நிறைந்த மாம்பழம்

இனிப்பு மிக்க மாம்பழம்
ஈடு இல்லா மாம்பழம்
கனியில் ராஜா மாம்பழம்
களிப்புத் தரும் மாம்பழம்


முக்கனியில் முதலாய்
முந்தி வரும் மாம்பழம்
இக்கணமே வாங்குவோம்
இனிக்க இனிக்கத் தின்னுவோம்!




என். பி. சோபனா, தூத்துக்குடி.

பிருந்தாவனக் கவியரங்கம்


## சிட்டுக் குருவி





சிட்டுக்குருவி, சிட்டுக்குருவி
சிரிச்சிப் பறந்துச்சாம்!
பட்டு வாலை ஆட்டியாட்டி
பாட்டுப் படிச்சுதாம்!
மெட்டுப் போட்ட தாய்க் குருவி
மெல்ல வந்துச்சாம்!
கெட்டுப் போன தாளம் தன்னை
சுட்டிக் காட்டுச்சாம்!
எட்டி நின்ற தந்தைக் குருவி
கிட்டே வந்துச்சாம்!
கெட்டிக்காரக் குஞ்சை ஆட
கெஞ்சிக் கேட்டுச்சாம்!
சுட்டித் தனத்தால் குஞ்சுக்குருவி
சும்மா சிணுங்குச்சாம்!
வெட்டி வந்த மாங்கனியை
பிட்டுக் கொடுத்துச்சாம்!
சிட்டுக் குருவிக் குஞ்சு இப்போ
சிறப்பாய் ஆடுச்சாம்!
எட்டுப் பக்கம் எகிறி எகிறி
எழிலைக் காட்டுச்சாம்!

- எம்.எஸ். அமிர்தவள்ளி,
அருப்புக்கோட்டை.





## பார்! பார்!

அல்லிக் குளத்தில் படகைப் பார்!
படகில் இருக்கும் ஆளைப் பார்.
ஆளின் கையில் தூண்டில் பார்.
தூண்டிலில் மீனின் துடிப்பைப் பார்.
துடிக்கும் மீனின் வருத்தம் பார்.
வருத்தம் போக்கக் கெஞ்சுது பார்.
கெஞ்சலில் இரங்கிய ஆளைப பார்.
விடுதலை பெற்ற மீனைப் பார்.
மீணும் வாழ்த்தி மறையுது பார்!

- ம. பரிமேலழகன், கோவை - 5.

## பூக்கள்

சின்ன சின்ன பூக்கள்
சிரித்துக் குலுங்கும் பூக்கள்.
வண்ண வண்ண பூக்கள்
வாவென அழைக்கும் பூக்கள்.

தொட்டியில் மலரும் பூக்கள்
தொட்டிட அழைக்கும் பூக்கள்.
கட்டித் தலையில் வைக்க
கனிவாய் அழைக்கும் பூக்கள்.

- சத்ய நாராயணி கே. மூர்த்தி,
சென்னை - 2.



துடிப்பூட்டும் சக்தி இதோ!







டர்போ!
சத்தான பால் கொண்டு
தயாரிக்கப்பட்ட
புத்துணர்வூட்டும்
சாக்கலேட் பார்.

**சக்தியளிக்கும் சாக்கலேட் !**

இந்தியாவின் மிகப்பெரிய, மிக நவீன ஆலை அளிப்பது
காம்ப்கோ லிமிடெட், மங்களூர்

R K SWAMY/BBDO CL 10101



கிழ வயதை அடைந்து விட்ட காசி தேசத்து அரசனுக்கு இரண்டு குமாரர்கள். இருவரும் மிக நல்லவர்கள். தகப்பனார் சொல்வது போல் தினமும் இருவரும் காலையில் கோவிலுக்குப் போய் சுவாமி தரிசனம் செய்து, கங்கைக் கரையில் தனியான இடத்தில் தியானம் செய்து பிறகு திரும்பி வருவார்கள்.

ஒருநாள் மூத்தவன் வீரசிம்மன் தியானம் செய்து கொண்டிருந்த போது ஓர் அற்புதம் நிகழ்ந்தது. பகவான் பரமேசுவரன் அவன் எதிரே பிரத்யட்சமானான்!

''மகனே, உனக்கு என்ன வேண்டும்? ஆசைப்படுவதை எல்லாம் கேள். ஆனால் ஒரே தடவையாகக் கேள். கொடுத்து விடுகிறேன்'' என்றான் பரமேசுவரன்.

''யோசித்துச் சொல்கிறேனே?'' என்று கேட்டான் வீரசிம்மன்.

''நன்றாக யோசனை செய். வேண்டியன எல்லாவற்றையும் கேள். எதையும் விட்டுப் போகாமல் கேள். ஏதாவது விட்டுப் போனால் பிறகு கேட்க இயலாது'' என்றான் பகவான்.

வீரசிம்மன் மகிழ்ச்சியடைந்தான். எதையெல்லாம் கேட்காலம் என்று நன்றாக ஆலோசிக்க ஆரம்பித்தான். ஒன்றன்பின் ஒன்றாக எத்தனையோ ஆசைகள் தோன்றிக் கொண்டே இருந்தன. ஆசைக்கு முடிவை அவனால் காண முடியவில்லை! அடுக்கடுக்காக ஆசைகள் தொடர்ந்து தோன்றிக் கொண்டே இருந்தன!


வீரசிம்மன் ஏன் இன்னும் அரண்மனைக்குத் திரும்பி வரவில்லை என்று அரண்மனையில் எல்லோரும் கவலைப்பட்டனர். வெகு நேரமாகியும் அவன் திரும்பவில்லை. ராஜா ஆட்களை அனுப்பினார். அவர்கள் வீரசிம்மன் தியானத்தில் இருப்பதைக் கண்டனர். ராஜாவுக்குச் செய்தி தெரிவிக்கப்பட்டது.

''இளவரசனின் தவத்தை யாரும் கெடுக்காதீர்கள். அவனாகவே தியானத்தை முடித்து விட்டு வரட்டும்'' என்று ராஜா உத்தரவிட்டார்.

சின்ன ராஜகுமாரன் பெயர் சம்பூர்ணன். அவனும் வழக்கப்படி கங்கையில் குளித்து, பூஜை தியானம் செய்தான். மூத்த ராஜகுமாரனுக்குத் தரிசனம் தந்த மகாதேவன் இளையவனுக்கும் தரிசனம் தந்தான்.

# யோசித்துச் சொல்கிறேன்!

ராஜாஜி



''உனக்கு என்ன வேண்டுமோ கேள். ஆனால் வேண்டியது எல்லாவற்றை யும் ஒரே தடவையில் கேட்டு விடு'' என்று மகாதேவன் கேட்டான். தன் அண்ணனைப் போல் அவன் அவகாசம் கேட்கவில்லை. உடனே கேட்டு விட் டான்.

''ஆண்டவனே, மேலும் மேலும் எதுவும் வேண்டாத உள்ளத்தை எனக்குத் தருவீர்!'' என்று உடனே வரம் கேட்டு விட்டான் சம்பூர்ணன்.

''அப்பனே! சம்பூர்ணனே! தந்தேன் நீ கேட்ட வரத்தை'' என்று மகேஸ்வரன் வரம் அளித்தான். ராஜகுமாரன் சம்பூர்ணனின் அழகிய முகம் இன்னும் அதிக அழகு பெற்றது. முன்பு இல்லாத அளவுக்குப் பொலிவு பெற்றுப் பிரகாசித்தது. தியானத்தை முடித்துக் கொண்டு அரண்மனை திரும்பினான். மகாராணி அவனை அன்போடு அணைத்து முத்தமிட்டான்.

மகாராணிக்கு மூத்த ராஜகுமாரன் இன்னும் திரும்பாதது கவலையைத் தந்தது. அரசனிடம் வந்து கேட்டாள்.

''அவனுக்கு தியானத்தில் மிகவும் ஈடுபாடு. தியானம் முடிந்ததும் வருவான்'' என்றார் ராஜா.

எதைக் கேட்பது எதை விடுவது என்று முடிவு செய்ய முடியாது தவித்த நிலையில், வெகு நேரம் கழித்து வீரசிம்மன் ராஜ மாளிகைக்குத் திரும்பி வந்தான். முகம் வாடி வதங்கியிருந்தது. ஆகாரம் பிடிக்கவில்லை.

ஒருநாள், இரண்டு நாள், மூன்று நாள் என்று நாட்கள் கழிந்தன. எதை விடுவது, எதைக் கேட்பது என்பதைப் பற்றி முடிவு செய்ய முடியாமல் வீரசிம்மன் இன்னும் தவித்துக் கொண்டிருந்தான். ஏதாவது ஒன்றைக் கேட்கலாம் என்று எண்ணுவான். கூடவே இன்னொன்று வேண்டும் என்று தோன்றும். அதன் பிறகு இன்னொன்று; பிறகு வேறு ஒன்று. இப்படி அவனுடைய யோசனை, முடிவு காண முடியாமல் போய்க் கொண்டே இருந்தது.

ஆகாரம், விளையாட்டு எல்லாவற்றையும் இளவரசன் வீரசிம்மன் விட்டு விட்டான். எந்த நேரம் பார்த்தாலும்



என்ன கேட்கலாம் என்ற யோசனை தான்! நாட்கள் செல்லச் செல்ல உடல் மெலிந்து நோய்வாய்ப்பட்டுப் போனான்.

ராஜா கவலையடைந்தார். மந்திரிகளுடன் யோசித்தார். வீரசிம்மனுக்கு வைத்தியம் செய்யத் தீர்மானித்தார்கள் வைத்தியம் நடந்தது. ஒரு பயனும் ஏற்படவில்லை.

மகாராணி மகனின் உடம்பு குணமாக மகேசுவரனை எண்ணி விரதமிருந்தாள். ஒருநாள் மகாராணியின் கனவில் பரமேசுவரன் காட்சியளித்தான்.

''மகாராணி, வீரசிம்மனுக்கு வியாதி ஏதும் இல்லை. நான் தந்த வரத்தைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறான். என்ன கேட்க வேண்டும் என்பதைப் பற்றி அவனால் முடிவு செய்ய முடியவில்லை'' என்று நடந்ததைச் சொன்னான் பரமேசுவரன்.

''ஐயோ! என் மகன் ஏமாந்து போனானே!'' என்று பதறிய ராணி, அரசனிடம் விஷயத்தைக் கூறினாள்.

படுக்கையில் நோயுடன் போராடிக் கொண்டிருந்த ராஜகுமாரனிடம் இருவரும் விரைந்தனர். ''மகனே, வேண்டாமை அல்லவா உலகத்தில் பெரிய செல்வம்? ஆசைகளை முடிவில்லாது வளர்த்துக் கொண்டால் ஏது விமோசனம்? போதுமென்ற மனமல்லவா பொன் செய்யும் மருந்து? அதைக் கேட்காது, கவலைகளை இழுத்து விட்டுக் கொண்டு, நோய்ப்பட்டுக் கிடக்கிறாயே! இருப்பதில் திருப்தி அடையும் மனதை இறைவனிடம் கேள்'' என்று அரசன் மகனுக்குப் புத்திமதி சொன்னான்.



ஆசைகளை முடிவில்லாமல் வளர்த்துக் கொண்ட வீரசிம்மனுக்கு இந்த உபதேசம் விளங்கவில்லை. அவன் தன் மனதை மாற்றிக் கொள்ளவும் விரும்பவில்லை. அந்தக் கவலையின் நோயே அவனுக்கு முடிவைக் கொண்டு வந்தது.

– வீரசிம்மன் என்ற தலைப்பில் கல்கியில் வெளியான சிறுகதை.



# வேவு பார்க்கும் உயிரினங்கள்


**வே**வு பார்க்கும் கலை நம் நாட்டில் மட்டுமல்ல உலகம் முழுவதிலும் நெடுங்காலமாகவே இருந்து வருகிறது.. அக்காலத்தில் ''ஒற்றர்கள்'' என்றழைக்கப்பட்ட இவர்கள் இன்று துப்பறியும் நிபுணர்கள் (CID) என்ற பெயரால் அழைக்கப்படுகிறார்கள். மனிதர்கள் மட்டுமல்லாது விலங்குகள், பறவைகள் மற்றும் மீன் இனங்கள் கூட வேவு பார்க்கும் பணியில் ஈடுபடுத்தப் படுகின்றன என்றால் திகைப்பாக இருக்கிறது இல்லையா?

இரண்டாவது உலகப் போரின் போது ஜெர்மானிய கப்பற்படையினர், பகை அணியினரின் நீர்மூழ்கிக் கப்பல்கள் கடலில் எங்கெங்கு ஒளிந்து கொண்டுள்ளன என்பதைக் கண்டு பிடிக்க மிகவும் சிரமப்பட்டார்கள். நூற்றுக் கணக்கான முதலைகள், ராட்சஸ மீன்கள் மற்றும் கடல் ஆமைகளைப் பிடித்து அவற்றின் உடலில் தகவலறியும் டிரான்ஸ்மிட்டர்களைப் பொருத்திக் கடலில் விட்டனர். எதிரிகளின் நீர் மூழ்கிக் கப்பல்களின் அருகில் இவை செல்லும் போது டிரான்ஸ்மிட்டர் மூலமாக கண்ட்ரோல் அறைக்கு சிக்னல் கிடைக்கும். உடனே அவர்கள் விமானப் படைக்குத் தகவல் தர, உடனடியாக சீறிக் கிளம்பும் விமானங்கள் எதிரிகளின் நீர் மூழ்கிக் கப்பல்களைக் குண்டு வீசித் தகர்த்து விட்டு வந்துவிடும்! இப்படிப் பகை அணியினரின் பல கப்பல்கள் அழிக்கப்பட்டுள்ளன!

பறவை இனங்களில் கழுகு, கிளி புறா ஆகியவைகளையும் கூட வேவு பார்க்கும் பணியில் அதிகமாக ஈடுபடுத்தினர். பேரரசர் அக்பர் தனது அரசுப் பணியில் வேவு பார்க்கும் பணிக்கென இருபதாயிரத்திற்கும் மேற்பட்ட வேவுப் புறாக்களை வைத்திருந்தார் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

1917 - ம் ஆண்டு அக்டோபர் 3 - ம் தேதி முக்கியமானதோர் இரகசியச் செய்தியுடன் புறா ஒன்று பறந்து வந்து கொண்டிருந்தது. சீதோஷ்ண நிலை மோசமாகி புயலுடன் மழை கொட்டத் தொடங்கியது.

அந்த ஆபத்தான சீதோஷ்ண நிலையிலும் கூடப் புறா தனது பயணத்தை நிறுத்தவில்லை. ஆனால் துரதிஷ்டவசமாக எதிரிப்படையைச் சேர்ந்த ஜெர்மானிய வீரன் ஒருவன் கண்ணில் அந்த வேவுப் புறாபட்டுவிட, அவனது குண்டு வீச்சால் ஒரு காலில் குண்டு பாய்ந்து இரத்தம் சொட்டத் தொடங்கியது. அந்த நிலையிலும் கூட அந்த எமகாதகப் புறா கீழே விழப் போவது




போலப் போக்குக்காட்டி விட்டுத் தனது வலிமையையெல்லாம் திரட்டிக் கொண்டு தனது இலக்கான பிரிட்டன் சப் டிவிஷனல் ஹெட்குவார்ட்டர்ஸுக்கு வந்து வீழ்ந்த பின்பே உயிர் விட்டது!

நாட்டின் பாதுகாப்புப் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு உயிர்த் தியாகம் செய்த அப்புறா விற்கு வீரப்பதக்கம் அளிக்கப்பட் டது. அதன் 'பாடம்' செய்த உருவத்தை இன்றும் இலண்டன் ஒயிட் ஹால் மியூஸியத்தில் காணலாம்.

விலங்குகளில் நாய்தான் துப்பறியும் கலையில் இன்றும் புகழ்பெற்று விளங்குகிறது. இதற்குக் காரணம் அதன் மோப்ப சக்திதான் என்பதை அறி வோம். நம் நாட்டிலுள்ள பல்வேறு இடங்களில் துப்பறியும் நாய்களுக் கென்று தனியாகப் பயிற்சிப் பள்ளிகள் உள்ளன. ஒவ்வொரு பள்ளியிலும் ஆண்டொன்றுக்கு 50 முதல் 60 நாய் கள் தங்கள் பயிற்சியை முடித்து பல் வேறு துறைகளில் சேர்க்கப்படுகின் றன. நாய்களின் சாகசங்களைத்தான் நிறையப் படித்திருப்பீர்களே.

பூனைகள் எப்படி வேவு பார்த் தன என்பதையும் தெரிந்து கொள் ளுங்கள்.




மீன்களைப் போல பூனைகளின் உட லிலும் நுண்ணிய மைக்ரோஃபோ னைப் பொருத்தி அதன் உணவில் இலே சான மயக்க மருந்தைக் கலந்து விடு வார்கள். பின்னர் அவைகளை இரகசிய ஆலோசனை நடக்கும் அறைக்குள் எப் படியாவது நுழைத்து அனுப்பி விடு வார்கள். உள்ளே செல்லும் பூனை தூங்கி விட்டாலும் கூட, தூங்காம லிருக்கும் மைக்ரோ ஃபோனின் உதவியால் பேச்சு ஒட்டுக் கேட்கப் பட்டுவிடும்!

இன்று விஞ்ஞானம் வளர்ந்து விட்டது. மிக உயரத்தில் வான் வெளி யில் பறக்கும் ராக்கெட்டுகளின் உதவியால் துல்லியமாக வேவு பார்க் கும் பணி செய்யப்பட்டு வருகிறது.


– சத்தி. ஏ.ஜே. ஜப்பார்.






GOKULAM


சூரன் அதிசூரன்
கதை: ஆனந்தி
படம்: கோபனி
நீதிநெறிச் சோழன் ஒட்டக்கூத்தரிடம் பெருமதிப்புக் கொண்டிருந்தான் —
ஒட்டக்கூத்தரே! அற்புதமாகக் கவி பாடுகிறீர்கள். அதுவும் நினைத்தவுடனே பாடுவது பெரிய அதிசயம்!
ஒட்டக்கூத்தருக்கு அரசன் சம ஆசனம் தந்து சிறப்பிப்பதால் பிற புலவர்களுக்குப் பொறாமை —
இத்தனைக்கும் ஒட்டக்கூத்தர் 'கைக்கோளர்' என்ற வீரர் வம்சத்தில் தோன்றியவர்!
ஆமாம், கைக்கோளர் அஞ்சா நெஞ்சம் படைத்தவர்கள்! அரசனுக்காகவும் புகழுக்காகவும் தலையையே கொடுப்பார்கள்!
அது சரி... ஆனால்...
ஆனால் என்ன?
எத்தனையோ வீரர்கள் பற்றி எவ்வளவோ பாடல்கள் இயற்றப்பட்டுள்ளன! ஆனால் கைக்கோளர் பற்றி எந்தப் புலவரும் நினைத்துக் கூடப் பார்க்கவில்லையே!
ஒட்டக்கூத்தர் கோபமாக எழுந்து பேசினார் —
அவரைப் புண்படுத்தி விட்டீர்கள்! விபரீதம் ஏதும் நிகழாதிருக்கணும்!


அரசசபையில் நடந்தது வெளியே பரவி, கைக்கோளர்கள் காதில் விழ—
என்ன கூட்டமாக...?
ஒட்டக்கூத்தரே! கைக்கோளர் நம்முடைய வீரத்தை நீங்க பாடவும், நமது குலப் புகழ் நிலைக்கவும்!
அதற்கு நீங்கள் தகுதியானவர்கள் என்பதை நிரூபிக்க வேண்டும். ஒரு கதை சொல்கிறேன் கேளுங்கள்!
கைக்கோளர்களின் மூதாதையர்களுக்குச் செங்குந்தர் என்றும் ஒரு பெயர் உண்டு. ஈட்டி தாங்கியதால் அந்தப் பெயர். அவர்களில் சூரன், அதிசூரன் என்று இருவர். சோழ மன்னரின் மெய்க் காவலர்கள். ஒரு நாள்...
அரசனின் அந்தரங்க ஆலோசனை மண்டபம் —
சூரா! நீ இங்கேயே இரு! அதிசூரா, ஒற்றனை அழைத்து வா!
இதோ!
ஒற்றனே! என்ன செய்தி?
அரசே! வள்ளாள தேவன் சோழ நாட்டின் மீது படையெடுக்கப் போகிறான்!
ஆ!
என்னது!


உனக்கு எப்படி தெரியும்?
நான் என் காதால் கேட்டேன்! சபையில் பகிரங்கமாகச் சொன்னான்!
என்னவென்று?
பல மன்னர்களை நான் வென்று விட்டேன்! ஆனால், சோழ மன்னனைத் தேர்க்காலில் கட்டி இழுத்து வந்தால்தான் என் வெற்றிகள் பூரணமாகும் என்றான்!
சூரனும் அதிசூரனும் பரபரப்படைந்து...
அரசே! உத்தரவு கொடுங்கள். இப்போதே போய்...
பொறுங்கள். எதிரி பற்றி முழுசாகத் தெரிந்து கொள்வோம்!
சோழ அரசன் ஒற்றனை விசாரித்தான் –
வல்லாள தேவன் சபைக்குள் நீ எப்படி போக முடிந்தது? விவரமாகச் சொல்...
சமுத்திரம் மாதிரி பெரிய ஏரி; அதன் மத்தியில் ஒரு தீவு! தீவையொட்டி தண்ணீரில் கம்பங்கள் நட்டு, தளம் அமைத்து, அதன் மேல் அரண்மனை கட்டியிருக்காங்க!



வல்லாளத் தேவன் கோட்டைக் குள் தான் புகுந்த விதத்தை சந்திரன் கவனித்தான் –
தீவில் வேலைக்கு ஆள் வேணும்! ஏறுங்க படகிலே!
இதோ நான் வரேன், கூலி கொஞ்சம் பார்த்துப் போட்டுக் குடுங்க..!
படகு தீவை நெருங்க –
ஆ! அரண்மனை வானையே தொடுதே!
இரும்புக் கோட்டை!
அது சரி, கோட்டைக் குப் போக வசதி?
அதுவா, சுழலும் யந்திரப் படி வைப்பாங்க! உணவும் இதர வியாபாரப் பண்டங்களும் உயரே போய்ச் சேர்ந்ததும் படியை நீக்கிடுவாங்க!
ஆச்சரியமா யிருக்குதே... அது சரி, தூண் வழியா தென்னைமரம் ஏறுற மாதிரி எவனாவது ஏறிட்டா?
ஏறிப் பாரு! வழுக்கி விட்டு 'பொத்'துன்னு விழுவே!
சந்திரன் தீவிலே பலவித வேலைகளையும் செய்தான் –
கத்தரிக்காய் நல்ல விளைச்சல், ஐயா! கூடை கூடையாக..
வாயை மூடு! வேலையைக் கவனி!



சிற்றன் அந்தத் தீவில் பல வித வேலைகளைச் செய்தான். சிறைச் சாலையில்...
கொஞ்சம் நகருங்க, பெருக்கணும்.
பாவம், இங்கே எத்தனை அரசர்கள், ராஜகுமாரர்கள் சிறைப் பட்டுக் கிடக்கிறார்கள்!
சோழ தேசத்தையும் ஜெயித்து மொத்தம் 108 ராஜாக்களை பலி கொடுக்கப் போறானாம், வல்லாளன்.
ஐயோ! என்ன கோரம்!
சோழ மன்னன் நம்மைக் காப்பாற்றினால் உண்டு.
காய்கறி கூடை சுமந்து சென்றான் சிற்றன். கோட்டைக்குள்...
ஆ! வல்லாள தேவன், அதோ! அப்பப்பா! கோட்டை எத்தனை பாதுகாப்பு!
தண்ணீர் வழங்குவது போல் நடந்த சிற்றன் அரசவையில்...
யுத்தத்துக்கு ஆயத்தம் செய்யுங்கள்! விஜய தசமி யன்று படையெடுப்பு!



மீண்டும் வயல் வெளியில் சேர்றான்...
ஏன்யா? நீ என்ன வேலைக்குப் புதுசா? மசமசன்னு நிக்கறியே...
ஆமா புதுசுதான்... இங்க கோட்டைக்குப் படி ஏறி இறங்கியே களைச்சுப் போகுது...
ஊரக்கப் பேசாதே. காவக்காரங்க கேட்டா கழுத்தைச் சீவிப் புடுவாங்க!
வேலை நேரம் முடிந்து இருவரும் இளைப்பாற...
ஆமா, இவரு எப்படி இத்தனை ராஜாங்களை ஜெயிச்சாரு?
அது! சொல்றேன், கேட்டுக்க!
வல்லாள தேவர் கிட்டே சரகேசரி, சந்ர கேசரின்னு ரெண்டு குதிரைங்க இருக்கு! காத்தாப் பறக்கும்! வஜ்ர தண்டம் இருக்கு. அதைத் தூக்கிட்டுக் கிளம்பினார்னா பீமசேனன்தான்!


ராக்காலத்திலேதான் யுத்தம் பண்ணுவாராமே!
ஆமா! தீவட்டிகளோட வீரர்கள் படகுகளில் ஏறி ஏரியைக் கடப்பது கண்கொள்ளாக் காட்சி...
வீரம் இருந்தா போதுமா? வீரமெல்லாம் கொள்ளை யடிக்கவா பயன் படுத்தறது?
எனக்குக் கூடத்தான் பிடிக்கல; நம்மால் என்ன செய்ய முடியும்!
எத்தனை அரசர்களைச் சிறைப்பிடிச்சிருக்காரு. எத்தனை ராஜகுமாரிகளை அடிமைகளா வைச்சிருக்காரு! பாவக் கோட்டை இது!
ஐயோ! நீ என்ன இப்படி பேசறே! எனக்குப் பயமா இருக்கு!
பயப்படாதே! நான் தப்பிக்க உதவி பண்றேன்!
நள்ளிரவில் –
ஓசைப்படுத்தாம துடுப்புப் போடறேன். மூச்சு விடற சத்தம் கூடக் கேட்கக் கூடாது...



கரை சேர்த்த பிறகு...
நன்றி, கன்னாத்தா. நான் நீந்தியே வந்திருக்கலாமோ? உனக்கு சிரமம் கொடுத்துட்டேன்...
அசடே! ஏரி நிறைய முதலைங்க. உன்னை விருந்தாக சாப்பிட்டிருக்கும்!
ஐயோ!
போயிட்டு வரேன், கன்னாத்தா...
கடவுள் அருள் இருந்தா மறுபடி சந்திப்போம்.
சோழ அரசன் சபை... தன் வரலாறு கூறி முடித்தான் இஷ்ரன்...
ஆ! ஒரு கொள்ளைக்காரன் போல் நடந்து கொள்ளும் அவனைத் தண்டிக்க வேண்டும்.
சூரனும் அதிசூரனும் முன் வந்து...
கல்யாணனை வெல்ல எங்களை அனுப்புங்கள், அரசே!
எங்களோடு இன்னும் பதினாறு பேர் வருவார்கள்!



பதினெட்டு பேரும் ஏரிக்கரைக் காட்டில் கட்டு மரம் தயாரித்தனர்...
இரவு கட்டு மரம் ஏறிச் செல்வோம்!
முதலைகளின் தாக்குதலைச் சமாளிக்கணும்.
அன்றிரவு...
சத்தமே கேட்கக் கூடாது...
சதக்!
முதலை!
தூணைப் பிடித்து ஏற...
வழுக்குது...
பொத்!
வழுக்கும் தூண்களில் தங்கள் முண்டாசுத் துணியைப் படி போல் கட்டி...
நிதானமா, நிழல் போல ஏறுங்க...
கோட்டைக்குள் புகுந்து...
அதோ, அது தான் வல்லாளத் தேவன் மாளிகையா இருக்கணும்...


வல்லாளத்தேவன் திடுக்கிட்டு கண் விழித்து...
யார் நீங்க!
உன் வாழ்நாள் முடிந்து விட்டது! வாளெடுத்துச் சண்டை போடு!
வல்லாளத் தேவன் குரல் கொடுக்கக் காவலர்கள் ஓடி வர...
வெற்றி வேல்! வீர வேல்!!
இருட்டிலே பதுங்கி வந்த நரிகளே! தொலைந்தீர்கள்!
இருதரப்பிலும் பலத்த சேதம்.
சூரா! நம்முடன் வந்த யாரும் மிஞ்சவில்லை.
என் வீரர்களும்தான் ஏராளமாய் மடிந்தார்கள்.
வல்லாளனும் தோற்று விழுந்தான்.
என்னைக் கொல்லாதே; நான் இங்கிருந்து ஓடிப் போய் விடுகிறேன்.
உயிர்ப் பிச்சை கேட்டவனைக் கொல்ல மனமின்றி...
உன் உத்தரீயத்தைப் பிடுங்கிக் கொண்டேன், ஓடிப் போ!


சூரனும் அதிசூரனும் சோழநாடு திரும்பினார்கள்.
சரகேசரியும் சகிர கேசரியும் பறக்குதே!
இவை நம் அரசருக்கு நல்ல காணிக்கை.
சோழ மன்னர் வரவேற்றார்.
வல்லாளனை வென்ற வீரர்களே வருக!
ஆனால் சூரன்...
அரசே! சிறைப்பட்டிருந்த மன்னர்களை விடுவித்தோம். வல்லாளனை வென்றோம். ஆனால் அவன் உயிர்ப் பிச்சை கேட்டதால் விட்டு விட்டோம்...
... வார்த்தை தவறக் கூடாது. அதனால் வல்லாள தேவன் தலைக்குப் பதில் இதோ என் தலை!
ஐயோ!
சூரனைப் பின் தொடர்ந்து அதிசூரனும் தன் தலையை வெட்டிக் கொள்ளப் போக...
இனி நான் ஏன் உயிர் வாழணும்?
நில்!




குலகுரு சொன்னபடி அதிசூரன் முருகக் கடவுளை முறைப்படி பூஜிக்க...
அதிசயம்! சூரனும் இறந்து போன பதினாறு வீரர்களும் உயிர் பெற்று வருகிறார்கள்...
ஒட்டக்கூத்தர் கதை கூறி முடித்து...
இப்படி ஏதாவது வீரச் செயல் நீங்கள் புரிந்திருக்கிறீர்களா? ஒன்றுமில்லாமல் உங்களைப் புகழ்ந்து எப்படிப் பாடுவது?
மறுநாள்...
ஐயா! நேற்று இங்கு வந்து உங்களிடம் கதை கேட்ட எழுபது செங்குந்தர்களும் தங்களைத் தாங்களே பலி கொடுத்துக் கொண்டார்கள்.
என்ன?
கலைவாணி! செங்குந்தர்கள் மீது ஈட்டி எழுபது பாடுகிறேன். சிரமும் உடலும் ஒட்ட அருள் புரி!
ஒட்டக்கூத்தர் பாடப் பாட ஒவ்வொரு பாட்டுக்கும் ஒருவர் உயிர் பெற்று வந்தார்...
செங்குந்தர் துணிவு தெரிந்தது. உங்கள் தமிழின் சிறப்பு புரிந்தது.
அவைப் புலவர்களின் கர்வம் அடங்கியது.



# கனவு படைத்த சாதனைகள்!

நல்ல கனவுகளைக் கண்டால் அவை பலிக்காதா என்று ஏங்குகிறோம். கெட்ட கனவுகளைக் கண்டால் அவற்றை மறக்க முயல்கிறோம். ஆனால் சிலரது வாழ்க்கையில் அவர்கள் கண்ட கனவு அவர்கள் உள்ளத்தில் எழுந்த பெரும் பிரச்னைகளைத் தீர்த்ததுடன், அவர்களை உலகப் புகழடையச் செய்திருக்கின்றன!




பிரபல எழுத்தாளரான ஆர். எல். ஸ்டீவன்ஸன் எழுதிய பெரும்பாலான நாவல்களுக்கு உட்கருவாகக் கிடைத்த விஷயங்கள் எல்லாம் அவரது கனவுகளில்தான் தோன்றின! முக்கியமாக அவர் எழுதி, அழியாப் புகழ்பெற்ற 'டாக்டர் ஜெகால் அண்ட் மிஸ்டர் ஹைட்' என்ற நாவலுக்கான கதைக் கரு உருவானது அவர் கண்ட கனவில்தான்.

பிரபல கவிஞரான கோல்ரிட்ஜ் என்பவர், தான் கனவில் கண்ட சம்பவங்களை வைத்துத்தான் தனது கவிதைகளை இயற்றுவார். அவரது படைப்புகளுள் முக்கியமாகக் குறிப்பிட வேண்டியது அவருடைய மகோன்னத சிருஷ்டியான 'குப்ளேகான்' என்ற கவிதை ஆகும். தான் கண்ட கனவை அப்படியே குப்ளேகான் கவிதையாக வடித்துவிட்டார் அந்தத் திறமைசாலிக் கவிஞர்!



செஸ்டர்டன் என்ற கவிஞர் ஒருநாள் தன் கனவில் வெள்ளைக் குதிரை ஒன்றையும், அதன் சாகசச் செயல்களையும் கண்டார். அதன் பலனாக எழுதப்பட்டதுதான் ''தி பாலாட் ஆஃப் தி ஒயிட் ஹார்ஸ்'' என்ற புகழ்மிக்க கவிதை.



சர் ஐசக் நியூட்டன் தன் கணிதப் பிரச்னைகளுக்கெல்லாம் வழி (ஃபார்முலா) கண்டுபிடித்தது பெரும்பாலும் கனவுகளின் மூலம்தான்!


'டயாபட்டீஸ்' என்னும் நீரிழிவு நோயைக் குணப்படுத்த இன்சுலின் என்னும் மருந்து கண்டுபிடிக்கப்பட்டதும் கனவின் விளைவினால்தான்!

ஃப்ரெட்ரிக் ஜி. பாண்டிஸ் என்ற அறுவை சிகிச்சை நிபுணர் நீரிழிவு நோயைப் பற்றியும், அதற்கான சிகிச்சை முறைகளைப் பற்றியும் சிந்தித்தவாறு படுக்கையில் படுத்திருந்தார். அப்படியே உறங்கிவிட்ட அவர் ஒரு கனவு கண்டார். அக்கனவில் தன் பிரச்னைக்கு முடிவைக் கண்டார். உடனே விழித்தெழுந்து, கனவில் கண்ட மருந்து - தயாரிக்கும் முறையை எழுதிக் கொண்டார். இதுவே இன்சுலின்!




நம் நாட்டுத் தகவலாக ஏதாவது கேட்கிறீர்களா? பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்து எத்தகைய போராட்டம் நடத்துவது என்று சிந்தித்த நம் தேசத் தந்தை காந்தியடிகளுக்குச் சாத்வீக சத்தியாக்கிரகத்தையே நடத்தும்படி வழி வகுத்துத் தந்தது அவர் கண்ட கனவில்தான் என்று அவரே தமது சுயசரிதையில் எழுதியிருக்கிறார்!


- எஸ். ஜெயசாந்தி.


எந்த 'கம்' போட்டா நல்லா ஒட்டிக்கலாம்?
வணக்'கம்'
ஜெ.சோமசேகர்


சைன்ஸ் வாத்தியார் வீட்டு விருந்துக்குப் போனது தப்பாப் போச்சு. சைவமா, அசைவமான்னு கேக்கிறதுக்குப் பதில் தாவர உண்ணியா, ஊன் உண்ணியான்னு கேட்டார்!
கல்விடை சரவணன்


அம்மா மரத்தில் ஏறும் போது 'தொப்'புன்னு கீழே விழுந் தேன், கொஞ்சம் 'பல்லிவிழும்பலன்' பார்த்துச் சொல்லும்மா...!
ஜெ.சோமசேகர்

சிரிப்...


எப்பவும் ஓட்டப்பந்தயத்துல நீயே லாஸ்ட்டா வர்றியே...?
எல்லோரும் என்னைப் பார்த்து பயந்து ஓடற மாதிரி தெரியும் போது சந்தோஷமா இருக்குடா... அதனாலதான்!
அ.கவிசாத்


ஏன்டா சாதத்தை சிந்திக்கிட்டே சாப்படறே?
முதலில் சிந்தி, அப்புறம் செயல்படுன்னு எங்கப்பா சொல்லியிருக்காங்க!
த.கருணா



# நூறு ரூபாய் ரகசியம்

## 7. கள்ள நோட்டு

டாக்டர் பூவண்ணன்

**மா**ளிகையின் முன்புறத்திலும் வரவேற்புக் கூடத்திலும் யாரும் இல்லை.

பரதன் அதைத் தாண்டி உள்ளே சென்றான்.

அடுத்து இருப்பதும் ஒரு ஹால். குடும்பத்தினர் அமர்ந்து உரையாடவும், தொலைக்காட்சி பார்க்கவும் பயன் படுத்தும் ஹால். அங்கே ஒரு சோபாவில் சோகமே உருவாக அமர்ந்திருந்தான், நாகேந்திரன். அவனைப் பார்த்ததும் பரதன் அவனருகே ஓடிச் சென்றான். ''நாகா, என்ன இது! வீடே சோகத்தில் ஆழ்ந்திருக்கிறது. என்ன விஷயம்?'' என்று கேட்டான்.

பரதனைப் பார்த்ததும் நாகனின் சோகம் மேலும் அதிகமானது. அவன், ''பரதா... பரதா... எங்கப்பா... எங்கப்பா...'' என்று சொல்லத் தொடங்கி, வாக்கியத்தை முடிக்காமல் விம்மினான்.

பரதன் நாகனை நெருங்கி, ஒரு கையால் அவனை அணைத்துக் கொண்டான். ''உங்கப்பாவுக்கு என்ன...? அழாமல் சொல்'' என்று கேட்டான். பணக்காரர்களுக்கு திடீர் திடீரென்று ஹார்ட் அட்டாக் வரும் என்பதை பரதன் படித்திருக்கிறான். காளியப்பருக்கும் ஹார்ட் அட்டாக் வந்திருக்குமோ?

நாகன் சிரமப்பட்டு அழுகையைக் குறைத்துக் கொண்டான். பிறகு, ''எங்கப்பாவை... போலீஸ் கைது செஞ்சுட்டது...'' என்றவன் மீண்டும் ஓவென்று அழுதான்.

''நாகா, அழாதே... அழாதே... உங்கப்பா நல்லவர்; உங்கப்பா உத்தமர். அவரை எதுக்கு போலீஸ் கைது செஞ்சுது?''

பரதனின் கேள்விக்கு நாகன் விளக்கமாகப் பதில் கூறினான்.

காளியப்பருக்கு இரண்டு மில்கள், மூன்று பெரிய தொழிற்சாலைகள் சொந்தமானவை. இரண்டு நாளைக்கு முன்பு ஒரு தொழிற்சாலையில் சம்பள நாள். அன்று தர வேண்டிய சம்பளத்தில் ஐம்பதாயிரம் ரூபாய் குறைந்தது. வங்கியில் அன்று பணமில்லை. காளியப்பர் அவசரத் தேவைக்காக வீட்டில் கொஞ்சம் பணம் வைத்திருப்பார். அதிலிருந்து ஐம்பதாயிரம் ரூபாயைத் தொழிற்சாலை மேனேஜரிடம் கொடுத்தனுப்பினார். மானேஜர் அதை வாங்கிச் சென்று கேஷியரிடம் கொடுத்தார். கேஷியர் அதைத் தொழிலாளர்க்குக் கொடுத்தார்.

நேற்றுக் காலை ஒரு தொழிலாளி நூறு ரூபாய் நோட்டை மளிகைக் கடைக்குக் கொடுத்த போது, கடைக்காரர் அது கள்ள நோட்டாக இருக்கும் என்று கருதிப் போலீசுக்குத் தெரிவித்தார். போலீஸ் அந்த நோட்டைக் கைப்பற்றியது. அதே நாளில் வேறு இரண்டு இடங்களிலும் நூறு ரூபாய் கள்ள நோட்டு பிடிபட்டது. கள்ள நோட்டை மாற்ற முயன்ற மூவரும் காளியப்பர் தொழிற்சாலையில் சம்பளம் பெற்றவர்கள். அதனால் மின்னல் வேகத்தில் தொழிற்சாலையில் சம்பளம் பெற்றவர்களைச் சோதித்ததில் பலரிடம் கள்ள நோட்டு இருந்தது தெரிந்தது. கள்ள நோட்டு சம்பளக் கவரில் வந்தது என்று தொழிலாளர் கூறினர். தொழிற்சாலை மேனேஜர் வங்கியிலிருந்து எடுத்த பணமும் முதலாளி தந்த பணமுமே சம்பளமாகத் தரப்பட்டதாகக் கூறினார். முடிவில் காளியப்பர் தம் வீட்டிலிருந்து கொடுத்தனுப்பிய ஐம்பதாயிரம் ரூபாயில்தான் கள்ள நோட்டுக்கள் இருந்திருக்க வேண்டும்என்று முடிவு செய்தனர். அதனால் அன்று காலை ஐந்து மணிக்கு போலீஸ் காளியப்பரைக் கைது செய்து அழைத்துச் சென்றது. அதனால்தான் நாகன் ரயில் நிலையம் செல்லவில்லை.

நாகன் கூறிய விவரங்களைக் கேட்ட பரதன் சோகமுற்றான்.

காளியப்பர் இத்தகைய தீய செயல்களை மேற்கொள்ள மாட்டார் என்றே பரதன் நினைத்தான்.


காளியப்பரை ஜாமீனில் விடுவிக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டதாக நாகன் கூறினான்.

''பரதா, எங்கப்பா கள்ள நோட்டு அச்சிடுபவரோ, அத்தகைய கூட்டத்தோடு தொடர்புடையவரோ அல்ல. இதை நிரூபித்து அவரை விடுவிக்கக் கடவுள்தான் வழிகாட்ட வேண்டும்.''

பரதனும் கடவுள்தான் காளியப்பரைக் காப்பாற்ற வேண்டும் என்று நினைத்தான். நாகனுக்கு ஆறுதல் சொல்லி விட்டுப் புறப்பட்டான்.

அன்று பள்ளியில் பரதனுக்கு அமோக வரவேற்பு. தலைமை யாசிரியர் முதல் வாயில் காப்பவர் வரை அத்தனை பேரும் பரதனைப் புகழ்ந்தனர். மாணவர்கள் பாராட்டினர். பரதனால் அந்தப் புகழ்ச்சியினையும் பாராட்டினையும் சுவைக்க முடியவில்லை. காளியப்பர் கைதானதே அவன் மனத்தில் பெரும் பாரமாக அழுத்திக் கொண்டிருந்தது.

மாலை செய்தித்தாள் பகல் 11



மணிக்கே வந்து விடும். அதன் முதல் பக்கத்தில், ''கள்ள நோட்டு கண்டுபிடிப்பு! தொழிலதிபர் காளியப்பர் கைது'' என்று முதல் பக்கத்தில், காளியப்பரின் புகைப்படத்துடன் செய்தி வெளியாகியிருந் தது. அதைப் படித்த பரதன் மேலும் வருந்தினான்.

பல ஆண்டுகளுக்கு முன்பு கோவையில் ஒரு தொழிலதிபர் கள்ள நோட்டு அச்சிடுவதில் தொடர்பு கொண்டிருந்தார் என்றும் அதற்காக அவர் நீண்ட காலச் சிறைத் தண்டனை பெற்றார் என்றும் செய்தித்தாள் கூறியது. காளியப்பர் உண்மையான குற்றவாளியா இல்லையா என்பதை நீதிமன்றம் முடிவு செய்யும் என்றும் செய்தித்தாள் விவரம் கூறியது.



மாணவர்களும் பொது மக்களும் இரு விதமாகப் பேசினர். சிலர், ''கருணை வள்ளல் காளியப்பர் இந்தத் தவறைச் செய்திருக்கவே மாட்டார்'' என்றனர். ''எல்லாம் வேஷம்! கள்ள நோட்டு ஒரு பக்கம்! தான தர்மம் ஒரு பக்கம்! இந்தப் பணக்காரர்களை நம்பவே கூடாது'' என்றனர் சிலர்.

அன்று மாலை பரதன் மருத மலைக்குச் சென்றான். மருதமலை முருகனிடம், ''முருகா! காளியப்பர் நல்லவர் என்று என் மனம் சொல்கிறது. எனக்கு மட்டும் ஜேம்ஸ் பாண்டின் திறமை இருந்தால் உண்மையான கள்ள நோட்டு ஆசாமிகளைக் கண்டுபிடித்து, காளியப்பரை விடுதலை செய்வேன். நான் சிறுவன். எனக்கு அந்த அளவு ஆற்றல் இல்லை. அதனால் நீதான் குற்றவாளிகளைக் கண்டுபிடித்து, காளியப்பரை விடுதலை செய்ய வேண்டும்'' என்று மனமுருக வேண்டிக் கொண்டான்.

பிறகு கோயிலுக்கு முன்னே இருந்த திறந்தவெளியின் கைப்பிடிச் சுவர் அருகே வந்து நின்றான். எதிரே கிழக்குத் திசையில் கோவை நகரம் நட்சத்திரக் கூட்டம் போலப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. வைரப் போர்வையை விரித்து வைத்தாற்போலத் தெரிந்த அந்தக் கோவை நகரத்துக்குள்ளே ஏதோ ஒரு மூலையில் கள்ள நோட்டு ஆசாமி பதுங்கிக் கொண்டிருக்கிறான். அவன் எங்கே இருக்கிறான்? அவனை எப்படிக் கண்டுபிடிப்பது? இந்த வேலையைத் தான் நாம் மருதமலை முருகனிடம் ஒப்படைத்து விட்டோமே! இனி இது அவன் வேலை! அவனே செய்யட்டும்! அவனால் முடியாதது எதுவும் இல்லை!

பரதன் சிந்தனையை நிறுத்திக் கொண்டு புறப்பட்டான். தேவஸ்தானத்து வண்டியில் ஏறி மலையிலிருந்து இறங்கி, சேரன் பேருந்தில் வீட்டுக்கு வந்து சேர்ந்தான்.

அன்றிரவு தன் குருநாதர் வெள்ளியங்கிரியுடன் காளியப்பர் கைதானது பற்றிப் பேசினான். அவரும் காளியப்பர் தவறு செய்திருக்க மாட்டார் என்று கூறியதைக் கேட்டு பரதன் நிம்மதியடைந்தான்.

''கேட்டானே ஒரு கேள்வி...! அப்படியே நாக்கைப் பிடுங்கிக்கலாமான்னு இருந்திச்சு.''

''அடடா! அப்படி அந்த ஆள் என்னதான் கேட்டுட்டான்...?''

'' 'போடா நாக்கில்லாதவனே'ன்னுதான்...!''

– ச. காணிக்கைராஜ்



**ம**றுநாள்!

பரதன் பள்ளிக்குச் சென்றான். அன்றும் நாகன் பள்ளிக்கு வரவில்லை. பரதனுக்குப் பக்கத்தில் உட்காரும் ஞானசம்பந்தனும் வரவில்லை. மணியடித்துப் பாடம் தொடங்கிய பிறகு ஞானசம்பந்தம் வந்தான்.

வந்ததிலிருந்தே பரதனிடம் ஏதோ சொல்ல முயல்வது போல அடிக்கடி அவனைப் பார்த்தான் ஞானம். அது கணக்காசிரியர் குப்புசாமியின் வகுப்பு. அதனால் அவனால் ஏதும் சொல்ல முடியவில்லை.



ஞானம் ஏதோ சொல்ல விரும்புவதை பரதனும் புரிந்து கொண்டான். அவனாலும் 'என்ன? ஏது?' என்று கேட்க முடியவில்லை.

இருவரும் பாடத்தில் கவனத்தைச் செலுத்த முயன்றனர்.

முதல் மணி அடித்தது.

மாணவர்களின் சலசலப்பிற்கிடையே ஆசிரியர் குப்புசாமி வெளியே போனார். அந்த நேரத்துக்காகவே காத்துக் கொண்டிருந்த ஞானம், ''பரதா'' என்று அழைத்தான்.

''என்ன ஞானம்? ஏதோ சொல்லணும்னு துடிக்கறே! ரொம்ப முக்கியமான விஷயம்னு நினைக்கறேன்'' என்றான் பரதன்.

''ஆம் பரதா. ரொம்ப முக்யந்தான். அதைச் சொல்ல நேற்று மாலை உங்க வீட்டுக்கு வந்தேன். நீ மருதமலை போயிருக்கிறதா சொன்னாங்க. திரும்பி வந்துட்டேன். நான் வந்ததை உங்கம்மா சொல்லலையா?''

''சொல்லலையே. மறந்துட்டாங்க போலிருக்குது.''

''நீ வந்தா உடனே எங்க வீட்டுக்கு வரும்படி சொல்லுங்கன்னு சொல்லிட்டு வந்தேன். நீ வருவேன்னு ரொம்ப நேரம் காத்துக்கிட்டிருந்தேன்.''

''அப்படீன்னா, ரொம்ப முக்கியமான செய்தியாத்தான் இருக்கணும். என்ன விஷயம் சொல்லு?''

பரதன் கேட்ட அதே நேரத்தில் தமிழாசிரியர் வகுப்புக்குள் நுழைந்துவிட்டார். மாணவர்கள் எழுந்து நின்று மரியாதை செலுத்திப் பிறகு உட்கார்ந்தார்கள். பரதனும் ஞானமும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர். 'இந்த பீரியட் முடிஞ்சதும் பேசிக் கொள்வோம்' என்றான் பரதன்.

அந்த பீரியடும் பரதன் மனம் பாடத்தில் பதியவில்லை.

ஞானம் என்ன விஷயம் சொல்லப் போகிறான்?

எந்த வகையில் அது முக்கியம்?

பரதனால் யூகிக்க முடியவில்லை.

ஒருவழியாக தமிழ் வகுப்பு முடிந்தது. பிறகு பத்து நிமிடம் இடை

வேளை. அதனால் ஞானம் பரதனை அழைத்துக் கொண்டு வகுப்புக்கு வெளியே வந்தான். மாணவர்கள் வாயிலின் அருகே தின்பண்டம் வாங்குவதற்கு ஓட பரதனும் ஞானமும் ஒரு மரத்தடியைத் தேடிச் சென்றனர். அங்கே வேறு யாரும் இல்லை.

''என்ன விஷயம்? சொல்!'' பரதன் கேட்டான்.

''பரதா, நீ எனக்குத் தந்த 'அவர்கள் வாழ்விலே' புத்தகத்தை நாகனுக்குக் கொடுத்தாயா?''

''ஆமாம் கொடுத்தேன். அதனால் என்ன?''

''சொல்கிறேன், பரதா. கள்ள நோட்டில் காளியப்பர் சம்பந்தப்பட்டிருக்கலாம்.''

ஞானம் சொன்னதும் பரதன் அதிர்ச்சியடைந்தான்.

''காளியப்பர் கள்ள நோட்டில் சம்பந்தப்பட்டிருக்கிறார் என்பதற்கும் 'அவர்கள் வாழ்விலே' புத்தகத்துக்கும் என்ன சம்பந்தம்?''

''இருந்தாலும்
அந்தக் குயிலண்ணாவுக்கு
இவ்வளவு ஆணவம்
கூடாது. பெண்
அழகாப் பாடுறது
பிடிச்சிருக்கு. ஆனா
நிறம்தான்
பிடிக்கலன்னுட்டாரே!''

– ச. காணிக்கைராஜ்



''சம்பந்தம் இருக்கு. நீ என்னிடம் தந்த 'அவர்கள் வாழ்விலே' புத்தகத்தில் ஒரு நூறு ரூபாய் நோட்டு இருந்தது. அது கள்ள நோட்டு. அதை நாகன்தான் புத்தகத்துக்குள் வைத்திருக்கணும்.''

''நான் கொடுத்த புத்தகத்திலே நூறு ரூபாய் நோட்டா? அதுவும் கள்ள நோட்டா? ஞானம் அப்படியே நூறு ரூபாய் நோட்டுன்னாலும், அது கள்ள நோட்டுன்னு எப்படி அவ்வளவு உறுதியா சொல்றே?''

''அந்த நூறு ரூபாய் நோட்டு எண்ணின் முன்னே 7MB ன்னு இருந்தது. காளியப்பர் மில்லிலே சம்பளம் வாங்கின தொழிலாளர்களிடமிருந்து கைப்பற்றின கள்ள நூறு ரூபாய் 7MB, 4HD என்னும் இரு வரிசையைச் சேர்ந்ததுன்னு பேப்பர்லே போட்டிருந்தது. நேற்று சாயந்திரந்தான் புத்தகத்திலே இந்த நோட்டைப் பார்த்தேன். உடனே நியூஸ் பேப்பரை எடுத்துப் பார்த்து உண்மையைக் கண்டுபிடிச்சேன். பரதா, இதுக்கும் மேலே அது கள்ள நோட்டுதான்னு சொல்ல வேறொரு காரணம் இருக்கு!''

''என்ன காரணம்?''

''அந்த நூறு ரூபாய் நோட்டு ஒரு பக்கந்தான் அச்சாகியிருந்தது. மற்றொரு பக்கம் பிளாங்க். அதிலே ஒன்றும் இல்லாம வெள்ளை வெளேர்னு இருந்தது.''

ஞானம் சொன்னதும் பரதன், ''அப்படியா?'' என்று வாயைப் பிளந்தான். திறந்த வாயைச் சில நொடிகள் மூடவில்லை.

ஒரு பக்கம் மட்டும் அச்சிட்ட நூறு ரூபாய் ரிசர்வ் வங்கியிலிருந்து வெளியே வர முடியாது! கள்ள நோட்டு ஆசாமிகளிடந்தான் இப்படிப்பட்ட நோட்டுகள் இருக்கலாம்.

''ஞானம், அந்த நோட்டைக் காட்டு, பாக்கலாம்'' என்று கேட்டபடி கையை நீட்டினான், பரதன்.

''அந்த நோட்டை நீ கொடுத்த அதே புத்தகத்தில் வைத்துத்தான் உன் வீட்டுக்குக் கொண்டு வந்தேன். அதை உன்

புத்தக அலமாரியில் வைத்து விட்டு வந்தேன்.''

ஞானம் சொன்னான்.

''அப்படியானால் வா, இப்போதே வீட்டுக்குப் போய் அந்த நோட்டைப் பார்ப்போம்.''

பரதன் சொன்னான், அப்போது இடைவேளை நேரம் முடிந்ததைக் குறிக்கும் மணி ஒலித்தது.

''வகுப்பக்குப் போக வேண்டாமா?'' ஞானம் கேட்டான்.

''ஞானம், ஒரு பீரியட் போகாவிட்டால் பரவாயில்லை. உன் சைக்கிளை எடுத்துக்கிட்டு வா. போய் அந்த நோட்டைப் பார்த்துட்டு, அடுத்த பீரியட் தொடங்குவதற்குள் வந்திடலாம்.''

பரதன் சொன்னதும், ஞானம் தன் சைக்கிளை எடுத்துக் கொண்டு வந்தான். பரதன் சைக்கிள் பின்னே உட்கார, ஞானம் சைக்கிளை வேகமாக மிதித்தான். சில நிமிடங்களில் சைக்கிள் பரதன் வீட்டின் முன் நின்றது.

பரதன் வீடு பூட்டியிருந்தது. அந்தப் பூட்டுக்கு இரண்டு சாவிகள். ஒரு சாவி அம்மாவிடம் இருக்கும். இன்னொரு சாவி பரதனிடம் இருக்கும். பரதன் தன்னிடமிருந்த சாவியைக் கொண்டு பூட்டைத் திறந்தான். கதவைத் தள்ளினான். வீட்டுக்குள்ளே வேகமாக ஓடி புத்தக அலமாரி முன்னே நின்றான். அந்த அலமாரியில் 'அவர்கள் வாழ்விலே' புத்தகத்தைத் தேடினான்.


அந்தப் புத்தகத்தைக் காணோம்!

''இங்கேதானே அந்தப் புத்தகத்தை வைத்தேன்'' என்றான் ஞானம்.

ஞானமும் பரதனும் சேர்ந்து அந்த அலமாரியில் இருந்த எல்லாப் புத்தகங்களையும் பத்து முறை பார்த்து விட்டார்கள். அலமாரி மட்டுமின்றி, அந்த வீடு முழுவதிலுமே தேடினார்கள்.

அப்போதும் அந்தப் புத்தகத்தைக் காணவில்லை!


(தொடரும்)



# பிராணிகளின் குளிர்கால உறக்கம்

ஆழி

குளிர்காலம் தொடங்குவதற்கு முன்பு, சில பிராணிகள் நம் பார்வையிலிருந்து மறைந்துவிடுகின்றன. குளிரைத் தாங்கிக் கொள்ள முடியாததாலும், குளிர்காலத்தில் போதிய இரை கிடைக்காததாலும், அவை குளிர்கால உறக்கத்தை மேற்கொள்ளுகின்றன!






குளிர்கால உறக்கத்திற்கு முன், பிராணிகள் நன்றாகக் கொழுத்துவிடுகின்றன. இரை இல்லாமல் இருக்கும்போது, அதிகப்படியான இந்தக் கொழுப்புச் சத்து, சக்தியைத் தருகிறது. தவிர, உடலில் சர்க்கரைச் சத்தும் சேமிக்கப்படுகிறது.




இந்த உறக்கத்தின் போது, பெரும்பாலான பிராணிகள், தங்கள் உடலிலிருந்து நீரை அதிக அளவுக்கு வெளியேற்றிக் கொள்ளுகின்றன. இதனால் குளிரில் 'உறைந்து' போவதிருந்து அவை காப்பாற்றிக் கொள்ளுகின்றன.

உடலின் வெப்பநிலை குறையும்போது, அவற்றுக்குக் குறைவான ஆக்ஸிஜனே தேவைப்படுகிறது. சுவாசம் மெதுவாக நடக்கிறது. இதயத் துடிப்பு குறைகிறது. இதனால் உடலுக்குச் சக்தி குறைவாகவே தேவைப்படுகிறது. இது சாதாரணமாக உடலின் இயக்கத்தில் எல்லாமே 30 சதவீதமாகக் குறைந்து விடுகிறது. வெளியில் சீதோஷ்ணத்திற்குத் தகுந்தாற்போல், சுவாசம், இதயத் துடிப்பு எல்லாமே தானே அதிகரிக்கிறது; அல்லது குறைகிறது.






சாதாரணமாக ஒரு நிமிடத்திற்கு 180 தடவைகள் துடிக்கும் வெளவாலின் இதயம், குளிர்கால உறக்கத்தின் போது 3 தடவைகளே துடிக்கும்! ஒரு நிமிடத்திற்கு 200 தடவைகள் சுவாசிக்கும் வெளவால், இந்த உறக்கத்தின் போது, 20 தடவைகள் மட்டுமே சுவாசிக்கும்! 104°F ஆக இருக்கும் அதன் வெப்ப நிலை 42°F ஆகக் குறைந்து விடும். அதன் உறக்கம் அக்டோபர் முதல், ஏப்ரல் வரை 7 மாதங்கள் இருக்கும்!




ஐரோப்பாவிலும், வட அமெரிக்காவிலும் வாழும் 'மர்மோட்' என்னும் பிராணி, கோடையிலேயே புற்களையும் இலைகளையும் உலர்த்திச் சேகரித்துத் தான் உறங்கப் போகும் பொந்துக்குள் மெத் தென்ற படுக்கையைத் தயார் செய்து வைத்துக் கொள்ளும். பிறகு, குளிர்காலம் வந்ததும் அதில் படுத்துச் சுகமாக உறக்கத்தில் ஆழ்ந்து விடும். அப்போது இறந்தது போலவே காணப்படும்!



நத்தை ஒரு பொந்துக்குள் நுழைந்து, ஓட்டுக்குள் புகுந்து, தலைப் பகுதியில் ஒரு தடிப்பான சுண்ணாம்புப் படலத்தை ஏற்படுத்திக் கொள்ளுகிறது. சில வகை நத்தைகள், ஆண்டுக் கணக்கில் கூட, நீண்ட உறக்கத்தில் ஆழ்ந்து விடுகின்றன!

குளிர்கால உறக்கத்தின் போது, தவளையின் வாயும் கண்ணும் மூக்கும் மூடியபடி இருக்கும். இக்காலத்தில், தவளை மூக்கினால் சுவாசிப்பதில்லை! ஈரமான தோல் மூலம் சுவாசிக்கிறது! டிசம்பர், ஜனவரி, பிப்ரவரி ஆகிய மூன்று மாதங்கள் இது உறங்குகிறது!






வெளிக்காற்றைச் சுவாசிக்கக் கூடிய ஆப்பிரிக்க 'நுரையீரல் மீன்' ஆற்றுப் படுகையில் குழி பறித்துக் கொண்டு 6 மாதங்கள் அசைவற்று உறங்குகிறது. குழிக்குள்ளிருந்து சிறு துவாரத்தின் வழியே அது காற்றைச் சுவாசிக்கிறது. மழைக் காலம் திரும்பிய பிறகு அது மீண்டும் உயிர்த்து எழுகிறது!





முள்ளம் பன்றி, ஒரு பொந்துக்குள் நுழைந்து, உடலைப் பந்து போல் சுருட்டிக் கொண்டு உறக்கத்தில் ஆழ்ந்து விடுகிறது!




மடகாஸ்கரில் காணப்படும் 'டென் ரெக்' என்னும் பிராணி ஜீன் மாதம் முதல், டிசம்பர் மாதம் வரை 7 மாதங்கள் தொடர்ந்து உறக்கத்தில் ஆழ்ந்து விடுகிறது!

நில அணில், அக்டோபர், நவம்பர் ஆகிய இரண்டு மாதங்கள், மரப் பொந்தில், குளிர் கால உறக்கத்தில் ஆழ்ந்து விடுகிறது. அதற்கு முன், அது விழித்து எழுந்து தின்ன, முன் கூட்டியே கொட்டைகளையும் விதைகளையும் பழங்களையும் தன் இருப்பிடத்தில் சேமித்து வைத்துக் கொள்ளுகிறது!





சில கரடிகள், இந்த உறக்கத்தில் ஈடுபடுவ தற்கு முன், அளவுக்கு மீறி தின்று, தன் உடலில் கொழுப்புச் சத்தைச் சேமித்துக் கொள்ளும்!




விரியன் பாம்புகளும் இந்தக் குளிர்கால உறக்கம் உறங்குகின்றன. பல விரியன் பாம்பு கள், ஆண்டு தோறும் ஒரே பொந்துக்குச் சென்று ஒன்றாகவே உறங்குகின்றன!



பறவைகளில், 'புவர் விஸ்' என்னும் அமெரிக்க நைட் ஜார் பறவை மட்டும் அரை உறக்கத்தில் ஆழ்கிறது. அதற்குச் சாதாரணமாக 100°F ஆக இருக்கும் உடலின் வெப்ப நிலை, அப்போது 65°F ஆக இருக்கும்!

குளிர்கால உறக்கத்தில் ஆழ்ந்திருக்கும் பிராணிகள் அசைவற்று இருக்கும். அவற்றை உறக்கத்திலிருந்து எழுப்ப முடியாது. உறங்கும் 'டார் மைஸ்' என்னும் பிராணியை எடுத்து உருட்டி விட்டால் கூட அது விழித்து எழுவது இல்லை!





# பிருந்தாவனம்



## ஏழு வயது மேதை!

★ புகழ்பெற்ற வயலின் மேதை யஹூதி மெனுஹின் 1923 - ஆம் ஆண்டு தானே தனியாக வயலின் நிகழ்ச்சியை நடத்தி உலக சாதனை படைத்த போது அவருக்கு வயது ஏழுதான்!

- எஸ். விஜயா சீனிவாசன், திருச்சி.



## வேடிக்கை ஊர்கள்!


★ தர்மபுரி மாவட்டதிலுள்ள சில ஊர்களின் வேடிக்கையான பெயர்கள், ஜாலியூர், தடதடா, கோழிநாய்கன் பட்டி, குண்செட்பட்டி, எருமையாம் பட்டி, கண்டாங்கிபட்டி, ஜிட்டாண் ஹள்ளி ஜிஞ்சம்பட்டி, மற்றும் பல!

- ஷ. முகம்துரபி, மொரப்பூர்.





★ 'The little Rof Eif' என்ற தலைப் பில் வில்லியம் வுட் எழுதிய சிறுகதை தான் உலகிலேயே மிகப் பெரிய புத் தகம். புத்தகத்தின் உயரம் 7 அடி 2 அங் குலம். அகலம் 5 அடி. பிரித்தால் 10 அடி அகலம். அப்புத்தகத்தின் மாதிரிப் பிரதி ஸ்காட்லாந்தில் மட்டுமே தற்போது உள்ளது.

- ஆ. முருகன், சங்கராபுரம்.





★ இங்கிலாந்தில் 'சேட்ஸ் வொர்த்' என்ற ஊரில் அழுமூஞ்சி மரம் ஒன்று இருக்கிறது. இந்த மரத்தின் கிளை, இலைகளிலிருந்து எப்போதும் தண்ணீர் வடிந்து கொண்டே இருக்கிறது. பார்ப்பதற்கு இந்த மரம் கண்ணீர் சிந்தி அழுவது போலவே தோற்றமளிக்கிறது!

- ஆர். சத்தியன், அரக்கடம்பனூர்.




★ ஒருநாள் பெர்நாட்ஷாவிற்கு அவரது நண்பர் ஒருவர் விருந்து வைத்தார். அந்த விருந்தில் வித விதமான அசைவ அயிட்டங்கள் இருந்தன. இதைக் கண்ட பெர்னாட்ஷா, ''புலால் உணவைச் சாப்பிட அருவருப்பாக உள்ளது. பிராணிகளையும், பறவைகளையும் கொன்று, இறந்துபோன அவைகளைப் புதைக்கின்ற பறவை விலங்குகளுக்கான இடுகாடாக எனது வயிற்றை நான் ஆக்கிக் கொள்ள மாட்டேன்!'' என்று கூறி எழுந்துவிட்டார்!

- எஸ். பாபுராஜ், கும்பகோணம்.





★ "Men of Good Will" என்ற நாவலை எழுதியவர் ஜீலஸ் ரோமண்ஸ். இது தான் உலகிலேயே மிகப் பெரிய நாவல். 27 தொகுதிகள் கொண்ட இதை 1932 முதல் 1936 வரை பிரசுரம் செய்தார்கள். இது எழுதப்பட்டது பிரஞ்சு மொழியில்.

- ஆ. முருகன், சங்கராபுரம்.




★ உலகிலேயே மிகப்பெரிய கல்வெட்டு எது தெரியுமா? தஞ்சை பெரிய கோயிலில் உள்ள மதில் சுவரில் எழுதியிருக்கும் கல்வெட்டுதான். இது மராட்டிய மொழியில் எழுதப்பட்டுள்ளது. இது போன்ஸ்லே வம்சத்தின் வரலாறு. 2652 வரிகள் கொண்ட இந்தக் கல்வெட்டு, ஆங்கிலத்தில் 110 பக்கமும் தமிழில் 136 பக்கமுமாக மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. சரபோஜி மகாராஜாவால் ஏற்பாடு செய்து, பாபுராவ் என்ற சிற்பியால் இது 13 -12 - 1803 அன்று செதுக்கி முடிக்கப்பட்டது.


- சி. அருள் மணி, சந்தப்பட்டி.



## காற்றாடித் திருவிழா

★ அகமதாபாத்தில் ஆண்டுதோறும் பொங்கல் அன்று கோலாகலமாக காற்றாடித் திருவிழா நடைபெறுகிறது. இதைக்காண உலகெங்கிலுமிருந்தும் பார்வையாளர்கள் வந்து குழுமுகிறார்கள். அங்கு நகராட்சி நடத்தும் ஒரு விழாவில் புராண, சரித்திர புருஷர்கள் மற்றும் கழுகு, வௌவால், வண்ணத்துப்பூச்சி, லாந்தர் விளக்கு, மீன் எனப்பலவித உருவங்களில் காற்றாடிகள் தயாரிக்கப்பட்டு, அவை ஒரே நேரத்தில் வானத்தில் சஞ்சரிப்பது கண்கொள்ளாக்காட்சியாய் இருக்கும்.


- அ. முஸ்தாபா, தக்கோலம்.



## இத்தனை பெயர்களா..!

★ அத்தி, அப்பு, அம்பரம், அம்புராசி, அம்போதி, அரிஅருணவம், அலை, அழுவம், அளக்கர், ஆர்கலி, ஆழி, ஊழி, உத்தி, உந்தி, உப்பு, ஊர், உவாவு, உவர், ஓதம், கலி, கார்க்கோதன், குரவை, சக்கரம், சமுத்திரம், சலதி, சலநதி, சலராசி, சாகரம், சிந்து, சிந்துவாரம், திரை, தோயந்தி, தெண்டிரை, நதிபதி, நரலை, நீராடி, நேமி, பரம்பு, பரவை, பாராவாரம், புணரி, பெருநீர், பௌவம், மகராலயம், முந்நீர், உலயம், பாரி, வாரிதி, வேலை, தொன்னீர் - இவையெல்லாம் என்ன? கடலைக் குறிக்கும் பெயர்களே.

- கே.எல். குமணன்,
கல்லிடைக்குறிச்சி.



## கடவுளுக்கு நன்றி!

★ முல்லாவின் கழுதை காணாமல் போய்விட்டது என்று அவரது ஊழியர்கள் அவரிடம் கூறினர். அதற்கு முல்லா கடவுளுக்கு நன்றி என்றார். ''கழுதை காணாமல் போனதற்கு கடவுளுக்கு நன்றி கூறுகிறீர்களே?'' என்று ஊழியர்கள் கேட்டதற்கு முல்லா, ''நல்ல வேளை, அந்தக் கழுதையின் மேல் நான் இல்லை. இருந்திருந்தால் நானும் சேர்ந்து காணாமல் போயிருப்பேனே, அதற்காகத்தான் கடவுளுக்கு நன்றி என்றேன்'' என்றார்!

- ஆறுபாதி புகழேந்தி,
மயிலாடுதுறை.




## சகல கலா வல்லவர்!

★ பென்சிலின் மருந்தைக் கண்டு பிடித்த அலெக்ஸாண்டர் பிளமிங்

பணப் பற்றாக்குறையால் பதினாறு வயதில் துறை முகத்தில் உள்ள சரக்குக் கிடங்கில் வேலைக்குச் சென்றார். இரண்டே மாதங்களில் பரம்பரைச் சொத்து ஒன்று கிடைக்கவே வேலையை உதறிவிட்டு மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து படித்தார். கல்லூரியில் நீச்சல் போட்டி, துப்பாக்கி சுடும் போட்டி, வாட்டர் போலோ, நாடக மேடை நடிப்பு, ஆகிய அனைத்திலும் முதல் பரிசு பெற்று சகலகலா வல்லவராக இருந்தார்!


எஸ். விஜயா சீனிவாசன்,
திருச்சி - 14.



# புதுமையான அஞ்சலி!

★ டெலிபோனைக் கண்டு பிடித்த அலெக்ஸ்ண்டர் கிரகாம் பெல் 1922 - ல் இறந்த போது அவரது மறைவுக்கு அஞ்சலி செலுத்த அமெரிக்காவிலுள்ள எல்லா டெலிபோன்களும் ஒரு நிமிட நேரம் நிறுத்தி வைக்கப்பட்டன!

- எஸ். விஜயா சீனிவாசன்,
திருச்சி - 14.



# ஆற்றுக்கு அடியில் சுரங்கப்பாதை


★ சுரங்கப்பாதைகள் பற்றி நிறையக் கேள்விப்பட்டிருப்பீர்கள். ஆனால் ஆற்றுக்கு அடியில் அமைக்கப் பட்டிருக்கிற சுரங்கப்பாதையைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறீர்களா...? இந்த அதிசய சுரங்கப் பாதை அமெரிக்காவில் குயின்ஸ் என்ற பகுதிக்கும் மன்ஹாட்டன் தீவுக்குமிடையே ஓடும் ஹட்ஸன் ஆற்றுக்கு அடியில் அமைக்கப்பட்டுள்ளது. சுமார் இரண்டு கிலோ மீட்டர் நீளமுள்ள இந்தச் சுரங்கப் பாதையை அமைக்க பலகோடி ரூபாய் செலவாயிற்று. நாம் சுரங்கப்பாதை வழியாக நடந்து செல்லும்போது தலைக்கு மேலே ஹட்ஸன் ஆறு ஓடிக் கொண்டிருக்கும்...!

கே.எல். குமணன்,
கல்லிடைக்குறிச்சி.

''என்ன குருவியாரே, என் டான்ஸ் புரோகிராமுக்கு படமெடுக்க புகைப்படக் காரர் வரமாட்டேங்கறாரா? யாரவர்?''

''பாம்பு அண்ணாச்சி தான் புகைப்படக்காரர். ஆடப்போறது நீங்கன்னுதும் ஓடியே போயிட்டார்!''





# அம்மாவை அறியுமா ஆக்டோபஸ்?

ரேவதி

கடலில் ஆயிரத்து முன்னூறு மீட்டர் ஆழமுள்ள இடம். பாசிப் பாறைகள் நிறைந்த பகுதி. பவளப் பாறைகளும் கத்தி மீன்களும் அடர்த்தியாக இருந்த நீர் அழுத்தம் மிகுந்த பகுதி.

கவச உடை அணிந்து, முதுகில் ஆக்ஸிஜன் சிலிண்டருடன், ஆழம் மிக்க கடல் பகுதியில் காமிராவால் படமெடுத்துக் கொண்டிருந்த டேவிட் அதிர்ந்து போனார்! காமிரா நீருக்குள் பாய்ச்சிய ஒளி வெள்ளத்தில், ஓர் அற்புதமான காட்சி தெரிந்தது.

பாறைக் குகைக்குள் இருந்து சவுக்கு போல் நீண்ட ஒரு கை, அருகே நீந்திக் கொண்டிருந்த மிகப் பெரிய கடல் நண்டை வளைத்து அழகாகச் சுருட்டியது, மடக்கியது, பாறைக்குள் கொண்டு போனது! நண்டின் திமிறல், அதன் கொடுக்குப் பிடி எதற்கும் பயனில்லை. ஆனால் அது திமிறிய திமிறலினால் பாசிச் செடிகள் பறந்தன. நீர் குழம்பியது.

இப்பொழுது நண்டைப் பிடித்த கைக்குரிய விலங்கு, பாறை இடுக்கில் இருந்து முழுதுமாக வெளியே வந்தது. நீண்ட அலைபாயும் எட்டுக் கைகளையும் வீசிக் கொண்டு வந்த அந்த விலங்கு ஆக்டோபஸ்!

அதிர்ந்து போன டேவிட், மேலே கப்பலில் இருந்தவர்களுடன் பேசினான்.

''அண்ணே, மிகப் பெரிய ஆக்டோபஸ். ஒரு பெரிய கடல் நண்டைப் பிடித்திருக்கிறது. அப்பா! எட்டுக் கைகளும் எப்படி வளைந்து சுழல்கின்றன தெரியுமா?''

''டேவிட். ஆக்டோபசின் நடவடிக் கைகளை அப்படியே படம் புடி. அரு மையான வாய்ப்பு.''

''புடிச்சுக்கிட்டுத்தான் இருக்கேன். இரண்டு கைகளாலும் நண்டைப் புடிச்சு தலைகீழாத் திருப்பி வாய்க்குக் கொண்டு போய்க் கடிக்கிறது. கிளி மூக்கு மாதிரி ஒரே ஒரு பல் அண்ணே. அதால நண்டைக் கடிச்சிட்டுது. நண்டி டம் இப்போ சலனமே இல்லே. செத்துப் போச்சு போலிருக்கு.''


''நான்தான் புரொபசர் பேசறேன் டேவிட். ஆக்டோபசின் கிளி மூக்குப் பல்லைச் சுற்றி ஏராளமா நச்சு உமிழ்நீர்ச் சுரப்பி இருக்கு. அதைப் பாய்ச்சி, இரையைக் கொன்று விடும். இனிமே நண்டை என்ன பண்றது பார்.''

''சார், நண்டு ஓட்டைப் பிய்த்து விட்டு, கைகளால் அதைச் சுற்றுகிறது சார்!''

''அவை வெறும் கைகள் இல்லை. ஒவ்வொன்றிலும் சுமார் இருநூற்றி நாற்பது உறிஞ்சிகள் இருக்கும். இரை யைத் திரவமாக்கி இவற்றால் உறிஞ்சிக் குடித்து விடும்.''

''ஆமாம் சார். அப்படித்தான் செய் யுது. நண்டோட இரத்தமெல்லாம் நீரில் குழம்புது சார். சார். சார்... புது ஆபத்து... ஒரு பெரிய சுறாமீன் ஆக்டோபசை நோக்கி வருது சார். எத்தனை பெரிசு! என்ன வேகம்...!''

''நானே எதிர்பார்த்தேன். சுறாவுக்கு இரத்த மோப்பம் அதிகம். நூறு மீட்டர் சுற்றளவில் ஒரு துளி இரத்தம் நீரில்



கலந்தால் கூட அதை மோப்பத்தால் கண்டுபிடித்து உடனே வந்து விடும்.''

''சுறா ஆக்டோபஸைத் துரத்துது சார். படமெடுத்துக் கொண்டுதான் பேசறேன். ஆக்டோபஸ் ஓடுது. எட்டுக் கைகளும் பின்னால் நெளிய புல்ஸென்று கரங்களைப் பின்னால் நெளிய விட்டுக் கொண்டு பறக்குது சார் ஆக்டோபஸ்! சுறாவும் விடவில்லை. சார் ஒரு எலுமிச்சம்பழ அளவு ஓட்டை சார் பாறையில். அதிலே பாய்ந்து உடம்பைக் குறுக்கிக் கொண்டு நுழைஞ்சிட்டது சார்! முழுக்க உள்ளே போய்டிச்சு சார்! சுறா பாவம் ஏமாந்து திரும்பறது.''

''டேவிட், ஆக்டோபஸை விட்டு விடாதே. தொடர்ந்து அதைப் படமெடு.''

''சார், அந்த ஆக்டோபஸ் இப்போ பாறை இடுக்கில் இருந்து வெளியே வரது சார். என் காமிராவுக்குக் கிட்டவே வந்துடுத்து சார். பயமா இருக்கு!''

''உன்னை அதால் எதுவும் பண்ண முடியாது.''

''சார், காமிராவை அப்படியே தன் எட்டுக் கைகளாலும் புடிக்க கத்திக் கிட்டது சார். காமிராவை அசைக்க முடியலே!''

''ஏன் பயப்படறே! ஆக்டோபஸ் நாம்ப பயப்படறாப் போல பயங்கரமானது இல்லே. கூச்ச சுபாவம் உடையது. நீ உன் இறக்கைக் கைக் கவசத்தால் அதன் கைகள் ஆரம்பமாகும் இடத்தில், குழந்தைகளுக்குப் பண்ணுவது போல கிச்சுக்கிச்சு மூட்டுவது போல் பண்ணு.''




''சார், நீங்க சொன்னபடியே கிச்சுக் கிச்சு மூட்டினேன். என்னைவிட்டுட்டுப் போயிடுச்சு சார். நானும் பின்னாலேயே போறேன். படம் எடுக்கறேன். அருமையா போஸ் தரது சார்! சார்! சார்! எதிர்ப் பக்கம் இன்னொரு ஆக்டோபஸ் சார். இரண்டும் பயங்கரமா சண்டை போடுது சார்!

''ஆக்டோபஸ்சுக்கு ஆதிக்க உணர்வு அதிகம். தனது எல்லைக்குள் இன்னொரு ஆக்டோபஸை வர அது அனுமதிக்காது. அதுதான் சண்டை போடுது.''

''சார், சண்டையை அருமையா படம் எடுத்திருக்கேன் சார். புது ஆக்டோபஸ் பணிந்து ஓடிடிச்சு. சார் இப்போ இன்னொரு புதிய ஆபத்து சார். ஒரு பெரிய திமிங்கலம் வந்திட்டிருக்கு சார். ஆக்டோபஸைப் பார்த்து பயங்கரமா சத்தம் போடுது சார். என்கிட்டே பதிவாயிருக்கு சார். எனக்குக் கூடப் பயமா இருக்கு. ஆனால் இந்த ஆக்டோபஸ் எதற்கும் துளியும் பயப்படாமல் அதை எதிர்த்துச் சமாளிக்கத் தயாரா இருக்கு சார். ஆச்சரியமா இருக்கே!''

''இதுல ஆச்சர்யமே இல்லே. தன்னுடைய குரலைப் பெரிதாக்கி சத்தம் போட்டு எல்லா கடல்வாழ் உயிரினங்களையும் அயரவைத்து திமிங்கலம் விழுங்கி விடும். ஆனால் ஆக்டோபஸிடம் இதன் ஜம்பம் சாயாது. ஏன் தெரியுமா? ஆக்டோபஸ் டமாரச் செவிடு!''




''அப்படியா!''

''அதனால்தான் திமிங்கலத்தின் கத்தலுக்கு அஞ்சாமல் அது எதிர்த்து நிற்கிறது! தோற்கப் போவது திமிங்கலம்தான். கவனமா படம் எடுங்க.''

''சார் தண்ணியெல்லாம் திடீர்னு ஒரேயடியா கறுப்பா போச்சு சார். ஒண்ணும் தெரியலே! என்னமோ கறுப்புக் கம்பளியால் திரை போட்டது மாதிரி இருக்கு!''

''அது ஆக்டோபஸ்ஸின் வேலைதான். அதன் தோலில் நிறமி செல்கள் இருக்கு. அதைச் சுருக்கி விரித்து இந்தக் கறுப்புக் குழம்பை அது கக்குகிறது.''

''சார் இப்போ நீர் மெதுவா தெளிஞ்சு போச்சு சார். திமிங்கலம் ஓடிவிட்டது.''

''ஆக்டோபஸ் என்ன ஆச்சு?''

''பாறைக் குகையில் அது மிதந்துக்கிட்டிருக்கு சார்.''

''டேவிட், ஆக்டோபஸ் முட்டையிடறது அபூர்வமான காட்சி.''

''சரி சார். அது பெண்ணா, ஆணான்னு தெரியலையே! எப்படிக் கண்டுபிடிக்கறது?''

''அதன் வலது பக்க மூன்றாவது கையின் நுனி, ஸ்பூன் மாதிரி இருந்தால் அது பெண்.''

''சார் அப்படியெல்லாம் இல்லே சார். அதனால இது ஆண் ஆக்டோபஸ்தான். இப்படியே கொஞ்ச தூரம் இடதுபக்கமா போய்ப் பார்க்கிறேன் சார்.''

சிறிது நேரத்திற்குப் பிறகு டேவிட் பேசினார்.

''சார் இதோ இன்னொரு ஆக்டோபஸ் பாறை குகைக்குள் இருக்கு சார். சார் அந்தப் பாறையின் மேல் பக்கம் என்னமோ தோரணம் தோரணமா படுக்க வாட்டில் இருக்கு சார்! ஆக்டோபஸ் அது மேல தண்ணியை வாரி வந்து தெளிக்கிறது சார்!''

''டேவிட் அது பெண் ஆக்டோபஸாகத்தான் இருக்கும். தோரணமெல்லாம் அதன் முட்டைகள். தன் முட்டை


களை ஒரு பிசினால் ஒட்டி தோரணமா மிதக்க விட்டிருக்கு.''

''சார் அதெல்லாம் முட்டைகளா! அரிசி மாதிரி இருக்கே ஒரு சரத்தில் சுமார் ஆயிரம் முட்டை இருக்கும் போல இருக்கு. அப்படிப் பார்த்தால் மூன்று லட்சம் முட்டைக்கு மேல் இருக்கும் போல இருக்கே!''

''ஆமாம் டேவிட். இரண்டு வார காலத்தில் இதை இட்டு சரமாக ஒட்டித் மிதக்க விடும். முட்டைகள் வெளிவர ஐந்து வாரம் ஆகும். அதுவரை இந்த முட்டைகள் மீது தொடர்ந்து தண்ணீர் தெளித்துக் கொண்டே இருக்கும். இரவும் பகலும் இடைவிடாது இது நடக்கும். முட்டைகள் வளர இதில் இருந்து ஆக்ஸிஜன் கிடைக்கிறது.''

''முட்டையிட இரண்டு வாரம். நீர் பாய்ச்ச ஐந்து வாரம். ஆக ஏழு வாரம் வரை பெண் ஆக்டோபசுக்கு யார் உணவு தருவார்கள்?''

''யாரும் தர மாட்டார்கள். அதனாலும் போய் இரை தேட முடியாது. அதனால் அது இந்த ஏழு வாரம் வரை பட்டினிதான். இந்த ஒய்ச்சல் தாங்காது பட்டினியையும் தாங்காது அம்மா ஆக்டோபஸ் இறந்து விடும். தப்பிப் பிழைப்பவை அதிசயம்.''



''என் நாற்காலியின் கால்களைக் காணோமே! யாராவது பார்த்தீங்களாடா?''

குட்டிகள் வெளிவந்ததும் இன்றோ நாளையோ இறந்து விடப் போகும் அம்மா ஆக்டோபசுக்காக ஒருகணம் கலங்கிய டேவிட், சாப்பிடுவதற்காக மேல மிதந்து வரத் தொடங்கினார்!

## அறிவியல் உண்மைகள் :

★ ஆக்டோபஸ் என்பது கடல் சிலந்தி, பேய் மீன், கணவாய் மீன் என்று பல பெயர்களால் அழைக்கப் படுகிறது. இது மோலுஸ்கஸ் MOLLUSK இனத்தைச் சார்ந்தது.

★ இதற்கு ஆதிக்க உணர்வு அதிகம். தனது எல்லைக்குள் அத்து மீறலைப் பொறுத்துக் கொள்ளாது.

★ ஆக்டோபஸ் டமாரச் செவிடு. அதற்குக் காது கேட்காது!

★ கூழால் ஆனது போல் இதன் உடல் அமைப்பு. அதனால் எந்தச் சிறு ஓட்டை வழியாகவும் இது தன் உடலை வழுக்கித் துருத்திக் கொண்டு நுழைந்து தப்பி விடும்!

★ எட்டுக் கைகளிலும் உறிஞ்சு கரப்பிகள் இருக்கும். ஒரு கையில் சுமார் 240 கரப்பிகள் கூட இருக்கும்.

★ அம்மா ஆக்டோபஸ் இரண்டு வாரங்களில் மூன்று இலட்சம் முட்டைகளை இட்டு சரமாகக் ஒட்டி பாறையின் மேல் பக்கம் வைத்து தொங்க விட்டு ஆறு வார காலம் நீர் தெளித்து வளர்க்கும். இந்தப் பணி முடியும் வரை பட்டினி, கடின உழைப்புத் தாங்காது குஞ்சுகள் வெளிவந்ததும் அம்மா ஆக்டோபஸ்கள் பெரும்பாலும் இறந்து விடும்.

★ தோலில் உள்ள 'நிறமி'யால் வண்ணக் கலவைகளை வெளிப் படுத்தி இது எதிரிகளை பயப்படுத்தி விரட்டும்.

★ வீடுகளில் தொட்டிகளில் வளர்க்கக்கூடிய அளவுக்கு சில இனங்கள் சாதுவானவை.

★ ஆஸ்திரேலியாவில் வசிக்கும் இனம் மட்டுமே மனிதனுக்கு ஊறு விளைவிக்கக்கூடியது.

# கேளுங்கள் சொல்லப்படும்



★ ஜானகி ஜெயசந்தர், புதுடில்லி.

பழைய டில்லியை நைசாமுதீன் என்று குறிப்பிடுகிறார்கள் என்றும், புது டில்லியைக் கட்டியவர் எட்வின் லட்யன்ஸ் என்ற பிரிட்டிஷ்காரர் என்றும் கோகுலம், அக்டோபர் 92 இதழின் 26 ஆம் பக்கத்தில் கூறியிருக்கிறீர்கள்?

நைஜாமுதீன் கூட புதுடில்லியின் ஒரு பகுதியே. பழைய டில்லி என்பது ஷாஜ ஹான் பாத். (செங்கோட்டை சாந்தினி சௌக் அடங்கியது). எட்வின் லட்யன்ஸ் பிரிட்டிஷ்காரர் அல்ல. பிரெஞ்சுக் காரர்.

சேரநம்பி அளித்த பதில் 1952 ஆம் ஆண்டு டில்லியில் உள்ள பிரிமியர் புக்டிப்போ அரசாங்க செய்தித் துறை சார்பில் வெளியிட்ட டில்லி கையேடு என்ற வெளியீட்டின் தகவல்களை அடிப்படையாகக் கொண்டது. ஆனாலும் இன்று நடைமுறையில் உள்ள நிலை குறித்து நீங்கள் எழுதியுள்ளதே சரியாக இருக்கும்.

★ டி. ஆர். லக்ஷ்மி நாராயணன், ஷியாம் நிலையம், 63881

அக்டோபர் கோகுலம் இதழின் 26ஆம் பக்கத்தில் காவனூர் வானிலை ஆராய்ச்சிக் கூடம் என்று குறிப்பிட்டுள்ளது, காவனூர் வானியல் ஆராய்ச்சிக் கூடம் என்றல்லவா இருக்க வேண்டும்?

உண்மைதான். பதிலின் முன் பகுதியில் சரியாகத்தான் கொடுக்கப்பட்டது. பின் பகுதியில்தான், வானியல் என்பதற்குப் பதில் வானிலை என்று தவறாகக் குறிப்பிடப்பட்டு விட்டது. தவறைச் சுட்டிக்காட்டியதற்கு நன்றி.

★ வெ. கருவியப்பன், சாத்தம்பட்டி.

பறவைகள் அதிக தூரம் எத்தனை தொலைவு பறந்து போகும்?

பொதுவான கேள்வியாக இருக்கிறதே! ஆர்டிக்டெர்ன் என்ற ஒரு பறவை 22,530 கி.மீ. தொலைவு பறந்து சென்றுள்ளதாக கின்னஸ் சாதனை கூறுகிறது!

★ வெ. பூமாலை, காத்தவராயன்பட்டி.

இராஜாஜி சிறுவர்களுக்காக சிறு

**சேரநம்பி**



கதைகள் மட்டும்தான் எழுதியிருக்கிறாரா?

ஓர் அறிவியல் புத்தகமும் எழுதியிருக்கிறார். இதன் பெயர் ''தாவரங்களின் இல்லறம்''. இதை வெளியிட்டோர் அல்லயன்ஸ் கம்பெனி, சென்னை - 4. மாணவர்களுக்காக எழுதப்பட்ட இந்தப் புத்தகத்திற்கு முன்னுரை வழங்கியிருப்பவர் யார் தெரியுமா? ரசிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியார்!

★ எஸ். தட்சிணாமூர்த்தி, நாகலூர்.

**விமானம் தீப்பிடித்தாலும் எரிந்து கருகாத ''கறுப்புப் பெட்டி''யின் முக்கியத்துவம் என்ன?**


இதன் பெயர்தான் கறுப்புப் பெட்டியே தவிர இதன் உண்மை நிறம் கறுப்பு அல்ல. ஒவ்வொரு விமானத்திலும் இரண்டு பெட்டிகள் இருக்கும். ஒன்று காக்பிட் வாய்ஸ் ரெக்கார்டர். இது பைலட்டின் அறையில் இருக்கும். அங்கு நடக்கும் எல்லாப் பேச்சுகளையும் இது பதிவு செய்யும். விமான தளத்துடன் ரேடியோ தொடர்பு நின்று போன பிறகும் கூட, விமானியின் அறையில் பேசப்படும் பேச்சுக்களை இது ஒலிப் பதிவு செய்யும். இரண்டாவது பெட்டி ''பிளைட் டேட்டா ரெக்கார்டர்''. இது விமானத்தின் இயந்திரங்களில் ஏற்படும் எல்லாக் கோளாறுகளையும் பதிவு செய்து கொள்ளும். அத்துடன் பறக்கும் திசை, உயரம், வேகம், சீதோஷ்ண நிலை போன்றவைகளையும் கூட இவை பதிவு செய்து வைத்துக் கொள்ளும். இவை எரியாதவை என்பதுடன் எத்தனை உயரத்தில் இருந்து விழுந்தாலும் உடைந்து நொறுங்காதவை. பெரிய 'பிரட் பாக்ஸ்' அளவு இவை இருக்கும்.



★ து. சுமதி, து. கோமதி, திண்டுக்கல்.

**சந்திர மண்ணின் நிறம், என்ன?**

லூனா 16தான் 35 செ.மீ. ஆழம் தோண்டி சந்திர மண்ணைக் கொண்டு வந்தது. இது எடுத்து வந்த மண்ணின்



நிறம் கருஞ்சாம்பல். சூரிய ஒளி பட்டதும் இது நிறம் மாறுகிறதாம்!

★ சா. லூர்து சாமி, பெரம்பலூர்.

**என் நண்பன் ஒருவன் தன் வீட்டு பொம்மைக் கொலுவில் பத்து காசு, இருபத்தைந்து காசு நாணயங்களை வைத்து ஒரு மண்டபம் செய்து வைத்திருந்தான். பத்து காசு அலுமினிய நாணயத்தில் ஒட்டை போட்டு ஒரு வண்டி செய்திருந்தான். இதெல்லாம் தவறு என்று என் தந்தை கூறுகிறார். எப்படித் தவறாகும்?**

உன் தந்தை விஷயம் தெரிந்தவர்.





நாணயங்களும் ரூபாய் நோட்டுக்களும் கொடுக்கல் வாங்கலுக்கு என்றே உருவாக்கப்பட்டவை. கொடுக்கல் வாங்கல் தவிர மற்ற எவைகளுக்கும் இவற்றைப் பயன்படுத்துவது சட்டப்படி குற்றமாகும். இவற்றை உருக்குவதோ, ஓட்டை போடுவதோ, இவைகளை வைத்து துலாபாரம் செய்வதோ, மாலையாகக் கட்டிப் போடுவதோ சட்டப்படி குற்றமாகும். நம் நாட்டில் யாரும் கண்டு கொள்வது இல்லை.

★ **கு. உஷா ராணி, பல்லடம்.**

**ஆஸ்கார் அவார்டு வாங்கியவர்களில் வயதில் மிகவும் சிறியவர் யார்?**

ஷிர்லி டெம்பிள் (SHIRLEY TEMPLE) என்ற சிறுமி. ஆஸ்கார் அவார்டை வாங்கிய போது இவளுக்கு வயது மூன்று! இது ஓர் கின்னஸ் சாதனையும் கூட.



★ **ஜி. சாமுவேல், பாளையம்கோட்டை.**

**விண்வெளிப் பயணத்தில் மெர்குரி கேப்சூல் என்கிறார்களே, இது எதற்குப் பயன்படும்? இதில் பாதரசம் இருக்குமா?**

இதில் விண்வெளி வீரர்களுக்குத் தேவையான பொருள்கள் எல்லாம் இருக்கும். இதற்கும் பாதரசத்திற்கும் சம்பந்தமே கிடையாது. கிரேக்க புராணக் கதைகளில் இறக்கைகள் படைத்த அதிவேகமாகப் பறக்கக்கூடிய தேவதையின் பெயர் மெர்குரி. அந்தப் பெயரை இதற்கு வைத்திருக்கிறார்கள். அவ்வளவே.

★ **வெற்றி. வேங்கைவேலன், நாமக்கல்.**

**சந்திரனின் மறுபக்கத்தை நம்மால் காண முடியுமா? முடியாது என்றால் ஏன் முடியாது?**


கண்டிப்பாக முடியாது. சந்திரன் தனது பின்பக்கத்தைக் காட்டாமலேயே பூமியைச் சுற்றி வருகிறது. அதனால் தான் நம்மால் (பூமியால்) சந்திரனின் பின்பக்கத்தைக் காண முடிவதில்லை.



## கேள்வி கேட்போர்

### கவனத்திற்கு...

**ஒரு கடிதத்தில் ஒரு கேள்வியை மட்டுமே கேட்கலாம். முழு முகவரியையும் தர வேண்டும். அனுப்ப வேண்டிய முகவரி : ஆசிரியர், கோகுலம், 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.**



# நோட்டைக் காணோம்!

கணக்கு ஆசிரியர் கதிரேசன் வகுப்பிற்குள் நுழைந்தார்.

"வணக்கம் ஸார்."

"வணக்கம். உட்காருங்க."

மாணவர்கள் அமைதியாக அமர்ந்தனர். குண்டூசி போட்டால் கூடக் கணீர் என்று ஒலி கேட்கும். வகுப்பில் அவ்வளவு அமைதி.

"நேற்று நான் லீவு, முந்தா நாள் கொடுத்த வீட்டுக் கணக்கை எல்லாம் போட்டிருப்பீங்கன்னு நினைக்கிறேன். எங்கே, உங்கள் வீட்டுக் கணக்கு நோட்டை எல்லாம் எடுங்க."

கையில் பிரம்போடு முன்வரிசையை நெருங்கினார்.

மூன்றாம் வரிசையில் அமர்ந்திருந்த மாணிக்கத்தின் வயிற்றில் திகில் புயல் அடிக்க ஆரம்பித்தது. வயிற்றை என்னவோ செய்தது.

கணக்கு ஆசிரியர் கதிரேசன் மிகவும் நல்லவர். மிகவும் அருமையாகப் பாடம் எடுப்பார். ஆனால் படிப்பு விஷயத்தில் மிகவும் கண்டிப்பானவர். அதுவும் தான் கொடுத்த வீட்டுக் கணக்குகளை நோட்டில் போட்டு கொண்டு வராவிட்டால் வெளுத்து வாங்கிவிடுவார்.

"என்ன இரண்டு நாளா பள்ளிக்கூடத்துக்கு வரலையா? இந்த நொண்டிச் சாக்கெல்லாம் என்கிட்டே சொல்லக் கூடாதுன்னு எத்தனை முறை சொல்லியிருக்கேன்? இன்னிக்குக் காலையிலே பள்ளிக்கூடத்துக்கு வந்ததும் முதல் வேலையா நீ வராத நாளன்று ஆசிரியர் என்னென்ன பாடங்களை எடுத்தார்னு மத்தவங்களைக் கேட்டு தெரிந்து கொள்ளணும்னு சொல்லி இருக்கேன் இல்லே...? நீட்டு கையை."

நடுங்கிக் கொண்டே வீரமலை கையை நீட்டினான். அவன் கையில் 'பளீர்' என்று அடி விழுந்த பொழுது மாணிக்கத்தின் உடம்பு அவனை அறியாமல் நடுங்கியது.

"ராஜலிங்கம் உன் நோட்டைக் கொண்டா இப்படி "

ராஜலிங்கம் நோட்டைக் கொடுத்தான். ஆனால் அதில் கணக்குப் போட்டிருக்கவில்லை. ஆசிரியர் இன்றைக்கும் லீவில் இருப்பார். அதனால் நாளைக்குப் போட்டுக் கொள்ளலாம் என்று கவனக் குறைவாக இருந்துவிட்டான்.. ஆனால்...

"கணக்குப் போடாம ஏன்டா பள்ளிக்கூடத்துக்கு வரே? நீங்க எல்லாம் நல்லா படிக்கணும்தானே அரசாங்கம் உங்களுக்கு மதியச் சாப்பாடு போடுது? இலவசமாப் புத்தகம் கொடுத்துச் சீருடை கொடுக்குது? இவ்வளவு வசதி செஞ்சு கொடுத்தும் படிக்க வலிக்குதா உனக்கு? படிப்பிலே அக்கறை இருந்தால் இப்படி வந்து மரம் மாதிரி நிப்பியா?"

தா. ஜானகி

கோபத்தோடு ராஜலிங்கத்தை அடித்த போது... மாணிக்கத்தின் மார்பு மாவு அரைக்கும் மிஷினைப் போல அடித்துக் கொண்டது.

இதோ - இதோ... ஆசிரியர் அவன் இருக்கும் வரிசையை நெருங்கி விட்டார்.

'' 'கணக்கைப் போட்டு விட்டு மறந்து போய் அவசரத்தில் வீட்டிலே வைத்து விட்டேன்' என்று அவன் சொன்னால் நம்ப மாட்டாரே! 'இந்த வயசிலே அப்படி என்ன ஞாபகமறதி?' என்று கண்டிப்பதோடு... 'என் சைக்கிளைத் தர்றேன்... உங்க வீட்டுக்குப் போய் நோட்டை எடுத்துக் கொண்டு வா' என்று சொல்வார். அவன் நோட்டு வீட்டில் இருந்தால்தானே கொண்டு வர...? அதனால் தப்பிக்க இந்தப் பொய்யைச் சொல்ல முடியாது...

'தனக்கு நோட்டு வாங்கக் கொடுத்த காசை வீட்டுக்குத் தெரியாம செலவழித்து விட்டேன்...' என்கிற உண்மையைச் சொல்ல முடியுமா? அதுவும் முடியாது.

என்ன செய்வது?

இதோ... ஆசிரியர்... அவன் அருகில் வந்து நோட்டைக் கேட்கிறாரே...!

இந்தப் பாழாய்ப் போன கால்கள் ஏன் இப்படி வெடவெடவென்று ஆடித் தொலைக்குது? என்ன சொல்றது? எப்படித் தப்பிக்கக்கலாம்? ஆ... இப்படித்தான் சொல்லப் போறேன்!

மாணிக்கம் டெஸ்க்கை இறுக்கமாகப் பிடித்துக் கொண்டு சொல்லலானான் : ''சார்! என் வீட்டுக் கணக்கு நோட்டு தீர்ந்து போச்சு. அதனால முந்தா நாள் சாயந்திரமே புது நோட்டு வாங்கிக் கணக்குப் போட்டு நேத்திக்கே பள்ளிக்கூடத்துக்குக் கொண்டு வந்து விட்டேன்... இப்ப... என் பையைப் பார்த்தா... அந்தப் புது நோட்டைக் காணோம் சார்...''

சொல்லும்பொழுதே மாணிக்கத்திற்குத் தொண்டையை அடைத்தது. கண்களில்கூட நீர் எட்டிப் பார்த்தது.

ஒரு வினாடி ஆசிரியர் அவனையே கூர்ந்து நோக்கினார். என்ன நினைத்தாரோ... அவனை அடிக்கவில்லை...

''சரி... நாளைக்குப் புது நோட்டு வாங்கிக் கணக்கையெல்லாம் போட்டுக் கொண்டு வந்து சேர்.''

மாலையில் பள்ளிக்கூடம் விட்டதும் கணக்கு ஆசிரியர் வரச் சொன்னதாகத் தகவல் வரவே மாணிக்கம் சென்றான். அவர் மட்டுமே தனியாக இருந்தார்.

''வா, மாணிக்கம்! புதிய கணக்கு நோட்டு காணாம போயிடுச்சன்னு சொன்னே இல்லே...! இந்தா, உனக்காக நான் நோட்டு வாங்கிக் கொண்டு வந்திருக்கேன், வச்சுக்கோ!'' - புதிய கணக்கு நோட்டு ஒன்றைக் கணக்கு ஆசிரியர் கதிரேசன் நீட்டினார். அட்டையில் உள்ள கபில்தேவ் அவனைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தார்.

திடுக்கிட்டான் மாணிக்கம். கணக்கு நோட்டுக்காக அவன் தன் அம்மாவிடம் நான்கு ரூபாய் வாங்கிக் கொண்டு வந்தான். இரண்டு ரூபாய்க்கு வாங்கித் தின்று விட்டான். மீதி இரண்டு ரூபாயைக் கோலி ஆடித் தோற்று விட்டான்.



இந்த உண்மை அவனைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது. காலையில் ஆசிரியரின் அடியிலிருந்து தப்பித்துக் கொள்ள... வாய்க்கு வந்த பொய்யைச் சொல்ல... அதை உண்மை என்று நம்பி... ஆசிரியர் தனக்காக - தன் படிப்புக்காக - நோட்டு வாங்கியுள்ளதைக் கண்டு - திகைத்து - பதில் கூடப் பேச முடியாமல் நின்றான் அவன்! அவன் இதயத்தின் முரட்டுக் கதவுகள் மெதுவாக... மென்மையாகத் திறக்கப் பட்டன!

''வாங்கிக்கோ மாணிக்கம். உன்னைப் பற்றி விசாரிச்சேன்... நீ அப்பா இல்லாத பையன்... அம்மாதான் உன்னைக் காப்பாத்தறாங்கன்னு கேள்விப் பட்டேன். எனக்கும் அப்பா இல்லை மாணிக்கம். உன்னை மாதிரி நான் இருக்கும் போது அவர் இறந்துட்டாரு... என்னோட அம்மாதான் கஷ்டப்பட்டு என்னைப் படிக்க வைச்சாங்க. அந்தக் கஷ்டத்தை உணர்ந்து படிப்பிலே அதிக அக்கறை எடுத்துப் படிச்சேன். இன்விக்கு நல்ல நிலையிலே இருக்கேன். உங்கிட்டே திறமை இருக்கு. நீ நல்லாப் படிச்சு, என்னைப் போல இல்லே... என்னைவிடப் பெரிய வேலைக்கு வரணும்னு விரும்பறேன். வகுப்பிலே தான் நான் உனக்கு ஆசிரியர். மத்த சமயத்திலே நீ எப்ப வேண்டுமானாலும் எங்கிட்டே வந்து உதவி கேட்கலாம். என்னால முடிஞ்சதை நான் உனக்குச் செய்யறேன்!'' - ஆசிரியர் அவன் முதுகை அன்போடு தடவினார். அவன் மேனி சிலிர்த்தது.

இப்படிப்பட்ட உத்தமரையா ஏமாத்தினோம்? இவரிடமா பொய் சொன்னோம்? வாழ்வில் முதன் முதலில் தான் செய்த தவறை அப்பொழுதுதான் உணர்ந்தான் மாணிக்கம். அன்பான அம்மாவிடம் பொய் சொல்லிக் காசு வாங்கி, இஷ்டம் போலச் செலவழித்து... சமயங்களில் ஆசிரியர்களிடமும் பொய் சொல்லிய தன் செய்கையை



நினைக்க நினைக்க அவனுக்கே வெட்க மாக இருந்தது. இனி... இனி... இந்த மாதிரி நடக்கக் கூடாது... நடந்து கொள் ளவும் மாட்டேன்... உள்ளத்து வேதனை விழிகளில் நீராக வெளிப்பட்டது.


''சார்... சார்... என்னை மன்னிச் சிடுங்க! இனிமே... இனிமே... நல்லாப் படிச்சு உங்களை மாதிரியே வாழ்க் கையிலே முன்னேறுவேன்... நீங்கதான் எனக்கு வழிகாட்டி... இது உறுதி!'' - என்று கூறியபடி நோட்டைக் கண்களில் ஒற்றிக் கொண்டான். உள்ளத்து அழுக் குகள் கரைந்து இனிய நற்பண்புத் தென் றல் இதமாக வீசுவதை உணர்ந்தான்! திருந்திய புது மாணிக்கமாக விடை பெற்றுக் கொண்டு கிளம்பினான்.

''மாணிக்கம்! உங்கம்மா உன்னைப் பத்தி என்கிட்டே சொல்லி வருந்தப்பட் டாங்க. அவங்க எத்தனையோ முறை அடிச்சும், திட்டியும், கண்டிச்சும் நீ திருந் தலைன்னு சொல்லிக் கண்ணீர் விட் டாங்க. உன்னைத் திருத்த... உன் மனசை மாற்ற எனக்கு இந்த வகையான அன்பு வழிதான் தெரிஞ்சுது. நாலு ரூபாய்க்கு நான் நோட்டு வாங்கிக் கொடுத்த நிகழ்ச்சி உன்னைத் திருத்தியதை அறிஞ்சு உண்மையிலேயே சந்தோஷப் படறேன், மாணிக்கம். நீ மாத்திரம் இல்லே... உன்னைப் போன்ற மாண வர்கள் பெற்றோர்களிடம் பொய் சொல் லிக் காசு வாங்கி இஷ்டம் போல் செல வழிக்கிறாங்க... அதுவும் கல்வி அறிவு இல்லாத பெற்றோர்களிடம்... இதைக் களையெடுத்தால்தான் கல்விப் பயிர் செழித்து வளர்ந்து உங்களைப் பண்பும் ஒழுக்கமும் உள்ள மாணவர்களாக மாற் றும், மாணிக்கம்! உன் உள்ளத்துக் களை யை நீக்கி விட்டேன். இனி - நீ நன்றாகப் படித்து... ஒளிமயமான எதிர்காலத்தை அமைத்துக் கொள்வாய்!'' என்று மனத்திற்குள் கூறிக் கொண்டார் அந்த அன்பு ஆசிரியர்!

வைரத்தை காரட் என்ற நிறுத்தல் அளவையின்படி மதிப்பிட்டு வருகிறார் கள். காரட் என்பது முற்காலத்தில் கிழை நாடுகளில் ஒருவித துவரை போன்ற தானியத்தால் எடை போடப்பட்ட நிறுத் தல் அளவைக்குப் பெயர். இக்காலத்தில் தானியத்தால் எடை போடுவது இல்லை என்றாலும் பழைய பெயரே நிலைத்து விட்டது. ஒரு காரட் என்பது மூன்று தானியங்களுக்குச் சற்றுக் கூடுதலான நிறையாகும்.

- க. கோகிலவாணி, சங்கமங்கலம்.




டயரி தெரியும். ப்ளூ டயரி தெரி யுமா? எந்தவிதமான ஒளிவு, மறைவு மில்லாமல் நடந்தது நடந்தபடியே எழுதப்படும் நாட்குறிப்பையே ஆங்கி லத்தில் ''ப்ளூ டயரி'' என்று அழைக் கிறார்கள். லெனின் நாட்குறிப்பு ப்ளூ டயரி என்றே அழைக்கப்படுகிறது.

- என். ஆர். சுப்பிரமணியம்,
பூனாம்பாளையம்.

# பணப்பை

ஒரு நாள் முல்லா கடவுளைப் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தார். ''இறைவா! எனக்கு நிறையப் பணத்தைக் கொடுத்து அருள்வாயாக'' என்பதே அவர் பிரார்த்தனை.

இவ் வேண்டுகோளை அவ்வழியாகப் போய்க் கொண்டிருந்த வட்டித் தொழில் செய்யும் ஒருவன் கேட்டான். உடனே ஒரு பணப்பையை முல்லா உட்கார்ந்துள்ள அறையின் ஜன்னல் வழியாக, அவருடைய ஏந்திய இரு கைகளிலும் விழும்படி வீசி எறிந்தான். ஒரு வேடிக்கைக்காகத்தான் இப்படிச் செய்தான்!

அடுத்த நிமிடமே ஹா... ஹா என்று சிரித்தபடியே முல்லா அமர்ந்திருந்த அறையினுள் புகுந்து பணப்பை தன்னுடையதுதான் என்றும் அதைத் திருப்பித் தரும்படியும் கேட்டான்.

முல்லா, ''நான் இறைவனிடம் முறையிட்டுக் கொண்டேன். அவர் மனமிரங்கி எனக்குக் கொடுத்தார். அவர் உன்னைத் தன் ஏஜெண்டாகப் பயன்படுத்தினால், அது அவர் விருப்பம்'' என்று தர மறுத்தார்.

எனினும் வட்டித் தொழில் செய்பவன் ''ஐயோ! அது என்னுடைய பணப்பை. உன்னுடைய பிரார்த்தனையை ஜன்னல் வழியே கேட்டேன். உன்னை வியப்பில் ஆழ்த்த, விளையாட்டிற்காக உன் கையில் போட்டேன். இப்போது அதைக் கொடுத்து விடு'' என்று கெஞ்சினான்.



முல்லா மறுத்து விட்டார். உடனே அவன் சரி வாருங்கள். ''வழக்கு மன்றத்திற்குப் போகலாம். நீதிபதியிடம் சொல்ல வேண்டியதைச் சொல்லுங்கள்'' என்றான்.


''நான் நடந்து வர மாட்டேன். எனக்குச் சவாரி செய்யக் கழுதை ஒன்று கொண்டு வா'' என்றார் முல்லா.

அவன், கழுதை ஒன்றுக்கு ஏற்பாடு செய்தான்.

''வழக்குமன்றத்திற்கு வர வேண்டுமானால் நல்ல ஷெர்வானியும் காலணிகளும் வேண்டும்'' என்றார் முல்லா.

வட்டித் தொழில் செய்பவன் அவற்றையும் வாங்கிக் கொடுத்தான். இருவரும் நீதிமன்றம் சென்றனர். வட்டிக்காரன் வழக்கைத் தொடுத்தான். நீதிபதி முல்லாவைப் பார்த்து ''வழக்கைப் பற்றித் தாங்கள் சொல்ல வேண்டியதைச் சொல்லுங்கள்'' என்றார்.

உடனே முல்லா, ''நீதிபதி அவர்களே! இவ் வட்டிக்காரனின் தொழிலே இதுதான். மற்றவர்களின் உடைமைகளைத் தன்னுடையது என நா கூசாமல் சொல்லுவான். இதோ இருக்கும் இந்தக்



கழுதையைக் கூடத் தன்னுடையதுதான் எனச் சொல்லவும் தயங்க மாட்டான்'' என்றார்.

''ஐயோ... உண்மையில் கழுதை என்னுடையதுதானே?'' என ஓலமிட்டான் வட்டிக்காரன்.

முல்லா, ''நீதிபதி அவர்களே இது மட்டுமல்ல. இந்த ஷெர்வானி, இந்தக் காலணிகள் கூடத் தன்னுடையவை என உரிமை கொண்டாடுவான்'' என்றார்.

''ஆமாம். அவைகளும் என்னுடையவைதானே?'' என்றான் அவன்.

வழக்கு மன்றத்திலிருந்த அனைவரும் கலகலவென்று சிரித்து விட்டனர்.

உடனே நீதிபதி ''வழக்குப் பொய்யானது'' என்று வழக்கைத் தள்ளுபடி செய்தார்.

முல்லா தன் வீட்டுக்குத் திரும்பினார். கழுதை, ஷெர்வானி, காலணிகள் மூன்றையும் வட்டிக்காரனிடம் திருப்பிக் கொடுத்து விட்டார். ஆனால் பணப் பையை மட்டும் ''என் பிரார்த்தனையின் பலனாக இறைவனால் கொடுக்கப்பட்டது. எனவே கொடுக்க முடியாது'' என்று தர மறுத்து விட்டார்.

அறிவாளிகளிடம் விளையாடுவதால் ஏற்படும் விளைவு இது என்பதை அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும்.

– வெ. வரதராசன்.

''பையனுக்குச் செல்லம் அதிகமாக் கொடுத்திட்டேன்...''

''அதுக்காக உட்கார்ன்னா எம் மடியிலேயா உட்கார்றது?''

– தக்கோலம் அ. முஸ்தபா





''காக்கா... காக்கா... நீ எவ்வளவு அழகா இருக்கே தெரியுமா...? ஒரு பாட்டுப் பாடேன் கேக்கலாம்!''

(வடையைக் காலில் வைத்துக் கொண்டு) ''ஏமாறாதே... ஏமாற்றாதே... ஏமாற்றாதே... ஏமாறாதே...!''

– சீர்காழி வி. ரேவதி





## பணிவதற்கு வாருங்கள்!

மாட்டுத் தொழுவில் மரியின் மடியில்
மழலை ஏசு பிறக்கிறார் - வழியைக்
காட்ட வேண்டி மனித வடிவில்
கமல விழிகள் திறக்கிறார்!


மெய்ய ணைத்த அன்னை முகத்தை
மீண்டும் மீண்டும் பார்க்கிறார் - மெல்லக்
கைய சைத்து கால சைத்து
காற்றில் புனிதம் சேர்க்கிறார்!

உதடு பதிய அன்னை மெல்ல
உச்சி முத்தம் கொடுக்கிறார் - அந்த
உதடு பட்ட சிலிர்ப்பில் ஏசு
ஓர்சி ரிப்பைத் தொடுக்கிறார்!

தேவ தேவன் குழந்தை வடிவில்
சிரிக்கும் காட்சி பாருங்கள் - உங்கள்
பாவம் தீர பரமன் பாதம்
பணிவ தற்கு வாருங்கள்!

- மகுடேசுவரன்.





## வழிகாட்டும்!


பாவங்கள் பெருகிய உலகினைக் காக்க
பாலகன் பிறந்து வந்தார்!
தீயவர் திருந்திட தீமைகள் அகன்றிட
தேவன் மனங் கனிந்தார்!

ஆயிரம் காலத்துக் கொருமுறை நிகழும்
அற்புதம் அவர் பிறப்பு!
தாய்மனம் கொண்டு தவறுகள் பொறுக்கும்
தர்மத்தின் தனிச் சிறப்பு!

பாவிகள் நடந்த பாதையைத் திரும்பிப்
பார்த்திடச் சொன்னவ ராம்
ஆவிதுடித் திடும்வேளையி லும் நல்ல
அன்பை விதைத் தவராம்!

சிலுவையில் அவரை அறைந்தனர் கொடியவர்
சிறிதும் கலங்க வில்லை!
அறியா திவர்கள் பிழைசெய் கின்றார்
ஆதரிப்பீர் என்றார்!
ஒருமகன் ஏசு பெருமகன் நாமம்
உலகுக்கு ஒளிகூட்டும்
திருமகன் பிறந்த திருநாள் கிறிஸ்துமஸ்
சேவைக்கு வழிகாட்டும்!

- வெற்றியூர். சுப. திருஞானம்



# ஊனம் தடையா?



''நோட்டீஸ் போர்டைப் பார்த்தியா சுதா...? எல்லாப் போட்டியிலும் நீதான் முதல் மாணவன்... ஓவியப் போட்டி, கட்டுரைப் போட்டி அனைத்திலும் இந்த வருடமும் நீதான் முதல்... கடவுள் உனக்கு நிறையத் திறமைகளைத் தந்துள்ளார்.''

- சேகர் முகம் மலர, கண்கள் பளபளக்க, மகிழ்ச்சியுடன் நண்பனைப் பாராட்டினான்.

''என்ன இருந்து என்ன பிரயோஜனம் சேகர்...? நான் முடம்தானே...?''

- சுதாகர் சோகமான குரலில் பேசினான்.

''...இறைவன் ஏன் என்னை இப்படிப் படைக்க வேண்டும்?''

''சுதா... உன்னோட கேள்விக்கு என்னால் சரியான பதில் சொல்ல முடியும்... இன்று மாலை பள்ளி விட்டதும் என்னோட வா... நான் என் சைக்கிளில் உன்னை ஓர் இடத்திற்கு அழைத்துப் போகிறேன்...''

எங்கே என்று சுதாகர் கேட்க நினைத்த போது, மதியம் வகுப்புக்கு மணியடிக்கவே பேசாமல் போனான்.

மாலை பள்ளி விட்டதும் சேகர் தன் சைக்கிளில் மெதுவாக சுதாகரை ஏற்றிக் கொண்டு ஊருக்குள்ளே இருந்த பூங்கா ஒன்றுக்கு அழைத்துப் போனான்.

பூங்காவில் இருந்த இரு பூச்செடிகளைக் காட்டினான்.

ஒரு செடி செழிப்பாக, நிறையக் கிளைகளுடன் இருந்தது... இன்னொரு செடி சாதாரணமாக இருந்தது!


சுதாகருக்கு ஒன்றுமே புரியவில்லை. இதை ஏன் சேகர் காட்டுகிறான்...? - குழப்பமாக இருந்தது அவனுக்கு.

சேகர் புன்சிரிப்புடன் சொன்னான் : ''சுதா! இந்தச் செடி மற்ற செடிகளைவிட அதிகக் கிளைகளுடன் செழிப்பாக வளர என்ன காரணம் தெரியுமா...? இதன் கிளைகளை நுனியில் வெட்டி விடுவார்கள். அதனால் அது மேலும் நேராக வளர இடமின்றிப் பக்கவாட்டில் கிளை விடுகிறது... அதுதான் இப்படிக் கப்பும் கிளையுமாக வளர்ந்திருக்கு! இதுபோலத்தான் நீயும்... உன்னை இறைவன் ஊனமாகப் படைத்ததனாலேயே - உன் கவனம் வேறு வழிகளில் திரும்பியுள்ளது. கட்டுரை, ஓவியம் என்று உன் திறமைகளை வளர்த்துக் கொண்டாய்... புரிகிறதா? இனி மேல் உன் குறைகளை நினைத்து மனம் தளராதே! மற்றவர்களிடம் இல்லாத உன் திறமைகளை எண்ணிப் பெருமிதம் கொள்! ஒரு குறைவுமின்றி - திறமையில்லாத ஒருவனைவிட, ஊனத்துடன் - அதிகத் திறமைகளுடன் உள்ள உன் நிலைமை மேலல்லவா?''

சேகர் பேசப் பேச... சுதாகரின் உள்ளத்திலுள்ள தாழ்மை உணர்வுகள் மெல்ல மெல்ல அகன்று - முகம் பிரகாசமானது.

தெளிவான மனத்துடன், ஓர் இராணுவ வீரன் துப்பாக்கியைப் பிடிப்பது போல, தன் ஊன்றுகோலைக் கம்பீரத்துடன் எடுத்துக் கொண்டான்.

- ஜெயஸ்ரீ ராஜ்குமார்






**நீங்களே செய்யலாம் - வாண்டு மாமா - பக். 116 - ரூ. 30/-; கங்கை புத்தக நிலையம், தீனதயாளு தெரு, தி. நகர், சென்னை - 600 017.**

அதிகச் செலவு இல்லாமல் வீட்டில் உள்ள பொருள்களை வைத்துக் கொண்டே, தம்பி தங்கைகள் தங்களுக்குப் பயன்படும் பல பொருள்களை எப்படிச் செய்வது என்பதை மிக அழகாக விளக்கப் படங்களுடன் எடுத்துக் கூறியிருக்கிறார் ஆசிரியர். பயனுள்ள பொழுது போக்குக்கு ஒரு சிறந்த செய்முறை வழிகாட்டி. அயல் நாட்டுப் புத்தகத்தைப் பார்ப்பது போன்ற ஒரு பிரமிப்பு. பரிசளிக்க ஏற்ற புத்தகம்.

**ஒரு செடியில் பூத்த மலர்கள் - புலவர் அண்ணாமலை - பக். 92 - ரூ. 12/-; இலக்குமி நிலையம், 32, அம்மையப்பன் தெரு, இராயப்பேட்டை, சென்னை - 600 014.**

கல்வியிலும், விளையாட்டிலும் தனது திறமை இன்மையினால் ஏற்படும் தோல்விகளுக்குச் சேகரைத் துன்புறுத்த விழையும் முருகனும், குணசீலனும் சேகரின் தாயார் மனத்தில் ஜாதி வெறுப்பை வளர்க்கிறார்கள். சேகரின் முன்னேற்றம் பாதிக்கப்பட்டாலும் அவனுடைய தந்தை சேகருக்குத் துணையாக இருக்கிறார். தாயின் எதிர்ப்புக்கு இடையே, என். சி. சி. பயிற்சியில் சிறப்புப் பெற்று, குடியரசுதின அணிவகுப்பில் பங்கு கொள்ள டில்லி போகும் சேகர், ஒரு சிங்கின் அன்பைப் பெறுகிறான். அவனுக்கு உடல்நிலை பாதிக்கப்படும் போது அவரே உதவுகிறார். இறுதியில் சேகரின் தாய் ''இந்தியர் எல்லோரும் ஓர் இனமே'' என்பதை உணர்கிறாள்.

இது ஏவி.எம் அறக்கட்டளையின் வெள்ளிப் பதக்கம் பரிசு பெற்ற நாடகம் என்று குறிப்பிடுவதே இதன் பெருமையை உணரப் போதுமானதாகும். சிறுவர்க்கான புத்தகம் என்பதால் ஓரிரு படங்களையும் சேர்த்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். படிக்க வேண்டிய புத்தகம்.

**முப்பெருங் காப்பியக் கதைகள் - இந்திரா சுப்பிரமணியம் - பக். 108; ரூ. 13.50; ப்ரியா நிலையம், 32, அம்மையப்பன் தெரு, இராயப்பேட்டை, சென்னை-600 014.**

காப்பியங்களில் கிளைக் கதைகளாக இடம் பெற்றுள்ள மனுநீதிச் சோழன், கள்வனான கணவனைக் கொன்ற பத்திரை, அமுதசுரபி கிடைக்கப் பெற்ற ஆபுத்திரன், சிபிச் சக்கரவர்த்தி, கண்ணகி, ஆதிரை, அறியாமையால் கீரிப்பிள்ளையைக் கொன்ற கதை, பராசரன் கதை, பொற்கைப் பாண்டியன் கதை ஆகிய ஒன்பது கதைகள் இந்தப் புத்தகத்தில் மிக அழகாகவும் சுவையாகவும் தரப்பட்டுள்ளன. பயன்தரும் புத்தகம்.

**பொய் சொல்லக் கூடாது பாப்பா - கௌசல்யா ரங்கநாதன் - பக். 96 - ரூ. 14/-; மகேசுவரி பதிப்பகம், 25-சி, தாமல்வார் தெரு, பெரிய காஞ்சிபுரம் - 631 501.**

சிறுவர் உலகுக்கும், கோகுலம் வாசகர்களுக்கும் ஏற்கெனவே அறிமுகமான ஆசிரியரின் மணியான பதினைந்து சிறுகதைகளின் தொகுப்பு. ஒவ்வொன்றும் ஒவ்வொரு பண்பை மிக அழகாக; ஆழமாக உணர்த்துகிறது. இதில் உள்ள கதைகள் பூந்தளிர், ரத்னபாலா இதழ்களில் வெளிவந் தவை என்று குறிப்பு உணர்த்துகிறது. 'பெட்டி நிறைய நோட்டு' என்ற கதை கோகுலத்தில் வெளிவந்து பலரது பாராட்டையும் பெற்ற கதை. கதை எழுதிய ஆசிரியரே இதை மறந்து விட்டது வியப்புதான்! படித்துப் பயன்பெற வேண்டிய புத்தகம். லதாவின் படங்கள் நூலுக்கு மெருகூட்டுகின்றன.

மதிப்புரைக்கு நூல்களை அனுப்புவோர், ஆசிரியர், கோகுலம், 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடு தாங்கல், சென்னை - 600 097 என்ற முகவரிக்கு இரு பிரதிகளை அனுப்ப வேண்டும். சிறுவர் நூல்களும், பொது அறிவு நூல்களும் மட்டுமே இதில் மதிப்புரை செய்யப்படும். கட்டணம் கிடையாது. நூல்களை வாங்க விரும்புவோர் நேரடியாகப் பதிப்பாளர்களுடன் தொடர்பு கொள்ளலாம். கோகுலம் அலுவலகத்துக்கு எழுத வேண்டாம்.



# சபாஷ் கீத் சேட்டீ!

**ச**மீபத்தில் பம்பாயில் நடந்து முடிந்த 51-ஆவது உலக ப்ரொபெஷனல் பில்லியர்ட்ஸ் சாம்பியன் ஷிப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் (அக்டோபர் 3) நம் நாட்டின் கீத் சேட்டீ மிகவும் அபாரமாக ஆடி இங்கிலாந்தின் மைக் ரஸல்லை 2592-718 என்ற ஸ்கோர் கணக்கில் மிகவும் எளிதாக வென்று கோப்பையைப் பெற்றார். இக் கோப்பையை வென்ற முதல் இந்தியர் இவர்தான். அதோடு மட்டுமில்லாமல், முதல் ஆசிய வீரரும் இவர்தான்.

ஒலிம்பிக்ஸில் சோர்ந்து போயிருந்த நம்மை தட்டிக் கொடுத்து உற்சாகமூட்டி தெம்பாக உட்கார வைத்திருக்கிறார் கீத்சேட்டீ. இந்தியாவுக்கே பெருமை தேடித் தந்துள்ள கீத்சேட்டீக்கு ஒரு சபாஷ் போடுவோம்!

பில்லியர்ட்ஸ் ஆட்டம் பதினைந்தாம் நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்தே விளையாடப்பட்டு வந்தது. ஃபிரான்ஸ் நாட்டின் அரசர் பதினாறாம் லூயி தமது அரண்மனையிலேயே ஒரு பில்லியர்ட்ஸ் மேஜை வைத்திருந்தார். இன்று இது உலகம் முழுவதும் பரவியுள்ளது. 1885-இல் தான் முதலாவது பில்லியர்ட்ஸ் 'அசோஸியேஷன்' நிறுவப்பட்டு தற்பொழுது இன்டர்நேஷனல் பில்லியர்ட்ஸ் மற்றும் ஸ்னூக்கர் ஃபெடரேஷன் (IBSF) என்ற பெயரில் இயங்கி வருகிறது. இன்று ஐம்பதுக்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து பில்லியர்ட்ஸ் நிபுணர்கள் உலக அளவில் விளையாடி வருகின்றனர்.

இவ் விளையாட்டு மேஜை மீது felt என்ற மிருதுவான துணி விரிக்கப்பட்டு சுருக்கமின்றி இழுத்துப் பொருத்தப் பட்டிருக்கும். மேஜையின் தளம் தரையிலிருந்த சுமார் 2½அடி உயரம். நீளம், அகலத்தைப் போல் இரண்டு பங்கு. மேஜையில் ஆறு பைகள் (Pockets) இருக்கும். நான்கு மூலைகளில் ஒவ்வொன்றும். நீளவாக்கின் இரண்டு பக்கங்களிலும் நடுவில் ஒவ்வொன்றும். மேஜையின் இரு மூலைகளில் இரண்டு புள்ளிகள் (Spots) வைக்கப்பட்டிருக்கும். இவை ஹெட் (Head) மற்றும் ஃபுட் (Foot) ஸ்பாட்கள் எனப்படுகின்றன. இவை ஆட்டம் துவங்கும் முன் ஆடும் பந்துகளை வைப்பதற்கு. ஹெட் ஸ்பாட்டை மையமாக வைத்து மேஜை மீது ஒரு அரை வட்டமும் வரையப்பட்டிருக்கும்.

பில்லியர்ட்ஸ் ஆட ஒரு சிவப்புப் பந்து ('ஆப்ஜெக்ட்' பந்து), இரு வெள்ளை பந்துகள் (கியூ பந்துகள்) ஒரு கம்பு (Cue) தேவைப்படுகிறது. பந்துகள் பிளாஸ்டிக்கினால் ஆனவை. கம்பானது மேப்பல் (Maple) மரவகையால்

ராகவ்

ஆனவை. பந்துகள் ஒவ்வொன்றும் 6 செ.மீ. விட்டம் கொண்டதாகவும், இவற்றை அடித்து விளையாட உதவும் கம்பானது அதிக அளவாக 145 செ.மீ. நீளமுள்ளதாகவும் இருக்க வேண்டும்.

### ஆடும் முறை :

ஆட்டம் துவங்கும் முன் ஃபுட் ஸ்பாட்டில் ஆப்ஜெக்ட் பந்தை வைத்து முதலில் ஆடுபவர் தன்னுடைய கியூ பந்தை ஹெட் ஸ்பாட்டைச் சுற்றியுள்ள அரை வட்டத்தில் வைத்து அதனால் சிவப்பு பந்தை அடித்து ஆட வேண்டும். இரு கியூ பந்துகளில் ஒன்றில் இரு சிறு கருப்புப் புள்ளிகள் வைக்கப்பட்டிருக்கும். இருவருடைய கியூ பந்துகளையும் வேறுபடுத்திக் காட்டவே இது.

ஒரு வீரர் தம்முடைய கியூ பந்தைக் கொண்டு சிவப்பு பந்தையோ அல்லது அடுத்தவருடைய கியூ பந்தையோ அடித்து அவற்றை 'பாக்கெட்' செய்தாலோ அல்லது தன் பந்தை 'பாக்கெட்' செய்தாலோ அல்லது மற்ற இரு பந்துகளையும் ஒரே தாக்குதலில் அடிப்பதினாலோ (Cannon) அதற்கேற்றவாறு புள்ளிகள் பெறுவார். இவ்வாறான அடிகள் Winning மற்றும் Losing hazards என இரு வகைப்படும். ஒரு வீரர் ஒவ்வொரு முறையும் மேஜைக்கு (தனக்கு வாய்ப்பு வரும் பொழுதுதான்) வந்து ஆடுவார். அது ஒரு விசிட் என்று அழைக்கப்படும். அவர் அந்த 'விசிட்'டில் பெறும் மொத்தப் புள்ளிகள் 'பிரேக் (Break)' எனப்படும்.

(i) Winning hazards : எதிராளியின் பந்தை அடித்து அதை 'பாக்கெட்' செய்தால் 2 புள்ளிகளும் சிவப்புப் பந்தை அடித்து அதை 'பாக்கெட்' செய்தால் 3 புள்ளிகளும் அடிப்பவர்க்குக் கிடைக்கும். முதலில் கூறிய சந்தர்ப்பத்தில் அடுத்தவருடைய பந்து மீண்டும் மேஜையின் மீது எடுத்து வைக்கப்பட மாட்டாது. ஆனால், இரண்டாவது சந்தர்ப்பத்தில் சிவப்புப் பந்தானது மீண்டும் ஃபுட் ஸ்பாட்டில் எடுத்து வைக்கப்படும். இருப்பினும் தொடர்ந்து 5 முறைதான் ஒருவர் சிவப்புப் பந்தை 'பாக்கெட்' செய்யலாம் என்ற விதி உள்ளது.

(ii) Losing hazards : அடுத்தவருடைய வெள்ளைப் பந்தை அடித்தோ அல்லது சிவப்புப் பந்தை அடித்தோ ஒருவர் தன்னுடைய கியூ பந்தையும் 'பாக்கெட்' செய்தால்



படங்கள் நன்றி : SPORTS STAR

அவருக்கு முறையே 2 அல்லது 3 புள்ளிகள் தரப்படும். இரண்டு சந்தர்ப்பங்களிலும் அடிப்பவருடைய பந்தானது மீண்டும் மேஜையின் மீது வைக்கப்பட்டு, ஆடுபவர் அதை அரை வட்டத்தில் வைத்துத் தொடர்ந்து ஆடுவார். ஒரு வீரர் தொடர்ந்து 15 முறைதான் Losing Hazards-ல் புள்ளிகள் பெறலாம் என்ற விதியும் உள்ளது.

(iii) Cannons : தொடர்ந்து 7 முறைதான் ஒரு வீரர் Cannon மூலம் புள்ளிகள் பெறலாம். ஒரு முறை Cannon அடித்தால் 2 புள்ளிகள் உண்டு.

பில்லியர்ட்ஸ் ஆட்டத்தில் தவறுகள் (Fouls) நிகழ்ந்தால் அதற்குப் புள்ளிகள் இழப்பது ஒரு விஸிட் இழப்பது என்பது போன்ற தண்டனைகள் (penalty) உண்டு.

பில்லியர்ட்ஸ் விளையாட்டுப் போட்டிகள் கால அளவிலோ அல்லது புள்ளிகள் அளவிலோ நடத்தப்படுகின்றன. அதாவது ஒரு போட்டிக்கு 2 மணி நேரம் அல்லது 4 மணி நேரம் என்ற கால அளவோ அல்லது 100 புள்ளிகள் அல்லது 150 புள்ளிகள் என்ற புள்ளிகள் அளவோ நிர்ணயிக்கப்பட்டு நடத்தப்படும். இவ் விளையாட்டில் அகில உலக அளவில் நடைபெறும் முக்கியமான போட்டிகள் இரண்டு வகைப்படும்.

1) உலக ப்ரொஃபெஷனல் சாம்பியன் ஷிப்:

இப் போட்டிகள் 1870-லிருந்தே நடத்தப்பட்டு வருகின்றன. இருப்பினும் 1982-லிருந்துதான் வருடத்திற்கு ஒருமுறை என்று ஆடப்பட்டு வருகிறது. சென்ற ஆண்டு வரை நடைபெற்ற 50 போட்டிகளில் 46 முறை இங்கிலாந்து வீரர்கள் வென்றுள்ளனர். இக் கோப்பையை அதிக முறை வென்ற பெருமை இங்கிலாந்தின் 'டாம் நியூமன்' என்பவரைச் சாரும். இவர் ஆறு முறை வெற்றி பெற்றுள்ளார்.

இந்த வருடப் போட்டியில் இடம் பெற்ற 16 வீரர்களில் அறுவர் இந்தியர்கள், இங்கிலாந்திலிருந்து ஒன்பது பேர் மற்றும் ஆஸ்திரேலியர் ஒருவர். இங்கிலாந்தில் உள்ள 'ஷெஃப்பீல்ட்டில்' நடைபெற்ற தகுதிச் சுற்றுப் போட்டிகளில் வெற்றி பெற்று இப் போட்டிக்குத் தகுதி பெற்ற 10 வீரர்களில் ஐவர் இந்தியர்கள். 'கீத் சேட்டீ' உலக நெம்பர் ஒன் ஆகியதால் நேரிடையாகத் தகுதி பெற்றார். இப் போட்டிகள் சென்ற வருடம் டெல்லியில் நடைபெற்ற போது உலக நெம்பர் 'டு' மைக்ரஸல் (இங்கிலாந்து) ராபி ஃபோல்டுவாரியை (ஆஸ்திரேலியா) வென்றார்.

2) உலக அமெச்சூர் சாம்பியன் ஷிப் :

இப் போட்டிகள் 1926-இல் துவங்கி இரு வருடங்களுக்கு ஒருமுறை என்ற வகையில் சென்ற ஆண்டு வரை 27 முறை நடத்தப்பட்டுள்ளன. இந்திய வீரர்களான 'வில்சன் ஜோன்ஸ்', 'மைக்கேல் ஃபெரேரா', 'கீத் சேட்டீ', 'மனோஜ் கோதாரி' ஆகியோர் நம் நாட்டிற்கு பெருமை சேர்த்துள்ளனர். அதாவது 1977-லிருந்து 1991 வரை நடைபெற்ற





"யார் கடிதம் போட்டாலும் அதற்கு உடனே பதில் எழுதி விடுவார் ராஜாஜி. "ஓரிரு நாள் கழித்துப் பதில் எழுதினால் என்ன?" என்று ஒரு நண்பர் கேட்டதற்கு ராஜாஜி கூறிய பதில் : "டெலிபோனில் ஒருவர் கூப்பிட்டால் நாளைக்கு பதில் சொல்கிறேன் என்று தள்ளிப் போடுவோமா? இந்த ஆசாமிக்கு டெலிபோன் வசதி இல்லை. அதனால் கடிதம் எழுதுகிறார். அதற்கு மட்டும் நாளைக்குப் பதில் போட்டால் எப்படி?"

- அ. முஸ்தபா

ஏழு போட்டிகளில் (1989-ல் போட்டிகள் நடத்தப்படவில்லை) ஆறு போட்டிகளில் இந்திய வீரர்களே வெற்றி பெற்றுள்ளனர். இக் கோப்பையை அதிகபட்சமாக நான்கு முறை வென்ற பெருமை இங்கிலாந்தின் ராபர்ட் மார்ஷல் ஐச் சாரும்.

என்னதான் பில்லியர்ட்ஸ் விளையாட்டு நூறு வருட காலமாக வெகுவாக பரவி மிகுந்த ஆர்வத்தோடு விளையாடப்பட்டு வந்தாலும் ஏனோ பெண்கள் இவ் விளையாட்டில் அவ்வளவு ஆர்வம் காட்டாமல் இருந்து வந்துள்ளனர். சமீப காலமாகத்தான் அவர்களும் மற்றவரோடு சேர்ந்து ஆடி வருகின்றனர். அதுவும் மிகக் குறைந்த எண்ணிக்கையில்.

குறைந்தது 91.5 செ.மீ. நீளம் கொண்ட ஒரு கம்பி முனையால் 5.3 செ.மீ விட்டம் கொண்ட கியூ பந்தை அடித்து அது 7 அல்லது 8 அடி ஓடி (இதில் கோண அளவும் உள்ளது), மற்றொரு பந்தைப் பிழையில்லாமல் (அதாவது 1/10 அங்குலத்திற்கு மிகாமல்) அடிப்பதற்கு ஒவ்வொரு பில்லியர்ட்ஸ் வீரரும் கணக்கியல் நிபுணராக் இருந்தால் மட்டும் போதாது. கண் பார்வை துல்லியமானதாகவும், மூளையும் கைகளும் சரியாக இணைந்து செயல்படுகிறவராகவும் இருக்க வேண்டும். அவருக்கு Geometry, Ballistics ஆகியவற்றிலும் சிறந்த தேர்ச்சி இருக்க வேண்டும். பில்லியர்ட்ஸ் ஆட்டத்தை ஆடுவது என்பது, மற்ற ஆட்டங்களைப் போல் எளிதல்ல. ரொம்பக் கடினம் என்பது இப்பொழுது நன்கு தெளிவாகியிருக்குமே! பம்பாயில் நடைபெற்ற 51--ஆவது உலக புரொபெஷனல் பில்லியர்ட்ஸ் சாம்பியன் ஷிப் போட்டியில் கீத் சேட்டீ அருமையாக ஆடி இந்தியாவுக்கு வெற்றி தேடி தந்த பிறகு இந்த ஆட்டத்திற்கு ஒரு புதிய வேகம் பிறந்திருக்கிறது. வருங்காலத்தில் இன்னும் நிறைய கீத் சேட்டீகள் உருவாகி நமக்கு பெருமைசேர்ப்பார்கள்.





# விலங்குகள் கணக்குப்போடுமா?

— ஜி.எஸ்.எஸ்

**ச**ர்க்கஸில் பார்த்திருப்பீர்கள். கரும்பலகையில் மூன்று பிளஸ் இரண்டு என்று எழுதப்பட்டிருக்கும். 'மொத்தம் எவ்வளவு?' என்று கேட்பார் கோமாளி. சரியாக ஐந்து நடவை தன் காலைத் தாளம் போட்டு பார்வையாளர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தும் அந்தக் குதிரை. இப்படிப் பலவித எளிய கணக்குகளுக்குச் சரியான விடையைத் தனது கால்களின் தாளத்தால் உணர்த்தும் சர்க்கஸ் குதிரைகள்.

மேலைநாடுகளில் நடத்தப்படும் சர்க்கஸ்களில் இதே போல் கடல்நாய் கூடக் கணக்குப் போடும். தன் கொம்பை குறிப்பிட்ட நடவைகள் ஆட்டுவதன் மூலம் சரியான விடையை வெளிப்படுத்தும்.


அட, கொஞ்சம் பயிற்சியளித்தால் விலங்குகளுக்கும் கணிதப் பாடம் கலபத்தில் புரிந்து விடும் போலிருக்கிறதே என்று எண்ணத் தோன்றுகிறது இல்லையா? உண்மை அது அல்ல. மேலே குறிப்பிட்ட மிருகங்களுக்கு கணக்குப் போடத் தெரியாது என்பது தான் உண்மை! பின் அவை எப்படி சரியான விடையைக் குறிப்பிடுகின்றன என்கிறீர்களா? அவற்றின் பயிற்சியாளர்களுக்கும், அவைகளுக்கும் இடையே உள்ள அடையாள மொழிதான் அவைகளைப் பற்றி இப்படி நம்மை எண்ண உதவுகிறது! பயிற்சியாளர் தன் வலது கண்ணை ஒருமுறை அடித்தால் ஒரு முறை காலைத் தாளமிட வேண்டும், இரண்டு முறை அடித்தால் இரண்டு முறை தாளமிட வேண்டும் என்பது போல் பயிற்சியாளர் குதிரைக்குப் பயிற்சியளித்திருப்பார். பயிற்சியாளர் கண்ணடிப்பதை நிறுத்தும் வரை குதிரையும் காலால் தாளமடித்துக் கொண்டிருக்கும். சரியான எண்ணிக்கை வந்ததும் பயிற்சியாளர் கண்ணடிப்பதை நிறுத்தி விடுவார். நாம் குதிரையின் கணக்குப் போடும் திறமையைக் கண்டு வாயைப் பிளந்து கொண்டிருப்போம்.



ஆனால் ஒன்று. பல மிருகங்களால் பெரிய அளவிலிருந்து, சிறிய அளவை வேறுபடுத்திப் பார்க்க முடியும். உதாரணமாகக் கொஞ்சம் அதிகமான உணவு ஒரு பக்கமும், கொஞ்சம் குறைவான உணவு ஒரு பக்கமும் வைத்திருந்தால், பெரும்பாலான மிருகங்கள் அதிக உணவையே தேர்ந்தெடுத்து உண்ண ஆரம்பிக்கும். இது பள்ளிக்கே போக ஆரம்பிக்காத சின்னக் குழந்தைகளும்


கூடச் செய்யும் காரியம்தான். ஒரு பெரிய சாக்லேட்டையும், ஒரு சின்னச் சாக்லேட்டையும் காட்டினால் முதலில் பெரிய சாக்லேட்டைத்தான் குழந்தைகள் எடுத்துக் கொள்ளும்!

சமீபத்தில் செய்த ஆராய்ச்சிகளின் படி சில மிருகங்களும், பறவைகளும் உண்மையாக கணக்குப் போடக் கூடும் என்பதை விஞ்ஞானிகள் கண்டறிந்திருக்கிறார்கள். அவர்கள் நடத்திய ஒரு



சோதனையில் ஒரு புறாவுக்கு ஒரு சமயத்தில் ஒரு தானியம் என்று அடுத்தடுத்துக் கொடுத்து வந்தார்கள். ஏழாவது முறையாகக் கொடுக்கப்படும் தானியம் மட்டும் தட்டில் ஒட்ட வைக்கப்பட்டது. இந்தத் தானியத்தை அந்தப் புறாவால் தட்டிலிருந்து எடுக்க முடியவில்லை. ஒவ்வொரு வேளையும் இதே முறை பின்பற்றப்பட்டது. கொஞ்ச நாளில் அந்தப் புறா சரியாக ஏழாவது தானியத்தை மட்டும் கொத்த மறுத்துவிட்டது. அதாவது அதற்கு எண்ணத் தெரிந்திருக்கிறது!

வேறொரு பரிசோதனையில் சிம்பான்ஸிக் குரங்குகளை விட்டு சரியாக



ஐந்து சிறிய புல்லுக் கட்டுகளை எடுத்துத் தருமாறு பயிற்சியளித்தார்கள். அவையும் சரியாக ஐந்து புல்கட்டுகளை எடுத்துக் கொடுத்தன. ஆனால் அதற்கு மேல் அதிக எண்ணிக்கையில் புல்லுக் கட்டுகளை எடுத்துத் தரப் பயிற்சி அளித்த போது அவை தவறு செய்ய ஆரம்பித்தன. அதாவது சிம்பன்ஸி குரங்குகளால் ஐந்து வரையில்தான் குழப்பமில்லாமல் எண்ண முடிகிறது.

இந்த முறையில் மிருகங்களையும் பறவைகளையும் கணக்குப் போட வைத்து வெற்றி கண்டுவிட்டால் நம் பாடு திண்டாட்டம்தான் இல்லையா? 'ஒரு குரங்கும்; காக்கையும் கூடக் கணக்கை சரியாகப் போடும் போது உனக்கு ஏண்டா முடியலே? மரமண்டையா?' என்று குழந்தைகளை அப்பாக்கள் இடிக்கும் நிலை ஏற்பட்டாலும் ஏற்படும். இல்லையா! இதெல்லாம் எப்படி இருந்தாலும் எல்லாவற்றையும் -விட சுவையான ஒரு செய்தி என்ன தெரியுமா? குர்ங்குகளும் நாய்களும் கூட கையாளக்கூடிய அளவில் கம்ப்யூட்டர்களை ஜப்பானில் தயாரிக்க தொடங்கியிருக்கிறார்களாம்.



# சார்.. தபால்!

★ தன் தருநிலை எப்போதுமே மறக்க கூடாது என்பதை நன்கு உணர்த்தியது தங்கம்தான் எனக்கு படக் கதை.

எம். ஜி. இராமச்சந்திரன்,
சங்கமங்கலம்.

★ 'எங்கள் ஊரில் நடந்தது' நகைச்சுவை துணுக்குகளைப் படித்து, ''வெடித்து'' சிரித்தேன். தீபாவளி பட்டாசுகளைப் போல்!

மதுக்கூர் ரமேஷ்,
மதுக்கூர்.

★ மகாத்மா காந்தி மற்றும் நேரு மாமாவின் புகழ் 'பா'மாலை படித்து மிகவும் சந்தோஷப் பட்டேன்.

மதுக்கூர் ரமேஷ்,
மதுக்கூர்.

★ ''நேருவை ஏன் பிடிக்கும்'' கலந்துரையாடலைக் கண்டதும் ஏக்கம்தான் என் மனதில் ஏற்பட்டது. எதுவாக இருந்தாலும் சென்னையில் வசிக்கும் மாணவர்களிடம் மட்டுமே பேட்டி காண்கிறீரே. தபால் மூலமா என்போன்ற ஆவல்மிக்க வாசகரிடம் பேட்டி கண்டு எங்களுடைய பேட்டியையும் வெளியிடலாம் அல்லவா?

அ. முஸ்தபா, தக்கோலம்.

★ குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா பற்றிய கட்டுரையைப் படித்த போது கண்களில் கண்ணீரே வந்து விடும் போலிருந்தது. அந்தப் பரந்த உள்ளம் மறைந்தாலும், அவரது புகழ்மணம் என்றென்றும் மறையாது.

ஜி. ஜி. கிருஷ்ணன், விசலூர் - 1.

★ நீ மட்டும் போ, கதை மிகவும் அருமையாக இருந்தது. நான் இதைப் படித்த பிறகு நானும் என் தம்பியும் ஒற்றுமையாக இருப்போம் என உறுதி எடுத்துக் கொண்டோம்.

ஆர். கே. விஜயலக்ஷ்மி, டி. கமலக்கண்ணன்,
சிறுமுகை.

★ தீபாவளி சிறப்பிதழில் எல்லாப் பகுதியைப் போட்டும், ''பிருந்தாவனக் கதையரங்க''த்தை மறந்தது ஏனோ?

ப. ரா. கணேஷ், சென்னை - 19.

★ ''நவம்பர்'' கோகுலத்தின் அட்டைப் படம் எங்கள் மனத்தில் 'நீங்கா ஒளி'யாகக் கண்முன் இருக்கின்றது.

ப. ராகவன், திருவொற்றியூர்.

★ பதினான்கு கவிதைகளை வெளியிட்டு கவிதைப் பிரியர்களைக் கொண்டாட வைத்து விட்டீர்! பாராட்டுகள்.

தா. சிந்துகுமார், திருவட்டார்.

★ ''தீபாவளி இதழில் சிரிப்பு வெடிகளை அளித்து எங்களைச் சிரிக்க வைத்த 'கோகுலமே' உனக்கு எங்களது பாராட்டு வெடிகள்.''

ஜே. ரபீக், லெட்சுமாங்குடி.

★ நூறு ரூபாய் இரகசியம் படு விறுவிறுப்பாகப் போய்க் கொண்டிருக்கிறது. பரதன் எடுக்கும் ஒவ்வொரு காரியமும் எங்களை அயரவைக்கிறது.

பட்டாபிராமன், கா. மாத்தூர்.

★ ''ஈ கால்களைத் தேய்ப்பது ஏன்?'' 'ஈ'யைப் பற்றிய மேலும் பல விஷயங்களை எங்களுக்கு நன்றாக விளக்கியது! தாய்லாந்தில் கூட தீபாவளி கொண்டாடுவார்களா? ஆச்சர்யமாயிருக்கே?

பி. நூர்தீன், வலங்கைமான்.

★ 'நீதானா?' கதையும் 'அழகு ராஜா நான்தான்' கதையும் இளம் வயதிலேயே மாணவர்களுக்குத் தன்மானமும், தன்னம்பிக்கையும் கொடுக்கும் 'டானிக்' கதைகளாகும்!

ஜெ. நெடுமாறன், குடியாத்தம்.

★ சிவகங்கையிலிருந்து வெளிவரும் ''அனு'' தபால் அட்டை மாத இதழின் முகவரியைத் தெரிவியுங்கள்.

சதாசிவம், பாலக்காடு - 6.

(இதோ : அனு, 'கலைமகள்',
50, பிள்ளையார் கோவில் தெரு,
சிவகங்கை - 623 560)

பரதன் அச்சகத்தில் பரத் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடேட் சார்பாக அச்சிட்டு வெளியிடுபவர் : வி. முரளி.
ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈகாடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 36/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 140/-; விமானத் தபால் : ரூ. 360/-
அரையாண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 18/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 70/-; விமானத் தபால் : ரூ. 180/-



REGISTERED NO. TN MS (C) 281
Registered as Newspaper in Srilanka
வேக எல்லை
நிமிஷத்திற்கு
2 லாக்டோ கிங் !
ஒரு வழிப் பாதை
ஒரே வழி -
லாக்டோ கிங்
தின்பது தான் !
பச்சை சிக்னல்
ஆல் ஓகே. இன்னும்
தின்னலாம்
லாக்டோ கிங் !
அருகே மிட்டாய்க் கடை
வாங்கி வைத்துக்
கொள்ளவும்.
மேடுகள்
ஒவ்வொரு மேட்டிலும்
3 லாக்டோ கிங் தின்னவும் !
அமைதி
'மொறு மொறு'க்க
வேண்டாம்.
மென்றால் போதும்.
பாரீஸ் லாக்டோ கிங் பாதையைப் பின்பற்றவும்
குன்றாத சுவை: எவ்வளவு தின்றாலும் ஆவல் தீராது !
Lacto King
HTA 8253




வானத்தில் விரட்டுச்
செல்லுங்கள், உங்கள்
மேகி ஸ்கை
ப்ளேஸரில்!



ஒன்று சேர்த்திடுங்கள்
மேகி ஜிக்-ஸா புதிர்




திருடனைப் பிடியுங்கள் மேகி
ஹூ-டன்-இட் மிஸ்டிரி
விளையாட்டில்



கடல்-வானப்பயணத்தை பூர்த்தி
செய்வீர் மேகி
ஏஸ் அட்வென்ச்சரர்
கேமில்!

# உல்லாசம் பெறுவீர், வியப்பூட்டும் துணிகர விளையாட்டுகளில்!

இலவசப் பரிசுகள் – மேகி கிளப் உறுப்பினர்களுக்கு!

வஞ்சகமான எதிரிகளை
சாதுரியமாக முறியடியுங்கள்.
மேகி ரெய்டர்ஸ் ஆஃப்
தி ரெட் ஸ்டார்
விளையாட்டில்!






ஹல்லோ! மேகி கிளப்பில் சேருங்கள்: மேகியின்
துணிகர உலகிற்குள் செல்லுங்கள்.
ஐந்து மேகி நூடுல்ஸ் காலி பேக்குகளிலிருந்து அதன்
முன்பக்கத்தில் உள்ள இந்த முத்திரையை வெட்டி
எடுத்து எங்களுக்கு அனுப்புங்கள்-உங்களுக்குப் பிடித்த
இலவசப் பரிசைப் பெற, ஆறு முதல் எட்டு
வாரங்களுக்குள் மேகி கிளப்பில் இருந்து
குதூகலமளிக்கும் பரிசு உங்களுக்கு அனுப்பி
வைக்கப்படும்.

மறவாதீர்! உங்களுக்கு விருப்பமானப் பரிசைக்
குறிப்பிட்டு எழுதும்போது, உங்கள் பெயர், முகவரி,
பிறந்த தேதி ஆகியவற்றையும் எழுதுங்கள். ஏற்கனவே
நீங்கள் மேகி கிளப் உறுப்பினராக இருந்தால்,
உறுப்பினர் எண்ணையும் எழுதுங்கள். இதுவரை
உறுப்பினராக ஆகவில்லை என்றால் இப்போது
வருகிறது வாய்ப்பு! மேலே உள்ள விவரங்களை
எழுதும்போது, உறுப்பினராக விரும்புவதையும்
தெரிவியுங்கள். இலவசப் பரிசுடன், இலவச மேகி
கிளப் உறுப்பினர் அட்டையையும் உங்களுக்கு
அனுப்புவோம்.

இலவசம்! மேகி "வேர்ல்ட் ஆஃப் அனிமல்ஸ்" புதிர்! ஒவ்வொரு 2 இலவசப் பரிசுகளுக்கும் உங்களுக்கு ஒரு மேகி "வேர்ல்ட் ஆஃப் அனிமல்ஸ்" புதிர் இலவசமாகக் கிடைக்கும்.




எங்கள் முகவரி :

**MAGGI CLUB**

P.O. Box 5788 New Delhi-110 055

மேலும் ஒரு சலுகை: இதுவரை மேகி போட்ட ஹவுஸைப் பெற்றுக்கொள்ளவில்லை என்றால், இப்போதே பெற்றுக் கொள்ளுங்கள்.

HTA 7778TAM